பக்கங்கள்: பதினெட்டு

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 21 சனிக்கிழமை (05-07-1997) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம் 5

# இந்தோனேஷிய மாலுமிகள் இருவரும் நேற்று விடுதலை!

## செஞ். அதிகாரிகளிடம் புலிகள் ஒப்படைப்பு

வவுனியா, ஜூலை 5

**மன்னார் பேசாலைக் கடற்பகுதியில் கடந்த செவ்வாயன்று தீயிட்டுக் கொளுத்தப்பட்ட "மிஷன்" கப்பலில் இருந்து தாம் பிடித்துச் சென்ற இரு இந்தோனேஷிய மாலுமிகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை 10 மணியளவில் மாங்குளத்தில் வைத்து விடுவித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.**

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் உத்தரவின் பேரில் மனிதாபிமான அடிப்படையில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது,

இந்தோனேஷியப் பிரஜைகளான கப்பலின் கப்டன் நாங்ஹாடி (வயது 40) கப்பலின் பிரதம பொறியியலாளர் இமாம் வக்கூதி(வயது44) ஆகிய இருவருமே நேற்று விடுவிக்கப்பட்டனர்.

மல்லாவியில் தமது அலுவலகத்தைக் கொண்டுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரியான ஜோர்ஜ் போர், விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச்சேர்ந்த சங்கர் என்பவரிடம் இருந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எஞ்சிய 7 சிப்பந்திகளைச் சந்திக்க செஞ்.குழு முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 5

தீயிட்டுக் கொளுத்தப்பட்ட 'மிஷன்' கப்பலில் இருந்த — இரு இந்தோனேஷிய மாலுமிகளையும் தவிர்ந்த — ஏனைய ஏழு கப்பல் சிப்பந்திகளையும் நேரில் பார்வையிடுவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் முயன்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். குடாநாட்டில்

## காணாமற்போனோர் விடயம்குறித்து விசாரிக்க இராணுவ பொலீஸ் குழு!

### நியமித்தார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ். குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகி காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்த விசேட இராணுவ, பொலீஸ் குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார் என அறியவருகின்றது.

காணாமற் போனவர்கள் தொடர்பாக நேரடியாக சம்பந்தப்பட்ட முறைப்பாட்டுக்காரர்களிடம் சென்று விசா

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புதுக்குடியிருப்பில் நேற்று மனித சங்கிலிப் போராட்டம்

## உணவு, மருந்து அனுப்பக் கோரி

வவுனியா, ஜூலை 5

**இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேசத்துக்கு உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்பக் கோரி புதுக்குடியிருப்பில் நேற்று மனித சங்கிலிப் போராட்டமும் ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றன.**

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் புதுக்குடியிருப்புச் சந்தியில் இருந்து முல்லைத்தீவுச் செயலகம் வரை கைகோர்த்துச் சங்கிலியாக நின்று தமது கோரிக்கையை ஒற்றுமையுடன் வெளிப்படுத்தினர்.

இந்தப் போராட்டத்தின் முடிவில் — முல்லைத்தீவுச் செயலகத்தில் — நடந்த பொதுக் கூட்டத்தில் பொது மக்கள் சார்பில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ, சிறிலும், தொழிற்சங்கங்களின் சார்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவமும் உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மருந்து இல்லை

வவுனியா, ஜூலை 5

வன்னியில் தொற்று நோய்கள் தீவிரமாகப் பரவி வருவதாகவும் —

போதிய மருத்துவ வசதிகள் இன்றி மக்கள் பெரும் இன்னல்களை அனுபவிப்பதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டும் மடு ஆஸ்பத்திரியில் மலேரியாவால் பீடிக்கப்பட்ட மூவர் உயிரிழந்தனர்.

போதிய மருத்துவ வசதிகள் இன்றி மேலும் பலர் நோயினால் அல்லற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-164-3-)

## கப்பல் சேவை ரத்து

காங்கேசன் துறையில் இருந்து இன்று திருகோணமலைக்கு இடம் பெறவிருந்த 'சஜிந்த' கப்பல்சேவை திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்று மாலை தெரிவித்தது.

இக் கப்பல் நேற்று திருகோணமலையிலி

(6ஆம் பக்கம் பார்க்க)

### படகு மூலம் சட்டவிரோதமாக

## ஆஸ்திரேலியா சென்ற அனைவரும் தமிழர்கள்!

ஆஸ்திரேலியாவின் மேற்குக் கரைப் பகுதியைப் படகு மூலம் சென்றடைந்த 15 இலங்கையர்களும் தமிழர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் தற்போது தடுப்பு முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

17 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட இவர்கள் அனைவரும் ஆண்கள் ஆவர்.

படகு ஒன்றின் மூலம் ஆஸ்திரேலியாவின் மேற்குக் கரையோரம் வந்து இறங்கிய இவர்கள் மூன்று நாள்களாக அநாதரவாக அலைந்து திரிந்தனர் என்றும்—

பின்னர் தற்செயலாக இவர்களைக் கண்ட கார் சாரதி ஒருவர் அவர்கள் அனைவரையும் நேற்று முன் தினம் எக்ஸ்மோர் என்ற நகரத்துக்கு கொண்டுபோய்ச் சேர்த்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் பிரவேசித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் தற்போது போர்ட் ஹொட்லன்ட் என்னும்இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நேற்று ஆஸ்திரேலிய தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டனர்.

இலங்கையில் இருந்து தமிழர்கள் சட்டவிரோதமாக படகு மூலம் ஆஸ்திரேலியா சென்றடைந்திருப்பது இதுவே முதல் முறையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3-21)

## நெல்லியடியில் 2 படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 5

நெல்லியடி வதிரி வீதி இலங்கை வங்கிக்கு அண்மையில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் இரு இராணுவத்தினர் உயிரிழந்ததாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவித்தன.

நேற்றுக் காலை 6 மணிக்கு வீதியில் இராணுவத்தினர் ரோந்து சென்ற சமயமே இக் குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

வீதியோரத்தில் புதைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் தொடர்ச்சியாகக் கேட்டவண்ண மிருந்தன.

## 86 கரும்புலிகள் பயிற்சி முடித்தனர்

கொழும்பு, ஜூலை 5

எண்பத்தாறு கரும்புலிகள் தமது பயிற்சிகளை முடித்துக் கொண்டு விடுதலைப் புலிகளின் தாக்குதல் படையணியில் இணைந்துள்ளதாக வவுனியா பாதுகாப்பு வட்டாரச் செய்திகளை ஆதாரம் காட்டி 'லங்காதீப' சிங்கள நாளிதழ் நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தது.

## கரும்புலி தினத்தை ஒட்டி பிரபா இன்று செய்தி

மட்டக்களப்பு, ஜூலை 5

கரும்புலிகள் தினத்தை ஒட்டி இன்று விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் விசேட செய்தி ஒன்றை விடுப்பார் என செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே நேரம் — கிழக்கு மாகாணத்தில் அரசடித்தீவு, பெண்டுகள்சேனை, வாகரை, கரடியனாறு பகுதிகளில் கரும்புலிகள் தினத்தையொட்டி விசேட வைபவங்களை விடுதலைப் புலிகள் ஏற்பாடு செய்துள்ளனர். இந்த வைபவங்களில் புலிகளின் அமைப்பாளர்கள் உரையாற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம்—

வன்னிப் பகுதிக்கான கரும்புலித்தின நிகழ்வு இன்று ஸ்கந்தபுரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

கரும் புலிகள் தினத்தை ஒட்டி இன்றும் நாளையும் வடக்கு - கிழக்கு மற்றும் கொழும்புப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

முப்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

(உ-21-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பருத்தித்துறை, தும்பளை வீதியில் (4 ஆம் குறுக்குத் தெரு சந்தியில்) சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. விஸ்தீரணம் நிலப்பரப்பு 3, குளி 16, தொடர்பு: சி. அழகையா, தும்பளை வீதி, பருத்தித்துறை, [48118]

யாழ்ப்பாணம் கந்தர் மடம் பழம் வீதியில் இரண்டு பரப்புடன் வீடு வளவு உடனயடிாக விற்பனைக்கு உண்டு. பல்கலைக்கழகத்திற்கு மிகவும் அருகில் நல்ல சுற்றாடல். தொடர்பு: சத்தியபாலன், 73, பழம் வீதி, கந்தர்மடம். [48168]

தரமான புதிய மிருதங்கம், தபேலா, டோல்கீ என்பன விற்பனைக்குண்டு. பழைய வாத்தியங்கள் சிறந்த முறையில் சீர்செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: க. இராசநாயகம், 82/16, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். [48197]

### சீயாக்காய்ப் பவுடர்

காவேரி சீயாக்காய்ப்பவுடர் கருசலாங்கண்ணி உட்பட 6 வகை இயற்கைப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. பேன், சொடுகு, அழுக்கு இல்லாமல் செய்வது. சீயாக்காய்ப்பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய்ப்பவுடர் என்று கேட்டு வாங்கிப் பாவிக்கவும். [48084]

### 'மரம்'

சர்க்கரை வேம்பு, வேம்பு, பலா, கரிசலாங்கண்ணி, பொன்னாவரசு, அகத்தி, யோகாசன படம் 'மில்க் வைற்' நீல சோப்/ சலவைத் தூள் வெற்றுறை 10 அல்லது, ரூபா 10/- ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ரூபா 20/- ''மில்க்வைற்''. [சி/1064]

### வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளுடைய கடை பஸ் நிலையத்திற்கும், ஆஸ்பத்திரிக்கும் அண்மையில் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கொடுக்கப்படும், தொடர்பு: இல. 36, சோமசுந்தரம் அவெனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [48195]

### இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 05 'யுனெஸ்கோ' ஆதரவுடன் நடைபெறவிருக்கும் பாடசாலையை விட்டு விலகியோருக்கான இலவச ஆங்கில வகுப்புகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு திருநெல்வேலி றோ.க. த.க. பாடசாலையில் ஆரம்பமாகவுள்ளன. (ஐ)


## போட்டோஸ்ரட்

உங்கள் முக்கிய ஆவணங்களை தெளிவாகவும், விரைவாகவும் உங்கள் தேவைக்கு ஏற்ற அளவுகளில் போட்டோஸ்ரட் செய்து கொள்வதற்கும், அடையாள அட்டை உட்பட அனைத்து ஆவணங்களையும் லமினேசன் செய்து கொள்வதற்கும்.

**சித்ராலயா**

**172, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

குறிப்பு;- தவிர்க்கமுடியாத காரணத்தால் எமது புகைப்பட சேவை உடன் ஆரம்பமாகவில்லை என்பதனையும், மீண்டும் ஆரம்பமாகும் பொழுது அறியத்தருவோம் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை

(48138)


## கண்ணீர் அஞ்சலி

**காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னை நாள் நெறியாளர் குழ உறுப்பினரும் சமூக சேவையாளருமான**

**முருகேசு கிருஷ்ணபிள்ளை**

அவர்கள் 02-07-97 இல் சிவபதம் எய்தியமை குறித்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா சாந்தி அடையவும் எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரேஸ்வரப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

**பணிப்பாளர், பணியாளர்கள்**
**காரைநகர் ப. நோ. கூ.. சங்கம்.**

காரைநகர். (48192)

## 30 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்! 06 — 01 — 1915



மறைவு: 07 — 06 — 1997

**அமரர் பண்டிதர் கணபதிப்பிள்ளை**
**(கனகசபை)**
(இளைப்பாறிய ஆசிரியர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

அன்னாரின் இல்லத்தில் 06-07-97 ஞாயிற்றுக்கிழமை காலை நிகழும் அந்தியேட்டிக்கிரியையிலும், அதனைத் தொடர்ந்து மதியம் நடைபெறும் மதியபோசனத்திலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்**

கன்பொல்லை வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(சி-1071)


## நிர்வாக மாற்றம் பற்றிய அறிவித்தல்

**யாழ். நகரில் தனது முன்னைய நிர்வாகத்தின் கீழ்**
**05-07-97 சனிக்கிழமை தொடக்கம்**
**மீண்டும் தனது சேவையைத் தொடர்கிறாள்**

**நியூ லலிதா!**

உங்களுக்குத் தேவையான நகைத் தெரிவுகளுக்கு யாழ். நகரிலோ அல்லது கொழும்பிலோ நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

**நியூ லலிதா ஜுவல்லர்ஸ்**

**170, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
போன் - 24846

**165, செட்டியார் தெரு, கொழும்பு - 11.**
போன் - 332948

குறிப்பு:- நியூலலிதா ஸ்தாபனத்திற்கு யாழ். நகரில் வேறுகிளைகள் எதுவுமில்லை. [நகை வேலை செய்பவர்களுக்கு அறை... ஒழுங்கு செய்து தரப்படும். யாழ். முகவரியில் நேரில் ...]

(48149)



போட்டோஸ்ரட் **PHOTOSTAT** லமினேஷன் **LAMINATION**

முக்கிய ஆவணங்கள் தெளிவாகவும் விரைவாகவும் போட்டோ பிரதிகள் பெற வேண்டுமா?
முக்கிய ஆவணங்கள், அடையாள அட்டைகள் பாதுகாப்புக் கவர் போடவேண்டுமா?
நீங்கள் நாடவேண்டிய இடம் உங்களுக்கு அண்மையிலுள்ளது

**KONICA**
**கொணிக்கா**

(லியொட் வைத்தியசாலை அருகாமை)
**கே. கே. எஸ். வீதி, இணுவில்.**

(48204)


## கேள்வி அறிவித்தல்

### இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் உரும்பிராய்

### வழங்கலும் - விநியோகமும் - 1997

எமது உரும்பிராயிலுள்ள கொங்கிறீற் நிர்மாணப் பகுதிக்குக் கீழ்க்காணும் பொருள்களைப் பகுதிகளாக வழங்குவதற்கும்விநியோகிப்பதற்கும் கூறுவிலைகள் அடங்கிய முத்திரையிடப்பட்ட கேள்விகள் 22-07-1997 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை எமது காரியாலயத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1. நாகர் கோயில் மண் (பெருக்கன்) | — 30 கியூப். |
| 2. கண்டாவளை மண் | — 30 கியூப். |
| 3. உடைத்த கல் $\frac{1}{4}$'' | — 10 கியூப். |
| 4. உடைத்த கல் $\frac{3}{4}$'' | — 50 கியூப். |
| 5. முறுக்குக் கம்பி 10 மி. மீ. | — 09 மெ. தொன் |
| 6. முறுக்குக் கம்பி 12 மி மீ. | — 22 மெ. தொன் |
| 7. முறுக்குக் கம்பி 16 மி. மீ. | — 30 மெ. தொன் |
| 8. முறுக்குக் கம்பி 20 மி. மீ. | — 40 மெ. தொன் |
| 9. M. S. கம்பி 6 மி. மீ. | — 25 மெ. தொன் |

கேள்வியுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ. 100/- இல. 65, கன்னாதிட்டி வீதியிலுள்ள கணக்காளரிடம் செலுத்தி உரிய பற்றுச் சீட்டைப் பெற்று அதன் நிழற் பிரதி இணைக்கப்பட வேண்டும். நிழற் பிரதி இணைக்கப்படாத கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**பொறியியலாளர்,**
**கொங்கிறீற் பகுதி.**

வேம்பன் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(சி/1046)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வன் கணபதிப்பிள்ளை பிரதீபன்**

மலர்வு: 03-05-1981 உதிர்வு: 08-04-1997

(சிரேஷ்ட மாணவ தலைவன், யா/ ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்)

பள்ளியிலே நம் மாணவர்க்கு தலைவனாக பணிபுரிந்து
நம்முள்ளே உயர்ந்து நின்ற பிரதீபா - எம்
பள்ளியிலே விளையாட்டில் வல்லவனாய்
வீறுநடைபோட்டு
கல்வியிலும் சிறந்துமே எமைக்கவர்ந்தாய்
எம் எண்ணத்தில் நிறைந்தே நீ நின்றாய் - உனை
எத்தனை நாள் சென்றாலும் காண்போமா? இனி
எம் கண்ணீர்ப் பூக்களினால் அஞ்சலியை
செய்கின்றோம்.
விண்ணவரின் மத்தியில் நீ விண் மீனாய் இருப்பதற்கு

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்**

[47306]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வன்னி நடவடிக்கையை திசை திருப்ப
# கரும்புலி தினத்தை ஒட்டித் தாக்குதல்?

இன்று ஜூலை 5ஆம் திகதி. கரும்புலிகள் தினம். தமிழீழ விடுதலைப்புலிகளின் முதலாவது கரும்புலியான கப்டன் மில்லர் களப்பலியாகி இன்றுடன் பத்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

1987 நடுப்பகுதியில் வடமராட்சி மீது ஸ்ரீலங்காப் படைகள் மேற்கொண்ட— அப்போதைய காலகட்டத்தில் மிகப்பெரிய நடவடிக்கை எனக் கருதப்பட்ட— 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கையை திசைதிருப்பும் ஒரு தாக்குதலாக கரும்புலி மில்லரின் 'பாய்ச்சல்' இடம்பெற்றது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் முகாமிட்டிருந்த படையினர் மீது ட்ரக் நிறைய வெடிப்பொருள்களுடன் சென்று மோதி, தற்கொலைத் தாக்குதலுக்கு புதிய பரிமாணத்தை வடிவமைத்துக் கொடுத்தார் மில்லர்.

இத்தாக்குதல் நடந்து பத்து வருடங்கள் கழிந்த பின்னரும் —அத்தாக்குதலின் கோரத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் முன்னால் இன்னும் எஞ்சிக் கிடக்கும் கட்டடச் சிதைவுகள் மூலம் ஓரளவு உணரலாம்.

கரும்புலிகளின் வரலாறு இன்றுடன் பத்து ஆண்டுகளைக் கடக்கின்றது.

இக்காலகட்டத்தில் பலடசின் கணக்கிலான கரும்புலிகள் களப்பலியாகி விட்டார்கள். அவர்களில் பெரும்பாலானோரின் தாக்குதல்களுக்கு உரிமைகோரி, அவர்களுக்கு இராணுவ பதவி நிலை தரங்களும் அறிவிக்கப்பட்டு, அஞ்சலியும்செலுத்தப்படுகின்றது.

ஆனாலும்—

சில முக்கிய தாக்குதல்களை நடத்திய—வெற்றிகரமாகத் தமது பணியை நிறைவேற்றிய — இலக்கைக் குறிவைத்து அழித்த — சில கரும்புலிகளின் பெயர்களை, அவர்களின் விவரங்களை, இராணுவத் தர நிலைகளை புலிகள் இன்னும் வெளியிடவில்லை என்று கருதப்படுகின்றது.

அரசியல் — இராணுவச் சூழ்நிலைகள், தாக்குதலுக்கு இலக்கான இலக்கு ஆகியவற்றின் முக்கியத்துவம் கருதி புலிகள் அத்தாக்குதலுக்கு உரிமை கோரவில்லை என்றும் கூறப்படுகின்றது.

### திசைதிருப்பும் தாக்குதல் நடக்குமா?

பத்து வருடங்களுக்கு முன்னர்—அப்போதைய பாரிய இராணுவ நடவடிக்கையை —திசை திருப்பிய கரும் புலித் தாக்குதல் போன்று—

இப்போது வன்னியில் நடைபெறும்—இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னான மிகப்பெரிய இராணுவ நடவடிக்கையான — 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையைத் திசைதிருப்பும் கரும்புலித் தாக்குதல்களை, பத்தாவது ஆண்டு கரும்புலித் தினத்தில் புலிகள் மேற்கொள்ளக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

அத்தகைய தாக்குதல்கள் ஏதும் இடம் பெற்றால் அவற்றை எதிர்கொள்ளக் கூடிய உஷார் நிலையில் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்புக்கள் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

அதேசமயம் கொழும்பில் உள்ள கேந்திர நிலையங்கள் மற்றும் வடக்கு—கிழக்கில் உள்ள படைநிலைகள் போன்றவற்றிலும் கரும்புலி தினத்தை ஒட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படுகின்றன.

### வன்னி நடவடிக்கை

வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கிய 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 55 நாள்கள் ஆகிவிட்டன.

இதுவரை சுமார் 550படையினர் உயிரிழந்திருக்கின்றார்கள்; ஆயிரத்து இருநூறு துருப்புக்கள் படுகாயமுற்றிருக்கின்றன.

அதாவது யுத்தமுனையில் இருந்து சுமார் ஆயிரத்து



மில்லர்

ஐந்நூறுக்கும் அதிக சண்டைத் துருப்புக்களை அரச படை இழந்திருக்கின்றது.

ஏற்கனவே ஆள்பற்றாக் குறையுடன் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் 53 ஆவது, 55 ஆவது படையணிகளுக்கு (டிவிஷன்களுக்கு) இந்த இழப்புப் பெரும் பின்னடைவைத் தந்துள்ளது என்றால் அது உண்மையே,

அதாவது இரண்டு முழு நிறைவான பட்டாலியன்களுக்கு அல்லது ஒரு பிரிக்




கேட்டுக்குச் சமமான துருப்புக்களை 'வெற்றி உறுதி' படை நடவடிக்கைகளின் போதுஇதுவரை அரசுப்படைகள்இழந்துவிட்டிருக்கின்றன.

துருப்புகள்இழப்பு, துருப்புக்களின் மனோபலம் பாதிப்பு, பல நூறு கோடி ரூபா ஆயுத தளபாட இழப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பார்த்தால் இந்த நடவடிக்கையின் விளைவு அரசுத் தரப்புக்கு பெரும் பாதிப்பானது என்பது கண்கூடு.

இந்த 55 நாள் நடவடிக்கையின் மூலம் வவுனியாவுக்கு வடக்கே சுமார் இருபது கிலோ மீற்றர் தூரம் வரை அரசுப்படைகள் முன்னேறியிருக்கின்றன.

### புளியங்குளத்தை படையினர் பிடித்தனர்

அரசுப் படைகள் புளியங்குளத்தைப் பிடித்துவிட்டன என்று கடந்த வாரத்தில் அரசுடன் தொடர்புடைய செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருந்த போதிலும் — இன்னும் படைகள் புளியங்குளத்தை எட்டவில்லை என்றே விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன,

புளியங்குளம் நகரப் பகுதியின் வெளி எல்லைப் புறத்துக்குச் சற்றுத் தொலைவு வரையே படைகள் முன்னேறியிருக்கின்றன.

இதுவரை மூன்று கடங்களில் நடைபெற்ற 'வெற்றி உறுதி' நடவடிக்கை கடந்த ஒரு வார காலமாக இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது.

தாண்டிக்குளம் மற்றும் பெரியமடுப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடத்திய இருபெரும் அழித்தொழிப்பு அல்லது ஊடறுப்புத் தாக்குதல்களே அரசுப் படைகளின் இந்தப் பின்னடைவு நிலைக்கு முக்கிய காரணமாகும்.

புலிகளின் தாண்டிக்குளம் ஊடறுப்புத் தாக்குதல் குறித்து நேரத்துடன் உளவுத் தகவல் கிடைத்திருந்த போதிலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அது தொடர்பாக உஷார் நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டார்கள் என்று கடந்த வாரம் 'சமர்க்களம்' பகுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

அதே போன்று பெரிய மடுவில் நடந்த இரண்டாவது ஊடறுப்புத் தாக்குதல் குறித்தும் நேரத்துடன் உளவு எச்சரிக்கைத் தகவல்கள் கிடைத்ததாகவும் —

ஆனால் இம்முறையும் படை அதிகாரிகள் 'கோட்டை' விட்டுவிட்டதாகவும் —

சில செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு உளவுத் தகவல்கள், எச்சரிக்கைகள் உதாசீனம் செய்யப்படுவதும் —

அதனால் பேரிழப்பு ஏற்படுவதும் —

உயர் இராணுவ வட்டாரங்களைச் சீற்றமடைய வைத்திருப்பதாகத் தெரிகின்றது.

தாண்டிக்குளத்தில் இடம் பெற்ற முதலாவது ஊடறுப்புத் தாக்குதல் பற்றிய எச்சரிக்கை உதாசீனம் செய்யப்பட்டது குறித்து விசாரணை நடத்துவதற்கு விசேட குழு ஒன்றை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த ஏற்கனவே நியமித்துள்ளார்.

பெரியமடு ஊடறுப்புத் தாக்குதல் குறித்து கிடைத்த எச்சரிக்கைத் தகவல் உதாசீனம் செய்யப்பட்டது குறித்தும் முழு விசாரணை நடத்தி, தவறிழைத்தவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க இராணுவத் தளபதி விரும்புவதாகக் கூட கூறப்படுகின்றது.ஆனால்யாரிடம் சென்று விசாரணை நடத்துவது என்பது தான் இப்போது உள்ள சிக்கலாகும்.

புலிகளின் ஊடறுப்புத் தாக்குதல் நடந்த சமயம் அப்பகுதிக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ உயரதிகாரி தாக்குதலில் உயிரிழந்து விட்டதாகக்கூறப்படுகின்றது. லெப்டினன்ட் கேணல் தரத்தைச் சேர்ந்த அந்த அதிகாரிக்கு மரணத்தின் பின் கேணல் பதவி நிலை வழங்கப்பட்டுள்ளது.

அவர் உயிரிழந்து விட்டதால், இனி யாரிடம் சென்று விசாரணை நடத்துவது என்பதுதான் இப்போதுள்ள சிக்கலாகும்.

பெரிய மடு ஊடறுப்புத் தாக்குதல் குறித்துஏற்கனவே எச்சரிக்கை உளவுத்தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன என்பது உண்மையானால் —

அந்தத்தகவலை உதாசீனம் செய்ததற்காக சம்பந்தப்பட்ட அதிகாரியே தனது உயிரை விலையாகக் கொடுக்க வேண்டியஅவசியம் நேர்ந்து விட்டது என்பது தான் பரிதாபமாகும்.

★ ★ ★

### சுதந்திரப் பொன்விழா

இலங்கை சுதந்திரம் பெற்று அடுத்த வருடம்



மண்டேலா

பெப்ரவரி மாதத்துடன் ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அதாவது அடுத்த வருடம் இலங்கைக்கு 'சுதந்திரப் பொன்விழா, ஆண்டு.

சுதந்திரத்துக்குப் பின் மிக மோசமான உள்நாட்டு யுத்த நிலையில் சுதந்திரப் பொன்விழா ஆண்டை இலங்கை எதிர்கொள்ளப் போகின்றது.

ஒருபுறம் சமாதானத்துக்கான யுத்தம் என்கிறது அரசு.

மறுபுறம் தமிழர்களின் விடுதலைக்கான போராட்டம் என்கின்றது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்.

ஆனால் மக்களுக்கோ சுதந்திரம் கிடைக்கவில்லை. நாடு சுதந்திரமடைந்து ஐம்பது ஆண்டுகள் நிறையும் தறுவாயிலும் சுதந்திரம் கிலோ என்னவிலை என்று கேட்கும் நிலையில்தான் மக்கள் இருக்கின்றார்கள்.

இதற்குள் பொன்விழா சுதந்திர தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாட கொழும்பில் ஏற்பாடுகள் நடக்கின்றன.

தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, இங்கிலாந்தின் எலிஸெபத் மகாராணி ஆகியோரை சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டங்களுக்கு அழைப்பது என முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

சுதந்திரப் பொன்விழாவுக்கு பிரிட்டிஷ் அரசியை அழைப்பது பொருத்தமானதே.

தனித்தனியாகப் பிரிந்திருந்த தமிழர் — சிங்களவர்களின் தாயகங்களை தமது ஆட்சி நலனுக்காக ஒன்றாக்கியவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தான். இன்று நாட்டைக் கலக்கி வரும் இனப்போருக்கு வித்திட்டது சுதந்திரத்துக்குப் பின்னான ஆட்சி அதிகாரத்தில் தமிழர்களுக்கு உரிய உரிமை அவர்களுக்கு வழங்கப்படாததே ஆகும்.

இரு இன மக்களினதும் தாயகங்களை ஆட்சி நலனுக்காக ஒன்றிணைத்தபிரிட்டிஷ்காரர்கள், தமிழரும் சிங்களவர்களும் தங்கள் தாயகப் பிரச்சினைகள் தொடர்பாக சுமுகமான நடைமுறைகளைக் கடைப்பிடிக்கக் கூடிய ஒரு திட்டத்தை முன்வைக்காமலேயே — தமது ஆட்சியைக் கைவிட்டு — நடுவில் போனார்கள். அதன் விளைவையே இன்று பெரும் அழிவைத் தரும் இனப்போராக நாடு அனுபவித்துக்கொண்டிருக்கின்றது.

எனவே தாம் வழங்கிய சுதந்திரத்தின் 'சீத்துவத்தை' பிரிட்டிஷ் மகாராணி இங்கு நேரில் வந்து — அதுவும் சுதந்திரப் பொன்விழா ஆண்டில் நேரில் வந்து— பார்ப்பது முறையானதே.

ஆனால் இந் நிகழ்ச்சிக்கு இலங்கையிலிருந்து கிடைக்கக் கூடிய அழைப்பை தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்ஸன் மண்டேலா ஏற்றுக்கொள்வாரா? — என்பது சந்தேகத்துக்கு இடமான பதிலைத் தரும் கேள்வியே.

ஒடுக்கப்பட்ட கறுப்பு இன மக்களின் விடுதலைக்காக ஓயாது போரிட்டவர் மண்டேலா. அதற்காக இருபத்தைந்து வருடங்களுக்கும் கூடிய காலம் இன ஒடுக்குமுறையாளர்களின் கொடுஞ்சிறையில் வாழ்நாளைக் கழித்தார்.

அத்தகைய ஒரு தலைவர், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாத — இனப் பிரச்சினைக்காகக் கொடும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற — ஒரு நாட்டுக்கு வருவாரா? அதுவும் 'சுதந்திரப் பொன்விழா' என்ற பெயரில் நடக்கும் கோலாகல சுதந்திர (?) விழாவில் கலந்து கொள்ள வருவாரா? காலம் தான் பதில்சொல்ல வேண்டும்.

★ ★ ★

பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த 'மிஷன்' என்ற — தனியாருக்குச் சொந்தமான — கப்பல் இவ்வாரம் பேசாலைக்கு அருகே தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

கப்பலில் இருந்த இரு இந்தோனேசியர்கள், ஐந்து சிங்களவர்கள், ஒரு முஸ்லிம், ஒரு தமிழர் ஆகியோர் கடத்தப்பட்டிருக்கின்றனர். அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் மேற்கொள்ளப்பட்டது. 2இந்தோனேசியரும் விடுவிக்கப்பட்டனர்.

**பாசுபதன்**

கப்பல் தீயிடப்பட்டதும் அது புலிகளின் வேலை என அரசுத் தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டது.

ஆனால் புலிகள் தரப்பிலிருந்து தெளிவான பதில் வரவில்லை. கப்பல் தீயிடப்பட்டதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகளின் சர்வதேச அலுவலகம் மறுத்தது என்ற சாரப்பட செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டதோடு சரி.

என்றாலும் இந்தச் சம்பவத்துக்குப் புலிகளே பின்னணி என்று கூறும் படை வட்டாரங்கள், அந்த வேலையைச் செய்வதற்கு புலிகளுக்கு சில காரணங்கள் இருந்திருக்கக் கூடும் என ஊகங்களையும் வெளியிடுகின்றது.

★ பயணிகள் கப்பலைத் தாக்குதல் மூலம் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் கப்பலுக்கு ரோந்துப் பாதுகாப்பை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை கடற்படையினருக்கு ஏற்படுத்தலாம். இதனால் ஏற்கனவே ஆள் மற்றும் கலங்களின் பற்றாக்குறையை எதிர்நோக்கும் கடற்படைக்கு மேலும் நெருக்கடி ஏற்படும். கடற்படையின் கவனம் மேலும் சிதறும். அதனைப் பயன்படுத்தி பயணிகள் கப்ப

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர்த் தேர்தல் வருமா?

## உள்ளும் புறமும்

குறுமுனி

தற்போதுள்ள அரசியல் நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்காக நாடாளுமன்றத்தைக் கலைத்து திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு ஜனாதிபதி உத்தரவிடுவாரா?,

தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் இவ்வாரம் பரபரப்பை ஏற்படுத்திய கேள்வி இதுதான்.

திடீர்ப் பொதுத் தேர்தல் நடக்கலாம் என்ற ஊகத்தைக் கிளப்பும் செய்திகளை சிங்களப் பத்திரிகைகள் சில கடந்த வாரம் வெளியிட்டது தான் இந்தப் பரபரப்புக்குக் காரணம்.

பொதுத்தேர்தலை நாட ஜனாதிபதி விரும்புவதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு நாடாளுமன்றத்தில் — மயிரிழைப் பெரும்பான்மையே — ஒரு மேலதிக எம்.பியின் ஆதரவே உள்ளது.

இந்த நிலையில் முன்னணியில் உள்ள கட்சிகள் தத்



சந்திரிகா

தமது பாட்டுக்கு இழுத்துப் பிய்த்துக் கொண்டு நிற்கின்றன.


இதனால் அரசுக்கு ''நித்திய கண்டம் பூரண ஆயுசு'' என்ற இழுபறி நிலைதான்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை மூலம் தமக்குக் கிடைத்த அதிகாரங்களை தமக்கு விரும்பிய வழிகளில் செயற்படுத்துவதற்கு தமக்குப் பக்கபலமாக — வலுவுள்ள — நாடாளுமன்றம் இல்லாதது பெரும் முட்டுக்கட்டை என ஜனாதிபதி உணர்வதாகத் தெரிகின்றது.

### சிறிமானி அணி

சிறிமானி அத்துலத் முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஏற்கனவே ஜனாதிபதியுடன் முரண்டு பிடிக்கத் தொடங்கி விட்டது தெரிந்ததே.

இந்த முரண்பாடு காரணமாக சிறிமானிக்கு அமைச்



அஷ்ரப்

சரவையிலிருந்து 'கல்தா' கொடுத்து விட்டார் ஜனாதிபதி.

இதனால் சீற்றமுற்றிருக்கும் சிறிமானி அணி எந்த நேரத்திலும் அரசுக்குக் கொடுத்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்ளக் கூடும்.

சிறிமானி அணியின் சார்பில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டு எம். பிக்களாகியிருக்கும் பி.பி.ஜி. கலுகல்ல, மொண்டி கோபல்லாவ போன்றோர் அரசுக்கு காலை வாரும் வேலைக்குப் போக மாட்டார்கள் என்று தெரிகின்றது. ஆனால் சிறிமானியும் அவரது நெருங்கிய ஆதரவாளருமான ரவி கருணாநாயக்காவும் எந்நேரமும் அரசுக்குக் குழிபறிக்கும் வேலையைச் செய்யக் கூடும்.

### முஸ்லிம் காங்கிரஸ்

அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கடந்த சில மாதங்களாக ஜனாதிபதியுடன் முரண்டு பிடிக்கும் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸின் ஏழு எம். பிக்களினதும் ஆதரவு மிக முக்கியமானது. அதற்காக அக்கட்சிக்கும் அதன் தலைவர் அஷ்ரப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்து முன்னுரிமை அளிக்க ஜனாதிபதி தயாராக இருக்கின்றார்.

ஆனால் அரசுக்குள் இருக்கும் தீவிரப் போக்காளர்கள் சிலர் முஸ்லிம் தலைவர்களுக்கு ஜனாதிபதி முக்கியத்துவம் கொடுப்பதை எதிர்த்துச் சீறுகின்றார்கள். அவர்களைச் சாந்தப்படுத்துவதற்காக முஸ்லிம் காங்கிரஸிற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தைக் குறைத்தால் முஸ்லிம் காங்கிரஸ் முறைக்கின்றது. இந்தப் பிரச்சினையைத் தான் கடந்த அமைச்சரவை மாற்றத்தின் போது ஜனாதிபதி எதிர்கொண்டார்

அதாவது முஸ்லிம் காங்கிரஸ் விவகாரத்தில் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கின்றார் ஜனாதிபதி.

முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அதன் தலைவர்களின் முன்னைய செயற்பாடுகளை நன்கு புரிந்து கொண்டுள்ள ஜனாதிபதிக்கு அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் குத்துக்கரணம் அடிப்பார்கள் என்பது தெரியாததல்ல.

### இடதுசாரிகள் நிலை

லங்கா சமசமாசக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் சார்பில் அரசுக்குள் இடம் பெற்றிருக்கும் இடதுசாரிகளும் அரசுக்கு எந்நேரமும் தலையிடி கொடுக்கக் கூடும் என ஜனாதிபதி எதிர்பார்க்கின்றார்.

பேர்னாட் சொய்ஸா போன்ற மூத்த இடதுசாரிகளைச் சமாளித்தாலும் வாசுதேவ நாணயக்கார போன்றோரைச் சமாளிப்பது ஜனாதிபதிக்கு மிகக் கஷ்டமாக இருக்கும்.

தொழிலாளர் சாசனத்தைக் கொண்டு வருவதில் முழுமூச்சாக இருந்த அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவை தொழில் அமைச்சர் பதவியிலிருந்து ஜனாதிபதி மாற்றியது வாசுதேவ போன்ற இடதுசாரிகளுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அரசின் இத்தகைய போக்கால் கோபமுற்றிருக்கும்— எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடிய — வாசுதேவ போன்ற இடது சாரிகள் எந்நேரமும் அரசுக்கு எதிராகத் திரும்பக் கூடும்; அல்லது எம்.பி. பதவியை இராஜினமாச் செய்யக் கூடும்.

### இ.தொ. காவின் நிலை

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஒரே பட்டியலில் போட்டியிட்டு எம். பி. பதவிகளைப் பெற்ற பின்னர் ''என்றும் அரசாங்கத்தில் இருப்பது'' என்ற கொள்கைப் பிரகாரம் அணி மாறிய — தொண்டமான் தலைமையிலான — இ. தொ காவினரையும் ஜனாதிபதி நம்புவதாக இல்லை.

இ. தொ. காவின் எம். பிக்களின் அமைச்சர் என்ற வகையில் தொண்டமான் மட்டுமே நாடாளுமன்றத்தில் அரசுத்தரப்புப் பக்கம் இருக்கின்றார். ஏனைய எம். பிக்கள் ஐ. தே. க. பட்டியலில் போட்டியிட்டு வந்தவர்கள் என்று கூறிக் கொண்டு எதிர்க்கட்சி வரிசையில் குந்தியிருக்கின்றார்கள்.

இவ்வாறு இரட்டை வேடம் போடும் கட்சி உண்மையான நெருக்கடி வரும் போது தனக்குக் கைகொடுக்கும் என்று நம்ப ஜனாதிபதி தயாரில்லை.

### தமிழ்க் கட்சிகள்

எதிரணியில் இருந்து கொண்டு அரசுக்கு ஆதர



சிறிமானி

வளிப்பது போல பாசாங்கு பண்ணும் தமிழ்க் கட்சிகளையும் ஜனாதிபதி நன்கு புரிந்துகொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

'' ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருக்கும்' ' போக்கையே தமிழ்க் கட்சிகள் கடைப்பிடிப்பதாக ஜனாதிபதி நினைக்கின்றார்.

தமிழ்க் கட்சிகள் தமிழர் நலன் குறித்தே சிந்திக்கின்றன. தமிழரின் உரிமைப் போரை முற்றாக அடக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டால் அரசை எதிர்க்கும் போக்கில் தமிழ்க் கட்சிகள் தீவிரமாகி விடும் என்பது சிங்களத் தலைமைக்குத் தெரியாததல்ல.

ஏற்கனவே தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியே தெரியக்கூடியதாகச் சீறத் தொடங்கிவிட்டது. ஈ. பி. டி. யும், புளொட்டும் வெளியே அரசுடன் இணங்கிப்போவது போல காட்டிக்கொண்டு, ஒவ்வொரு விடயத்திலும் அரசுடன் முட்டிமோதும் போக்கையே கடைப்பிடிக்கின்றன.

### அரசை வாரிவிட ஒன்றிணையலாம்

இவ்வளவு நெருக்கடி இருப்பதால் அரசுக்கு எதிரான அதிருப்திப் போக்கு ஒன்று கட்சிகளிடையே எழும்போது இந்தக்கட்சிகள் ஒவ்வொன்றும் தமக்குள் ஒவ்வொரு சாக்குப்போக்கைச் சொல்லிக் கொண்டு அரசின் காலை வாரிவிடுவதற்கு ஒன்றிணைந்துவிடலாம் என்று ஜனாதிபதி கருதுகின்றாராம்.

இதனால் —

தற்போதைய யுத்த வெற்றிகளை முதலீடாக வைத்துக்கொண்டு திடீர்ப் பொதுத்தேர்தல் ஒன்றைச் சந்தித்தால் — இப்போது உள்ளதை விட — பாதுகாப்பான அரசு ஒன்றை [illegible]

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடி அரங்கு

திருகோணமலையில் நடந்த தமிழ்த்தின விழாவுக்குப் பங்குபற்றச் சென்ற யாழ். மாணவர்களுக்குக் கப்பல் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக யாழ். கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்குக் கடந்த வார அதிரடி அரங்கில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு ஒரு மறுப்பு யாழ். செயலகத்தில் இருந்து வந்துள்ளது.

திருமலை சென்று திரும்பிய — 334 பேரடங்கிய — குழுவுக்கு இலவசக் கப்பல் பயணம் மற்றும் பொருள்களைக் காங்கேசன்துறைக்கு எடுத்துச் செல்லவும், அங்கிருந்து எடுத்து வரவும் இலவச லொறி வசதி, திரும்பி வரும் சமயம் அங்கு இலவச உணவுப் பொட்டல விநியோகம் ஆகியவை யாழ். அரச அதிபரால் வழங்கப்பட்டன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் அணி திருகோணமலை சென்று திரும்பிய சமயம் கடமையிலிருந்த யாழ். அரச அதிபருக்கும் இப்பணிக்காகப் பாராட்டுக்கள்.

இதற்குகிடையில், திருகோணமலையில் நடைபெறும் மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு யாழ். பாடசாலை மாணவர்கள் நாளை அல்லது மறுதினம் புறப்படுகின்றார்கள். பெறுபேறுகளை பொறுத்திருந்து பார்ப்போம்.

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக நூலகத்துக்குப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதில் அசமந்தம் என்ற சாரப்பட வெளியான அதிரடி அரங்கின் தாக்குதலுக்குப் பதிலும், விளக்கங்களும், மேலதிக தகவல்களும் கிடைத்து வருகின்றன. ஒப்பமிடப்படாத கடிதங்களும் அவற்றில் அடக்கம். உரிய பரிசீலனையின் பின்னர் அடுத்து வரும் வாரங்களில் நிலைமை தெளிவுபடுத்தப்படும்.

★ ★ ★

குடாநாட்டு மக்களின் மத்திய போக்குவரத்து இடமாக விளங்குவது யாழ். பஸ் நிலையம். தூர இடங்களில் இருந்து வந்து இறங்கியும், தூர இடங்களுக்குச் செல்வதற்காகவும் நீண்ட நேரம் பலர் காத்து நிற்கும் இடம் அது. இங்கு மக்களின் அடிப்படை வசதிகளில் முக்கியமான மலசல கூடம் இல்லாதிருப்பது பெருங்குறைபாடு.

வயிற்றைப் பிடித்துக்கொண்டு பஸ்ஸை விட்டு இறங்குபவர்கள் 'சுமை' யை இறக்க முடியாது அலைந்து திரியும் 'கண்றாவிக்' காட்சியை அங்கு அடிக்கடி காணலாம்.

மத்திய பஸ் நிலையத்தில் கடமையாற்றும் அதிகாரிகள், ஊழியர்கள் கூட இயற்கைக் கடனைக் கழிப்பதற்கு தனியார் கட்டடங்களின் சொந்தக்காரர்களைத் 'தாஜா' செய்து வைத்திருக்கும் அவல நிலை.

இந்தச் சுகாதாரச் சீர்கேட்டு நிலைமை யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினருக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் தெரியாமல் இல்லை. மாநகர சபை அதிகாரிகள் நேரடியாக வந்து நிலைமைகளை கண்ணால் பார்த்து மலசல கூடம் அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தையும் தெரிவுசெய்துகொண்டு விட்டார்கள். ஆனால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதில் தான் சிக்கல்.

அந்த இடத்தை ஆக்கிரமித்துள்ள - அல்லது 'சொந்தம்' கொண்டாடுகின்ற - தகரக் கொட்டகை உரிமையாளர்கள் 'ஆவேசம்' கொண்டுள்ளதால் மாநகரசபையினரின் முயற்சி கிடப்பில் போடப்பட்டு விட்டதாகத் தெரிகின்றது,

இது விடயத்தில் அதிகாரிகளின் நேரடித் தலையீடு அவசியம். இயற்கைக் கடன் கழிக்க மறைவுகளைத் தேடி அலையும் பிரச்சினையை தீர்ப்பாளர்களா?

★ ★

1990 இல் போர் வெடிப்பதற்கு முன்னர், குடாநாட்டில் அனேகமாக எல்லாப் பகுதிகளிலும் பிரதேசங்களிலும் மின்சார வசதி இருந்தது. கிராமங்களில் குச்சொழுங்கைகளில் வீதி விளக்குகள் எரியுமளவுக்கு உள்ளூராட்சி சபைகளுக்கு ஊடாகக் கிராம மின்சார விஸ்தரிப்புத் திட்டம் செயற்பட்டு வந்தது.

போர் தீவிரமடைந்ததும் நகரம், கிராமம் என்ற வேறுபாடில்லாமல் மின்சார விநியோகம் தடைப்பட்டது. அதன் பின்னர் இப்போது தான் வீடுகளில் மின்வெளிச்சம் மின்னுகிறது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவியோடு ஜெனரேட்டர்கள் மூலம் யாழ்ப்பாண நகரப்பகுதிக்கும் வெளியூர்களில் சிலவற்றுக்கும் மின்சார விநியோகம் ஆரம்பமாகியுள்ளது.

ஆனால் புதிதாக மின்சாரம் வழங்குவதில் யாழ். நகரத்தில் மட்டுமன்றி வெளியூர்களிலும் பாகுபாடு காட்டப்படுவதாகவும், முறைகேடுகள் இருப்பதாகவும், மின் உத்தியோகத்தர்கள் தன்னிச்சையாக நடந்து கொள்வதாகவும் அதிரடி அரங்குக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பாதுகாப்பு அரணுக்கு உள்ளே, நகரின் பிரதான வீதிகளில் உள்ள ஐம்பது சதவீதத்துக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு இன்னும் மின்சாரம் கிடைக்கவில்லை. ஆனால் குச்சொழுங்கைகளில் உள்ள பல வீடுகளுக்கு மின்சாரவசதி வழங்கப்பட்டுள்ளது. சில வீடுகளுக்குப் பிற தெருக்களில் உள்ள மின்கம்பங்களிலிருந்து [விதிகளுக்கு மாறாக] மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைவீதி, பலாலி வீதி, பருத்தித்துறைவீதி, நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதி, மானிப்பாய்வீதி உட்படப் பல இடங்களும் இவற்றில் அடங்கும்.

நல்லூரில் சில ஒழுங்கைகளைத் தவிர்த்து அல்லது தாண்டி பிற ஒழுங்கைகளில் மின் விளக்குகள் எரிகின்றன.

சுன்னாகப் பகுதி மின்சார விநியோகத்திலும் பல முறைகேடுகள், பாரபட்சங்கள் இருப்பதாகக் குறை கூறப்படுகிறது.

இந்த முறைகேடுகளை ஒழித்து மக்களின் மன வேதனையைப் போக்க உயரதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

— மின்னல்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வன்னி நடவடிக்கையை...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

லுக்குப் பாதுகாப்பாகச் செல்லும் கடற்படைக் கப்பல்களைத் தாக்க வாய்ப்பு ஏற்படும்.

கடற்படையின் கவனத்தை சிதற வைப்பதன் மூலம் தமது ஆயுதக் கப்பல்களை சுலபமாக கிழக்குக் கரையோரத்துக்குக் கொண்டு வந்து ஆயுதங்களைப் பாதுகாப்பாக இறக்க முடியும் என்று புலிகள் கருதியிருக்கக் கூடும். இது முதலாவது ஊகம்.

★ இரண்டாவது ஊகம் — தாக்குதலுக்கு இலக்கான பயணிகள் கப்பல் தமிழருக்குச் சொந்தமான ஒரு கம்பனியினுடையது என்ற தகவலின் அடிப்படையில் கிளப்பப்பட்டிருக்கின்றது.

ஆழ்கடலில் கப்பலைச் செலுத்தி பணம் சம்பாதிக்கும் இக்கம்பனியிடமிருந்து பணம் அல்லது வேறு உதவியை புலிகள் கேட்டிருப்பார்கள்; வற்புறுத்தியிருப்பார்கள். அதற்கு கம்பனி இணங்காததால் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கக் கூடும் என்பது இரண்டாவது ஊகமாகும்.

இந்த ஊகங்கள் உண்மையோ பொய்யோ தெரியவில்லை. ஆனால் பயணிகள் இல்லாத சமயம் பார்த்து— பயணிகளைத் தவிர்த்து— இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

இத்தாக்குதலின் பின்னணி யாது? தாக்கியவர்கள் யார்? எஞ்சிய கப்பல் சிப்பந்திகள் எங்கே? என்ற கேள்விகளுக்கு எல்லாம் அடுத்துவரும் நாட்களில் பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

★ ★ ★

## இராணுவப் பெருச்சாளிகள்

ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இராணுவக் கேணல் ஒருவரையும் மேஜர் ஒருவரையும் இராணுவ நீதிமன்றத்துக்கு முன்னால் நிறுத்தும்படி இராணுவத் தளபதி உத்தரவிட்டிருப்பதாக அறிய வருகின்றது.

கொழும்பு புறநகர்ப் பகுதியில் உள்ள இராணுவத் தொழிற்சாலை ஒன்றில் கதவு, ஜன்னல் நிலைகளை இலவசமாகத் தயாரித்து, மலைநாட்டில் தாம் கட்டும் புதிய வீட்டுக்கு எடுத்துச் சென்றார் என கேணல் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இராணுவ வாகனங்களைத் திருத்தியதற்கான கூலியை, இல்லாத கராஜ்களின் பெயர்களில் செக்காக எழுதிப் பெற்றுத் தனது வங்கிக் கணக்கில் வரவு வைத்ததாக மேஜர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

★ ★ ★

## பாதுகாப்புஅணைகள் விலக்கப்படும்

யாழ். குடாநாட்டில் பல இடங்களிலும் குறுக்கும் மறுக்குமாக — மக்கள் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக— இருக்கும் பாதுகாப்பு அணைகள் (அரண்கள்) மிக விரைவில் நீக்கப்படவிருப்பதாக பாதுகாப்பு உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''இனிமேல், பலாலியைச் சூழவும், யாழ். மாநகரப் பகுதியைச் சுற்றியும் இரு உயர் பாதுகாப்பு வலயங்கள் மட்டுமே இருக்கும், ஏனைய பாதுகாப்பு அணைகள் விரைவில் விலக்கிக் கொள்ளப்பட்டு விடும். ஏனைய பிரதேசங்களில் மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படும். தேவையற்ற அணைகளை விலக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும். இதற்கான இயந்திரங்கள், புல்டோஸர்கள் போன்ற வாகனங்களை எதிர்பார்த்திருக்கின்றோம். அவை வந்ததும் அப்பணி ஆரம்பமாகும். — என்றார் அந்த அதிகாரி.

என்றாலும் —

யாழ். நகரின் பாதுகாப்புக்காக நகனரச் சூழவும், நகருக்கு இடைநடுப் பகுதிகளிலும் போடப்பட்டுள்ள இராணுவச் சோதனைச் சாவடிகள் விலக்கிக் கொள்ளப்படமாட்டா என்றார் அவர்.

அப்படி என்றால், யாழ். நகரில் சந்திக்குச் சந்தி இறங்கி உருட்டும் தொல்லை தொடரத்தான் போகின்றதா? ★

# இன்று நடப்பவை

கொழும்புத்துறை கிழக்கு இந்து இளைஞர் மன்றத்தின் 'கணநாதம்' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 3 மணிமுதல் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் மன்றத் தலைவர் க. மணிவண்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ—30)

★ ★ ★

பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் பிறவுண் வீதியில் இயங்கும் ஞானக் குழந்தை இல்ல இலவச பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று காலை 8.30 மணி முதல் யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மைதானத்தில் நடைபெறும். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி த. துரைசிங்கம் பிரதம விருந்தினராகவும், கிராம சேவையாளர் க. பஞ்சலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ)

★ ★ ★

மட்டுவில் தெற்கு அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வைரவர் கோயில் விளையாட்டு மைதானத்தில் மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை அதிபர் க. துரைரத்தினம் தலைமையில் நடைபெறும். (ஐ-31)

★ ★ ஐ

கொக்குவில் மக்கள் நலன் புரிச்சங்கத்துக்கு சேர்க்கப்பட்ட புதிய தொண்டர்களுக்கான பாசறை வகுப்புக்கள் இன்று காலை 8.00மணி முதல் கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றன.

## திடீர்த் தேர்தல்...

(4 ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதியும் அவருடன் நெருங்கியவர்களும் கருதுகின்றனராம்.

யாழ். குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதால் இங்கும் அரசின் செல்வாக்கைப் பிரயோகித்து சில எம். பிக்களை பெற்றுவிடலாம் என அரசு வட்டாரங்கள் கருதுகின்றன.

இவற்றின் அடிப்படையிலேயே திடீர்ப் பொதுத் தேர்தல் குறித்து அரச உயர் வட்டாரங்கள் சிந்திக்கத் தொடங்கியிருப்பதாக தெற்குச் செய்திகள் தெரிவித்தன.


உ

## மெடிக் சென்ரர்
## MEDIC CENTRE

உங்கள் உடல் உளநலம் தொடர்பான பிரச்சினைகளுக்கு நிபுணத்துவ சிகிச்சை வழங்கப்படும்

வருகைதரும் வைத்திய நிபுணர்கள்:-

DR. S. BHAVANI — சித்த மருத்துவம்

DR. K. T. C. MOHAN —
சீனஅக்குபங்சர், அக்குபிரசர், பிரதிபலிப்பு மசாஜ் ஹோமியோபதி சீனமொக்சா, காந்தசிகிச்சை, முக அழகுச் சிகிச்சை, காதுச்சிகிச்சை, பிசியோதெரபி

V. SRIKUHASIVALOGANATHAN —
(வதிவிட வைத்தியர்)

★ Brother A. KAMAL லினால் இலவச, யோக, தியான வகுப்புகள் தினமும் மாலை 5 மணிக்கு நடைபெறும்.
★ சிகிச்சை தினமும் காலை 8 மணிமுதல் இரவு 8 மணி வரை.
★ தங்குமிட வசதியுண்டு.

விவரங்களுக்கு,

**இல. 36, பொற்பதி றோட், கொக்குவில்.**

(பொற்பதிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்னால்)

(48206)



## சுதர்ஸனம்
## 10ஆம் ஆண்டு நிறைவு வாழ்த்து
05 - 07 - 1997

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் ஆதரவுடன் எமது பாதையில் நாம் நற்பணிகளுடனும் தொழிலில் ஓர் உன்னதமான இடத்தை அடைந்தோம். நாம் தொடர்ந்தும் எமது பணியையும் வளர்ச்சியையும் நாம் அடைய எமக்கு உங்கள் அனைவரினதும் நல்லாசிகளையும் நல் ஆதரவையும் தொடர்ந்தும் வழங்குவீர்கள் என எதிர்பார்த்து எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தரமான உற்பத்திகளுக்கு நாடவேண்டிய நம்பிக்கை ஸ்தாபனம்

**ஐடியல் பேக் கவுஸ்**
**மகாத்மா வீதி, நெல்லியடி.**

உரிமையாளர்:
குறள்வழிவள்ளல்
மா. கனகராசா. (சி/1072)



## ஆனந்தம் சீயாக்காய்

சித்த மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பட்ட ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் பலரின் பாராட்டைப்பெற்றது. ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் இதுவரைபாவிக்காதவர்கள் இன்றே பாவித்து உண்மையை அறியுங்கள். ஆலோசனை தாருங்கள்.

**ஸ்ரீ சச்சிதானந்தா**
என்ரபிறைஸ், கைதடி.
(48162)



## எமது ஓடியோ டிஸ்க் வெளியீடுகள்

★ ஒன்ஸ் மோர்
★ கவுண்டரம்மா
★ பகைவன்
★ அரசியல்
★ சித்திரமே நீ சொல்லடி
★ ஆஹா என்ன பொருத்தம்
★ ரோஜாமலரே
★ அட்ரா சக்கை அட்ரா சக்கை

எமது அடுத்த வீடியோ வெளியீடு

**வினித், கீர்த்நரெட்டி, நாசர்**
நடித்த
**தேவதை**

## சுப்பலோ வீடியோ
யாழ்ப்பாணம். (சி/1076)


# மரண அறிவித்தல்கள்

## C. S. திருநாவுக்கரசு
(Retired Accountant)

மீசாலை கிழக்கைச் சேர்ந்த C S. திருநாவுக்கரசு அவர்சள் 2-7-97 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் கமலாதேவியின் அன்புக்கணவரும், திருமதி தயானி, பத்மன் (U. K.), ரமணன் (U. K.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், க. சிவகுமாரின் (ஆசிரியர், டிறிபேக்கல்லூரி, சாவகச்சேரி) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற C. S. சின்னையா, C.S. நடராசா, காலஞ்சென்ற திருமதி இராசபூபதி வேலாயுதபிள்ளை ஆகியோரின் சகோதரரும், செல்வி சி. சிந்துவின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க.சிவகுமார்**
(மருமகன்)

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. (48208)

## சின்னத்தம்பி செல்லையா

மந்துவில் மேற்கு விநாயகர் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லையா 4-7-1997 அன்று காலமானார்.

இவர் பாக்கியத்தின் கணவரும், தவயோகராசா (பிள்ளையார் ஸ்ரோர், மார்க்கட், கொடிகாமம்), சிவயோகராசா (சரசாலை), அன்னலட்சுமி, அருந்தவராசா (அல்லாரை), செல்வராசா (இத்தாலி), சிவராசா (சிறீ வெற்றிலைக்கடை, கொடிகாமம்), தருமராசா, இராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகரத்தினம், சறோஜாதேவி, இன்பகலா, அருந்தவசோதி, சிவராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 5-7-1997 சனி பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மந்துவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**செ. சிவராசா**
(மகன்)
(சிறீவெற்றிலைக் கடை,
கொடிகாமம்)

விநாயகர் வீதி,
மந்துவில் மேற்கு,
கொடிகாமம். (48217)


உ

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

நிகழும் ஈசுர வருடம் ஆனித் திங்கள்
21 ஆம் நாள் (05 - 07 - 1997) சனிக்கிழமை
பிற்பகல் 1 - 34 மணி முதல் 4 - 45 மணி வரையுள்ள சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்

## நியூ விதுஷா நகை மாடம்
## NEW VITHUZA NAGAI MAADAM

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து தங்களை மகிழ்விக்க இருப்பதால் அவ்வமயம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
தங்கள் நல்வரவை நாடும்
**ச. சத்தியசீலன்** (உரிமையாளர்)
(றஞ்சன்)

191 H. K. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (48203)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பு விடுதிகள் மீது பொலிஸார் பாய்ச்சல்!

கொழும்பு, ஜூலை 5
கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் உள்ள மூன்று தனியார் லொட்ஜுக்கள் மூடப்பட்டு அங்கிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை செட்டியார் தெரு, உசைனியா தெரு, பாங்ஷால் வீதிகளிலுள்ள லொட்ஜுக்களே பொலீஸாரால் முற்றுகையிடப்பட்டு அங்கிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

அதன் பின் அந்த லொட்ஜுக்களை மூடுமாறு பொலீஸார் உத்தரவிட்டனர்.

இதே நேரம்—
வெள்ளவத்தையில் உள்ள லொட்ஜுக்களையும் பொலீஸார் சுற்றிவளைத்து அங்கிருந்த 10 பெண்கள் உட்பட 25 பேரைக் கைது செய்தனர்.

பல பகுதிகளிலும் தமிழர் கைதுகள் இடம்பெற்றன. (உ-3)

## முத்திரை வந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 5
யாழ். மாவட்டத்திலுள்ள தபாலகங்களுக்கு 54 பொதிகளில் நேற்று விமான மூலம் முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளதாக வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

யாழ். பிரதம தபாலகம், பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, கரவெட்டி, மானிப்பாய், ஊர்காவற்றுறை, பண்டத்தரிப்பு, நெடுந்தீவு, கொக்குவில், சுழிபுரம், கொடிகாமம், கோப்பாய் போன்ற தபாலகங்களுக்கே மேற்படி முத்திரைகள் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-4)

## 'லங்காபுவத்' நிறுவனத்துக்கு மூடு விழா

கொழும்பு, ஜூலை 5
லங்காபுவத் செய்தி நிறுவனம் இரண்டு வாரகாலத்துக்குள் மூடப்பட்டுவிடும் என்று தொடர்புசாதன அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (உ)

## சைக்கிள்கள் சோதனையில்!

திருகோணமலை, ஜூலை 5
திருகோணமலை நகரப்பகுதியில் சைக்கிள் குண்டுவைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து—

திருகோணமலை நகரப்பகுதியில் நேற்று காலை முதல் வீதியில் சென்ற சைக்கிள்கள் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இராணுவத்தினரும், பொலீஸாரும் இணைந்து இப்பணியில் ஈடுபட்டனர். (உ-150-3)

## நாளை

ஓய்வு பெற்ற கோண்டாவில் மேற்கு கிராம சேவையாளர் சங்கரப்பிள்ளை யோகராசாவின் சேவைநலன் பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்க பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடலியடைப்பில் கல்லூரி தற்காலிகமாக இயங்கும் இடத்தில் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

ஏழாலை சைவ முன்னேற்ற மன்றம் அண்மையில் நடத்திய ஆத்திசூடி, திருக்குறள் மனனத் தேர்வுகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் நாளை ஞாயிறு காலை 8.30 மணிக்கு சைவ சன்மார்க்க வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (ஐ)

★ ★ ★

தென்மராட்சி பகுதியில் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போனவர்களின் பெற்றோர்கள், உறவினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கைதடி விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## சமய சந்நிதிகளில்

யாழ். கோட்டை முனீஸ்வரன் கோயில் வருடாந்த உற்சவ மணவாளக் கோலத் திருவிழா இன்று பிற்பகல் 3 மணிமுதல் 4—30 மணி வரை நடைபெறும். இன்று முதல் தொடர்ந்து 25 தினங்கள் உற்சவம் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

அல்வாய் வேவிலந்தை முத்து மாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 நாட்கள் இடம்பெறும் உற்சவங்களில் 14ம் நாள் தேரும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (உ—;5)

## அ. அட்டைகள் விநியோகம்

யாழ் றெக்கிளமேசன் கிழக்கு (ஜே. 68), யாழ். றெக்கிளமேசன் மேற்கு (ஜே. 69) கிராம சேவையாளர் பிரிவு மக்களின் விசேட அடையாள அட்டைகள் நாளைகாலை 8.30மணிக்கும் குருநகர் மேற்கு [ஜே. 71) கிராம சேவையாளர் பிரிவு மக்களின் விசேடஅடையாளகள் நாளை பிற்பகல் 2மணிக்கும்—

குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் வைத்து வழங்கப்படவிருக்கின்றன.

யாழ். நகர் கிழக்கு (ஜே. 74) கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்றுபிற்பகல் 2மணிக்கு விநியோகிக்கப்படவிருக்கின்றன. (உ—51

## கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

மன்னார் நகரப் பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த புலனாய்வு பிரிவைச் சேர்ந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அவரைப்பின் தொடர்ந்து வந்த பிஸ்டல் குழுவால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் நடந்த இச்சம்பவத்தில் மாத்தளையைச் சேர்ந்த எம். பீ. ஆதம் பாவா (27 வயது) என்ற பொலீஸாரே சுட்டுக்கொல்லப்பட்டார். (உ-3-5)

## புலி உறுப்பினர் உயிரிழப்பு

மட்டக்களப்பு ஆரையம்பதியில் நேற்று முன்தினம் இரவு அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் ஜீவன் என்ற விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார்.

அவரிடம் இருந்து ரி-56 ரகத் துப்பாக்கி கைப்பற்றப்பட்டதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

## சுவரொட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 5
இன்றைய கரும் புலிகள் தினத்தை ஒட்டி வடமராட்சிப் பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (உ-51)

## எஞ்சிய...

(மூன்றாம் பக்கத் தொடர்)
றது.

இந்தச் சிப்பந்திகள் ஏழு பேரும் விடுதலைப் புலிகளின் காவலில் இருப்பதாகக் கருதப்படுகின்றது.

அவர்களை நேரில் சென்று பார்வையிடுவது குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் புலிகளுடன் பேச்சு நடத்தி வருவதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி செல்வி ஆன் தெரிவித்தார்.

இந்த எஞ்சிய ஏழு சிப்பந்திகளில் ஐவர் சிங்களவர்; ஒருவர் முஸ்லிம்; ஒருவர் தமிழர் ஆவார். (உ-3)

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்)
ரணை செய்து, ஜனாதிபதிக்கு இந்தக்குழு அறிக்கை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காணாமற்போனவர்கள் பிரச்சினை தொடர்பாக எதிர்வரும் 7 ஆம் திகதி காணாமற்போனோர்,கைதானோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்திக்கவிருந்ததும் —

பின்னர் அச்சந்திப்பு பிற்போடப்பட்டதும்— தெரிந்தவையே.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள மேற்படி குழு யாழ்ப்பாணத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்றும்—

இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்பே ஜனாதிபதி காணாமல் போனோர் கைதானோர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்திப்பார் என்றும்— தெரியவருகின்றது. (உ-3)

## இந்தோனேஷிய...

(முதலாம் பக்கத் தொடர்)
இருவரையும் பொறுப்பேற்றார்.

விடுவிக்கப்பட்ட இரு இந்தோனேஷியப் பிரஜைகளையும் உடனடியாக நேற்றுப் பிற்பகல் வவுனியாவுக்குக் கூட்டி வந்த செஞ்சிலுவை அதிகாரிகள், உடனே அவர்களை கொழும்புக்கு அழைத்துச் சென்று அங்குள்ள இந்தோனேஷியத் தூதரகத்தில் ஒப்படைக்கப் போவதாகத் தெரிவித்தனர்.

தூதரக அதிகாரிகளிடம் அவர்களைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று இரவு நடைபெற இருந்தது. (உ-3-10-164-21)

## கப்பல்...

(முதலாம் பக்கத்தொடர்)
ருந்து பயணிகளுடன் வடக்கு நோக்கிப் புறப்படவிருந்தது.

ஆனால் இந்தச் சேவைக்கு கடற்படைப் பாதுகாப்புக் கோரப்பட்டதாகவும் —

அது கிடைக்காததால் சேவை ரத்துச் செய்யப்பட்டதாகவும் —

திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

இக்கப்பலில் காங்கேசன் துறைக்குச் செல்லும் ஆயத்தத்துடன் நேற்று மாலை திருகோணமலை பட்டணமும் சுற்றாடலும் பிரிவு பிரதேச செயலர் அலுவலகத்துக்கு நூற்றுக் கணக்கானோர் வந்திருந்தனர்.

கப்பல் சேவை நேற்று நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டதை அடுத்து பயணிகள் அனைவரும்ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இன்று மாலை காங்கேசன் துறைக்கு செல்ல கடற்படை அனுமதி கிடைக்கும் பட்சத்தில் சேவை நடைபெறும் என்று திருகோணமலை பிரதேச செயலர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

# சிவாஜி கணேசனுக்கு அதி உயர் விருது

புதுடில்லி, ஜூலை 5
பிரபல தென்னிந்தியத் தமிழ்த் திரைப்பட நடிகர் சிவாஜி கணேசனுக்கு 1996 ஆம் ஆண்டுக்கான தாதா சாஹேப பால்கே விருது வழங்கப்பட்டிருக்கிறது.

இந்திய ஜனாதிபதி இந்த விருதையும் ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பணத்தையும் சிவாஜிக்கு வழங்குவார்.



இந்திய சினிமாவுக்கு சிவாஜி கணேசன் ஆற்றியுள்ள தலை சிறந்த அரும் பெரும் பங்கு பணிகளைப் பாராட்டி இந்த உயர் சினிமா விருது வழங்கப்படுவதாக தெரிவுக் குழு அறிவித்துள்ளது.

சிவாஜி கணேசன் தமது 41 ஆண்டு கால திரையுலக வாழ்வில் முன்னூறுக்கு மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார்.

'காலதாமதமாக வழங்கப்பட்டிருப்பினும் இந்த விருது சிவாஜி கணேசனின் புகழ் மகுடத்தில் பதிக்கப்பட்ட மேலும் ஒரு வைரக்கல்' என்று தமிழக முதல்வர் மு. கருணாநிதி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

# கடற்றொழில் 96 வீதம் குடாநாட்டில் வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், ஜூலை 5
குடாநாட்டில் கடல் பாதுகாப்பு வலயம் மற்றும் கடலில் மீன்பிடிப்பதற்கு பாதுகாப்பின்மை ஆகியவை காரணமாக மீன் பிடிப்பு 96 வீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

90 ஆம் ஆண்டுக்கு முன்னர் குடாநாட்டில் மீன்பிடித் தொழில் மூலம் வருடாந்தம் சுமார் 50 ஆயிரம் மெற்றிக் தொன் மீன் பெறப்பட்டது.

ஆனால் தற்சமயம் வருடாந்தம் ஆயிரத்து 500 முதல் 2 ஆயிரம் வரையான மெற்றிக் தொன் மீனே பெறப்படுகிறது என்று புள்ளிவிவரங்கள் தெரிவித்தன. (உ-3)

## தாக்கப்பட்டவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 5
இனந்தெரியாத நபர்களால் அடித்துத் தாக்கப்பட்டவர் எனத் தெரிவித்து கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படு, மேலதிக சிகிச்சைக்காக கடந்த புதன்கிழமை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒருவர் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

மீசாலையைச் சேர்ந்த சுப்பையா அருளம்பலம் (வயது 48) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். மரண விசாரணையின் பின் சடலம் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-15)

## 10 ஆயிரம் ரூபா நாணயம் புழக்கத்துக்கு!

கொழும்பு, ஜூலை 5
இலங்கையின் சுதந்திர தினப் பொன்விழா கொண்டாட்டங்களை ஒட்டி இலங்கை மத்திய வங்கி பல புதிய நாணயங்களைப் புழக்கத்துக்கு விடவுள்ளது.

10 ஆயிரம் ரூபா, ஆயிரம் ரூபா, 10 ரூபா ஆகிய நாணயங்கள் வெளியிடப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள முனசிங்க தெரிவித்தார். (ஐ-10)

## மின்மாற்றிகள் தகர்ப்பு

மட்டக்களப்பு ஜூலை 5
கல்முனையில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்களால் இரு மின்மாற்றிகள் குண்டு வைத்துத்தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-21-3)

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)
பொதுமக்களின் கோரிக்கைகள் அடங்கிய— ஐ.நா. செயலாளர் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட — கடிதங்கள் முல்லைத்தீவு அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டன. (உ-3-164)

**நாளை**
**ஆனி 22**
**ஞாயிற்றுக்கிழமை**
**திதி:** துதியை
பின்இரவு 2.48 வரை
**நட்சத்திரம்:** பூசம்
முழு நாளும்
**சுபநேரம்,** 8.58 - 10.28
**ராகுகாலம்:** 4.28 - 5.58
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## செவ்வாயில் மனித விண்கலம்

கலிபோர்னியா, ஜூலை 5
அமெரிக்காவின் சுதந்திர தினமான நேற்று அமெரிக்க விஞ்ஞானிகள் விண்வெளியில் மாபெரும் அறிவியல் சாதனை ஒன்றை நிறைவேற்றினர்.

அமெரிக்காவின் 'மார்ஸ் ரோவர்' என்ற ஆள்கள் இல்லாத விண்கலம் ஒன்று செவ்வாய்க் கிரகத்தில் நேற்றிரவு இலங்கை நேரப்படி 11-30மணிக்கு வெற்றிகரமாக தரையிறங்கியது.

செவ்வாய்க் கிரகம்தொடர்பான ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அரிய தகவல்களையும், புகைப்படங்களையும் பூமிக்கு அனுப்பி வைக்கும் பணியில் ஈடுபடவுள்ள இந்த நவீன விண்கலம் செவ்வாய்க் கிரகத்துக்கான தனது பயணத்தை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 4ஆம் திகதி ஆரம்பித்தது.

பூமியில் இருந்து 30 கோடி 90 இலட்சம் மைல்கள் தூரம் பயணம் செய்த இந்த விண்கலம் அதன் சரியான இலக்கில் சென்று நேற்றிரவு செவ்வாய்க்கிரகத்தின் வாயுமண்டலத்துள் பிரவேசித்தது.

ஆவலைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக அமெரிக்க விஞ்ஞானிகள் இந்த அரிய காட்சியை தங்கள் கணனிகளில் கண்டு களித்தனர்.

செவ்வாய்க் கிரகத்துக்கு மனித ஆராய்ச்சியாளர் குழு ஒன்றை அனுப்புவதற்கான முன்னோடித் திட்டமாக இந்த விண்கலம் அங்கு அனுப்பப்பட்டிருக்கிறது. (ஐ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சு மனையில் 05-07-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
சஞ்சிகை

05 - 07 - 1997 சனிக்கிழமை



வைத்திய ஆலோசனைக்கு ஏற்ப
மூக்குக் கண்ணாடிகள் பெறுவதற்கும்,
சிறந்த முறையில் பற்களை கட்டிக்
கொள்வதற்கும் நாட வேண்டிய இடம்:
**பி. ஜெ. பர்னாண்டோ**
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி/1061)

## கருத்துக் கலசம்

### பாராட்டுக் 'கலாசாரம்'

எமது பிரதேசத்தில் இப்போது புதிய கலாசாரம் ஒன்று பரவி வருவதாகக் கருதப்படுகிறது.

உயர் பதவி வகிப்போர், பெரிய பதவிகளுக்குப் புதிதாக நியமனம் பெறுவோர், பரீட்சைகளில் சிறப்பாகச் சித்தி அடையும் மாணவர்கள் என்று பல தரப்பினரையும் கண்டபடி பாராட்டும் வழக்கமே அது வாகும்.

பல வருட சேவையின் பின்னர் ஓய்வு பெறும் அதிகாரிகள், அதிபர்கள், கல்விமான்கள் மற்றும் சமூக சேவைக்குத் தம்மை அர்ப்பணித்தவர்கள், அரச பட்டங்கள், விருதுகளைப் பெற்றவர்கள் முன்னரும் பாராட்டப்பட்டார்கள்; விழாக்கள்,வைபவங்களும் நடத்தப்பட்டன.

தகுதியும் திறமையும் உள்ளவர்களே பாராட்டுக்கும் கௌரவிப்புக்கும் உரித்துடையவர்கள் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால் இந்தத் தகுதி திறமை, சேவை என்பனவற்றை நிர்ணயிப்பது எப்படி? அளவு கோல் என்ன? நடுவர்கள் யார்? என்ற கேள்விகள் எழுகின்றன.

ஒருவர் தகுதியை,திறமையை சேவையை மதிப்பீடு செய்பவர்கள் அனேகமாக மக்களே. மக்களே நடுவர்களாகும் போது அவரவர் மனப் போக்கு, நன்றி உணர்வு, விருப்பு — வெறுப்புகளைப் பொறுத்து அளவு கோல்கள் வித்தியாசப்படும். அதுதவிர்க்கமுடியாதது;தடைசெய்ய முடியாதது ஆகிவிடுகிறது. பாராட்டுக்கும், கௌரவத்துக்கும் பொருத்தமற்றவர்களுக்கும் அது கிடைக்கலாம்.

மக்கள் ஒருவரைப் பாராட்ட வேண்டும்; நன்றி செலுத்த வேண்டும் என்று விரும்பினால் அதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு. அதனைத் தடுக்க எவருக்கும் உரிமையில்லை.

எந்த நாணயத்துக்கும் இரண்டு பக்கம் உண்டு என்பதனை மறந்துவிடக்கூடாது.

திறமை, தகுதி, சேவைச் சிறப்பு உடையவர்களைப் பாராட்டுவது பலருக்கு ஊக்குவிப்பாகவும் ஏனையோரும் திறமையை வெளிக்காட்ட உந்துதலாகவும் அமைகிறது.

பாராட்டுகளை வெறும் முதுகு சொறிதலாக ஆக்காமல் ஆக்கபூர்வமாகச் செய்யின் அது சமுதாயத்தின் மனித திறனை வளர்க்கும்; நன்றியுணர்வுள்ள சமுதாயத்தை உருவாக்கும். மற்றவர் திறமையை, தகுதியை, உயர்ச்சியை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவத்துக்கும் இட்டுச் செல்லும்.

எமது சமுதாயத்தில் புரையோடியுள்ள சுயநலத்தையும் குறுகிய மனப்பான்மையையும் ஓரளவேனும் குறைத்து, மற்றவர்கள் திறமைக்கு மதிப்பளித்து மெச்சும் பரந்த, ஆரோக்கியமான பண்பை வளர்க்க, இந்தக் 'கலாசாரம்' உதவும் என நம்பலாம்.

# பக்தியின் பாதுகையை பற்றி ஏந்திய பரந்தாமன்

பாரதப்போர் தொடங்குவதற்கு முன் கிருஷ்ணபிரானின் உதவியையும் அருளையும் நாடி அர்ஜுனனும் துரியோதனனும் சென்றனர்.

கிருஷ்ணர் நடிப்பதில் மிகவும் சிறந்தவர். அவர் இயற்ற வேண்டிய நாடகம் ஒன்று இருந்தது. அந்த நாடகத்துக்கு அவரே சூத்திர தாரி.

அர்ஜுனனும் துரியோதனனும் தனது உதவியை நாடி வருவதைக் கிருஷ்ணர் நன்கு அறிந்திருந்தார். ஒருவர் பின் மற்றவர் வந்துகொண்டிருந்ததை அவர் கவனித்தார்.

முதலில் துரியோதனன் வந்தான். அகந்தை, ஆணவம், அறியாமை ஆகியவை நிறைந்தவன் துரியோதனன். அதனால் கிருஷ்ணர் தூங்குவதுபோல நடித்தார். கர்வம் நிறைந்த துரியோதனன் அவருடைய தலைமாட்டில் நாற்காலியில் அமர்ந்தான்.

அர்ஜுனன் அடுத்தபடி வந்தான். பணிவுடன் இறைவனின் திருவடிகளுக்கருகில் அமர்ந்தான்.

அர்ஜுனன் கண்ணர் தூங்குவதைக் கண்டான். ''உண்மையாகத் தூங்கும் மனிதர்களை எழுப்பமுடியும். பாசாங்கு செய்பவர்களை எழுப்ப முடியுமா? போதும் கிருஷ்ணா! தயவு செய்து எழுந்து வாருங்கள்'' என்று வேண்டிக்கொண்டான். கிருஷ்ணர் துயில் நீங்கியவரைப் போல எழுந்திருந்தார்.

துயிலில் இருந்து எழுந்திருந்ததும் ஒருவர் யாரை முதலில் கவனிப்பார்கள்? யாரும் தலையைத் திருப்பிப் பார்ப்பதில்லை. பார்வைக்கு நேரே கால்மாட்டில் அமர்ந்திருந்த அர்ஜுனனையே முதலில் கண்டார் கிருஷ்ணர். அர்ஜுனனும் வணக்கத்தைத் தெரிவித்தான். அவனுடன் அன்பாக உரையாடினார் கிருஷ்ணர்.



இதைக் கண்ட துரியோதனனுக்குக் கோபம் தாங்கமுடியவில்லை. சினத்துடன் இருமினான். தலையைத் திருப்பித் துரியோதனனைக் கண்டார் கிருஷ்ணர். ''எப்பொழுது வந்தாய்?'' என்று கேட்டார். துரியோதனன் ''கிருஷ்ணா! நான் மிக முன்பே வந்துவிட்டேன், பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் இடையே போர் நடக்க இருக்கிறது. உன்னுடைய உதவியை நாடி வந்திருக்கிறேன்'' என்றான்,

''நான் உதவி செய்கிறேன்'' என்றார் கிருஷ்ணர்.

அர்ஜுனனைப் பார்த்து ''நீ எதற்கு வந்திருக்கிறாய்?'' என்று கேட்டார் கிருஷ்ணர்.

''உதவி நாடி வந்திருக்கிறேன்.'' என்று அர்ஜுனன் கூறவில்லை. ''உனது அருளை நாடி வந்திருக்கிறேன்.'' என்று மட்டும் சொன்னான்.

துரியோதனன் கிருஷ்ணனின் புறவலிமையையும் உதவியையும் நாடி வந்தான். ஆனால் அர்ஜுனனோ கிருஷ்ணரின் அருளைநாடி வந்தான்.

தான் வழங்கக்கூடிய உதவிகளை கிருஷ்ணர் இரு பகுதிகளாகப் பிரித்தார். ''எனது படைவீரர்களும், படைக் கருவிகளும் ஒருபுறம். நான் மட்டும் மற்றொருபுறம். நான் போர்க்கலம், ஆயுதம் ஏந்தமாட்டேன். உனக்குத் தேவையானதை எடுத்துக்கொள்ளலாம்'' என்றார்.

துரியோதன் உலக ஆசைகள் நிறைந்தவன். கண்ணுக்குப் புலப்படுகிற புறவலிமையையே அவன் விரும்பினான். ''கிருஷ்ணா! உனது படைக்கருவிகளைக் கொடு. படைவீரர்களைக் கொடு. அதுவே எனக்குப் பலம்.'' என்று சொல்லிவிட்டான்.

''அவ்வாறே தருகிறேன்'' என்று வாக்குத் தந்தார் கிருஷ்ணர்.

கிருஷ்ணர் அடுத்து அர்ஜுனனைப் பார்த்து ''மைத்துனா! உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

அர்ஜுனன் ''கிருஷ்ணா! நீ என்கூட இருந்தாலே போதும். எனக்கு வேறு எதுவும் தேவையில்லை!'' என்று கூறினான். கிருஷ்ணர் அர்ஜுனனைத் தன் இதயத்துடன் சேர்த்து அணைத்துக் கொண்டார்,

சேனையும் கருவிகளும் ஒரு வண்டியுடன் இணைக்கப்பட்ட பெட்டிகளைப் போன்றவை. துரியோதனன் பெட்டிகளை மட்டும் கூட்டிச் சென்றான்.

பகவான் என்ஜினைப் போன்றவர். உலகில் உள்ள ஆற்றல்கள் அனைத்தும் பெட்டிகளைப் போன்றவைதாம். அவற்றை நடத்திச் செல்லக் கடவுள் என்ற என்ஜின்தான் முக்கியமாகத் தேவை. அதை அர்ஜுனன் உணர்ந்திருந்தான். அதனால் அவனுக்கே வெற்றி கிடைத்தது.

★ ★ ★

கடவுளின் அன்பு மாறாதது. அன்பு என்றும் வழங்குவதே தவிர வாங்குவது இல்லை. அது கொடுத்துக் கொண்டே இருக்கும். ஆகவே இறைவன் கொடுப்பதை எல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் கொடுப்பதெல்லாம் நன்மைக்கே என்ற நம்பிக்கையை நாம் கைக்கொள்ள வேண்டும்.

போருக்கு முன்னால் அர்ஜுனன் வைத்துள்ள நம்பிக்கை இவ்வாறு பகவான் கிருஷ்ணரால் சோதிக்கப் பட்டது.

கிருஷ்ணர் அர்ஜுனனிடம் ''அதோ! அந்த மரக் கிளையில் அமர்ந்திருக்கும் பறவை என்ன? மயிலா?'' என்று கேட்டார்.

''ஆமாம் ஸ்வாமி!'' என்றான் அர்ஜுனன்.

''இல்லை! அது பறவை!''

''இல்லை! அது ஒரு காகம்!''

''ஆமாம் ஸ்வாமி! அது ஒரு காகம்!''

கிருஷ்ணர் வாய்விட்டுச் சிரித்தார்.

''நீ என்ன பைத்தியமா? நான் என்ன சொன்னாலும் அப்படியே அதை நம்பிக்கையுடன் ஏற்றுத் தலையை ஆட்டுகிறாயே? உனக்கென்று விவேகம் இல்லையா?'' — என்று கேட்டார்.

''ஸ்வாமி! எனது விவேகத்தால் ஒரு பயனும் இல்லை. மயில் இல்லை என்று நான் சொன்னால், அதை மயிலாக மாற்றிவிடக்கூடிய வல்லமை படைத்தவர் தாங்கள். அவ்வாறிருக்க எனது விவேகத்தால் என்ன பயன்? தாங்கள் எது சொன்னாலும் அதுவே எனக்குச் சாத்தியம்!'' என்றான் அர்ஜுனன்.

''உன்னைப் புரிந்து கொண்டேன். இப்போது என்னிடம் உபதேசம் பெற உனக்குத் தகுதி இருக்கிறது.'' — என்று கூறிக் கிருஷ்ணர் கீதாபதேசம் செய்ய முடிவு செய்தார்.

கடவுளிடம் நம்பிக்கை இருக்கும்போதுதான், அவருடைய உபதேசம் நமக்குக் கிடைக்கிறது, அவருடைய அருளை நாம் பெறுகிறோம்.

★ ★ ★

பாரதப் போரில் அர்ஜுனனை வெல்லக் கூடிய — கொல்லக்கூடிய — திறமை பீஷ்மருக்கு மட்டுமே உண்டு என்பதை, உணர்ந்திருந்தார் கிருஷ்ணர். பீஷ்மருக்கு அப்போது 116 வயது. மந்திரங்கள் எதையும் அவர் உச்சரித்து அம்பைப் பிரயோகிக்க முடியும். ஆனால் அவர் விரும்பினாலேயே அம்பு புறப்படும். தனது இந்திரியங்களைப் போலப் போர்க்கலன்களையும் கட்டுப்போட்டு வைத்திருந்தார் பீஷ்மர்.

பீஷ்மரிடம் திரௌபதி ஓர் உறுதிமொழி வாங்கிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தார் கிருஷ்ணர்.

இரவு நேரம். அப்போதெல்லாம் இரவில் போரிடுவது அதர்மம் என்பதால் யாரும் போரிடமாட்டார்கள். அதனால் பீஷ்மர் தனது பாசறையில் தனியே தங்கி இருந்தார்.

''திரௌபதி புறப்படு! நீ பீஷ்மரிடம் போய் ஆசி பெற்று வர வேண்டும்'' என்று கூறினார் கிருஷ்ணர். திரௌபதிக்கு ஏதும் விளங்கவில்லை. ஆயினும் கிருஷ்ணரின் கட்டளையை ஏற்றுப் புறப்பட்டாள்.

வழியில் கிருஷ்ணர் அவளிடம் ''நீ பீஷ்மரின் பாசறைக்குள் சத்தம் போடாமல் நுழைய வேண்டும். அவர் தூக்கமின்றிச் சிந்தனையுடன் படுத்திருப்பார். நீ அவரது கால்களைத் தொட்டு வணங்கு. ஆனால் முகத்திரையை அகற்றாதே. தன்னை வணங்குவது ஓர் இளம்பெண் என்று அறிந்ததும், அவர் உடனே 'தீர்க்க சுமங்கலி பவ!' என்று ஆசி கூறிவிடுவார். அது நமக்குப் போதும். அதன்பின் அவர் அர்ஜுனனையோ, பிற பாண்டவர்களையோ கொல்ல முற்பட்டு விடமாட்டார்!'' — என்றார். திரௌபதி அவருடைய ஆணைப்படியே செய்ய ஒப்புக் கொண்டாள்.

பாசறையின் வாசலுக்கு வந்ததும் திரௌபதியின் கால் செருப்பு ஓசை எழுப்புவதைக் கவனித்தார் கிருஷ்ணர். அதைக் கழற்றித் தன் கையில் கொடுக்கும்படி கேட்டார். ஒருகணம் தயங்கினாள் திரௌபதி. ''பகவான் தனது கால் செருப்பை சுமக்கலாமா?'' என்று தயங்கினாள்.

(XII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்திய சஞ்சீவி

# மார்பகப் புற்று நோய்


# யார், யாருக்கு வருகிறது?

உயரமான பெண்களுக்கு அதிர்ச்சிதரும் ஓர் அறிவியல் கண்டுபிடிப்பு இது.

நீங்கள் 4 அடி 11 அங்குலத்திற்குக் குறைவான உயரம் கொண்ட பெண்மணியா? உங்களுக்கு மார்பகங்களில் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியம் குறைவு. 5 அடி 3 அங்குலம் அல்லது அதற்கு அதிகமான உயரம் உள்ள பெண்களுக்கு இந்தவகைப் புற்று நோய் வரக்கூடிய அபாயம் அதிகம்.

பெண்களின் மார்பகங்களில் புற்றுநோயை உண்டாக்கக்கூடிய இதர சில முக்கிய காரணிகளும் இருக்கின்றன.

நீங்கள் விதவிதமான உணவுப் பண்டங்களை அளவு பற்றிக் கவலைப்படாமல் ஆசையுடன் விழுங்கும் ரகத்தினரா நீங்கள் இளம் பெண்கள் என்றால் கவலைப்பட வேண்டாம். குண்டான இளம் பெண்களுக்கு மார்பகங்களில் புற்றுநோய் தாக்கும் அபாயம் குறைவு. சொல்லப்போனால், குண்டாக இருப்பவர்கள் இந்த அபாயத்தை ஓரளவு தவிர்த்துக் கொள்ளும் சக்தி உடையவர்களாகவே இருப்பார்கள்.



மார்பக வெட்டு முகத்தில் ஆரம்ப நிலையில் இருக்கும் மார்புக் கட்டியின் தோற்றம்.

சற்றுப் பொறுங்கள்; நீங்கள் 40 வயதுக்கு மேற்பட்ட பெண்மணியா? அப்படியானால் நீங்கள் நாவையும், வயிற்றையும் அடக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். 45 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் கொண்ட பெண்கள் குண்டாக இருந்தால், மார்பகப் புற்று நோய்க்கு அவர்கள் தங்களை அறியாமல் அழைப்புவிடுகின்றார்கள் என்றே அர்த்தம்.

கொடியைப் போன்ற இடை உடையவளாகப் பெண் இருக்கவேண்டும் என நம் கவிஞர்கள் காலங்காலமாய் பாடிவருவது சரி என்றே தோன்றுகிறது.

உடலின் நடுப்பகுதியையே இடுப்பு அல்லது இடை என்ற காரணப் பெயரால் அழைக்கிறோம். பெண்களின் இடுப்பைச் சுற்றிக் கொழுப்புச் சேர்ந்து அங்கே குண்டாகிவிட்டால், அபாய மணி அடிக்க ஆரம்பித்து விடும்; மார்பகப் புற்றுநோய் அவர்களைத் தேடிவரும்.

விஞ்ஞானம் வியக்கத்தக்க அளவில் வளர்ந்துள்ள இன்றைய உலகில் குழந்தைகளைப் பெறுவதைப் பல வழிகளில் தள்ளிப் போட முடிகிறது. இந்தியா, சீனா போன்ற நாடுகளில் அரசாங்கங்களே குழந்தைப் பேற்றை ஒத்திவைக்குமாறு இடைவிடாமல் பிரசாரம் செய்கின்றன.

இங்கேதான் அபாயம் இருக்கிறது. குழந்தை பெறாத பெண்களுக்கு மார்பகங்களில் புற்று நோய் வருவதற்கான சாத்தியம் அதிகம். இவர்களுடன் ஒப்பிட்டால், மற்ற தாய்மார்களுக்கு இந்த அபாயம் குறைவு.

வியப்பான மற்றோர் உண்மையும் உள்ளது. ஒரு பெண்மணி ஒவ்வொரு பிரசவத்தின் பிறகும் மார்பகப் புற்று நோய் அபாயத்திலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டுக் கொண்டே போகிறாள்.

கூடுதலாகப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் மூலமாகவும் அவளுக்கு 18 சதவீதப் பாதுகாப்புக் கிடைக்கும்.

நீங்கள் நிறைய குழந்தைகளைப் பெற்ற தாய்மாரா? உங்களுக்கு மார்பகங்களில் புற்று நோய் ஏற்படுவதற்கான அபாயம் மிக மிகக் குறைவு!

பெண்களுக்கு மாதவிடாய் பொதுவாக 45 வயதுக்கும், 50 வயதுக்கும் இடையே இறுதியாக நின்று போகும். சிலருக்கு ஐம்பது வயதான பிறகும் மாதவிடாய் நிற்காது.

50 வயதுக்குப் பிறகும் மாதவிடாய் ஏற்படுகிற பெண்களுக்கு மார்பகங்களில் புற்றுநோய் தாக்கும் அபாயம் ஒவ்வோர் ஆண்டாக அதிகரித்துக் கொண்டே போகும்.

வருடத்திற்கு 5 சதவீதம் என்ற அளவில் அபாயத்தின் கடுமை அந்தப் பெண்களுக்குக் கூடுதல் ஆகும்.

இரத்த ஓட்டத்தில் கலந்து, உடல் உறுப்புகளை உசுப்பி விடுகிற உட்சுரப்புகளை ஓமோன்கள் என விவரிக்கிறோம். இவை சம்பந்தமாகப் பல புதிய கண்டுபிடிப்புகள் தொடர்ந்து வெளியாகின்றன. ஓமோன்களுக்கும், மார்பகப் புற்று நோய்க்கும் தொடர்பு உண்டு என்று தோன்றுகிறது.



அத்துமீறி பரவிவிட்ட மார்பகப் புற்று நோயை விளக்கும் மார்பக வெட்டு முகப் படம்.

மாற்று ஓமோன் சிகிச்சை செய்து கொள்ளும் பெண்களுக்கு, இதர பெண்களை விட மார்பகப் புற்று நோய் அபாயம் இருமடங்கு அதிகம்.

குண்டாக இருக்கும் பெண்களின் சில ஓமோன்கள், அவர்களது மாதவிடாய் இறுதியாக நின்று விடுகிற பிறகு, மார்பகங்களில் புற்று நோய்க்கு வழிவகுக்கக்கூடும்.

ஒரு குடும்பத்தில் ஏற்கனவே ஒரு பெண்மணிக்கு மார்பகங்களில் புற்றுநோய் தாக்கி இருக்கிறது என்றால், அவருடைய பெண்ணுக்கு, பேர்த்திக்கு அல்லது சகோதர வழி மருமகளுக்கும் இந்த நோய் வரும் அபாயம் நிச்சயமாக உள்ளது.

பொதுவாக, எல்லாப் பெண்களுக்குமே இந்த வகைப் புற்றுநோய் ஏற்படக் கூடிய சாத்தியம் அடிப்படையாக உண்டு. ஆனால், குண்டுப் பெண்களுக்கும் பிள்ளை பெறாதவர்களுக்கும், உயரமான மாதர்களுக்கும் அபாயம் அதிகமாகவே இருக்கின்றது.

உயரம் அல்லது குள்ளம் என்பது இயற்கையின் கட்டளை. அதை மீறுவது மிகவும் சிரமம்.

ஆனால், நவீன நாகரிகம் என்ற பெயரால் செயற்கையான — பெண்மைக்கு விரோதமான — விவகாரங்களை உறுதியுடன் புறக்கணித்து, இயற்கையோடு இசைந்து வாழும் பெண்கள் மார்பகப் புற்றுநோய் அபாயம் நெருங்காமல் அமைதியாக இருக்க முடியும்.

அளவோடு சாப்பிடுங்கள் என்பதும், திருமணம் ஆனதும் அவசியம் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்பதும் மார்பகப் புற்று நோயைத்தவிர்க்க விரும்பும் பெண்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டிய இரண்டு அறிவியல் பொன் மொழிகள் ஆகும். ★

**மார்பகப் புற்று நோய் குறித்து சிங்கப்பூரில் சமீபத்தில் நடந்த ஓர் ஆய்வின் முடிவுகளின் அடிப்படையில் இக்கட்டுரை மஞ்சரியில் வரையப்பட்டிருந்தது.**

## நோய் எங்கு ஏற்படுகின்றது?

மார்பகப் புற்றுநோய் மார்பகத்தில் எந்தப்பகுதியில் அதிகமாக ஏற்படுகின்றது என்பது குறித்து மேல் நாட்டு மருத்துவர்கள் ஓர் ஆய்வை நடத்தி முடித்திருக்கின்றார்கள். இதற்காக இரண்டு மார்பகத்தில் ஒவ்வொன்றையும் ஐந்து பகுதிகளாக அவர்கள் பிரித்தனர். மார்பகக் கிண்ணத்தை நான்கு கால் பகுதிகளாகவும், முலைக் காம்பை அண்டிய வட்டப் பிரதேசத்தையும் சேர்த்து ஐந்து பிரிவுகள் வகுக்கப்பட்டன. இப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் புற்று நோய் ஏற்படுவதற்கானவாய்ப்புகள் வருமாறு:-

★ மேல், வெளி கால் பகுதி — 45%

★ மேல், உள் கால் பகுதி — 15%

★ கீழ், வெளி கால் பகுதி — 10%

★ கீழ், உள் கால் பகுதி — 5%

★ முலைக்காம்பு மற்றும் அண்டிய பகுதிகள் — 25%

## பெண்களைப் பலி கொள்ளும் நோய்

★ உலகில் வருடம் தோறும் சுமார் மூன்று லட்சம் பெண்கள் மார்பகப் புற்று நோயால் உயிரிழக்கின்றனர்.

★ இருபத்தியைந்து பெண்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் மார்பகப் புற்று நோயால் உயிரிழப்பு ஏற்படுகின்றது. கடந்த ஐம்பது, ஆறுபது ஆண்டுகளாக இந்த நிலைதான். இதில் மாற்றமில்லை.

★ பிரிட்டனில் மாத்திரம் வருடத்துக்கு பத்தாயிரம் பெண்கள் மார்பகப் புற்று நோய்க்குப் பலியாகின்றார்கள்.

★ ஆஸ்திரேலியாவில் வருடம் தோறும் ஆயிரம் பெண்களுக்குக் குறையாமல் இந் நோய் பலி எடுக்கின்றது.

# மார்பகப் புற்று நோய் உங்களுக்கு உள்ளதா?

பெண்மணிகளே!


உங்களுக்கு மார்பகப் புற்று நோய் உள்ளதா என்பதை நீங்களே பரிசோதித்துக் கொள்ளலாம். அதற்கு இலகுவான வழிகள் இவை!



படம் - 1

### 1. குளியலறையில்:-

குளிக்கும் போது உங்கள் மார்பகங்களை நீங்கள் பரிசோதிக்கலாம். நனைந்த மார்பக சருமத்தின் மீது — விரல்களைத் தட்டையாக வைத்து — வலது மார்பகத்தை இடது கையினாலும், இடது மார்பகத்தை வலது கையினாலும் — மார்பகத்தின் அனைத்துப் பகுதிகளையும் மென்மையாகத் தடவுங்கள். (படம் 1) மார்பின் எப்பகுதியிலாவது கட்டி, வீக்கம் அல்லது தடித்த பகுதி இருக்கின்றதா என்பதைக் கண்டறியுங்கள்.




படம் - 2

### 2. கண்ணாடி முன் -:

இரு கைகளையும் இடுப்பில் வைத்தவாறு உங்கள் மார்பகங்களைப் பரிசோதியுங்கள்.

பின்னர் உங்கள் இருகைகளையும் நேராகத் தலைக்கு மேல் உயர்த்தி உங்கள் மார்பகங்களில் இயற்கை அமைப்பில் ஏதாவது மாறுதல்கள் ஏற்பட்டுள்ளனவா என்பதைக் கவனியுங்கள். (படம் 2, படம் 3) உங்கள் மார்பகங்களில் வீக்கம், சருமத்தில் பள்ளம், முலைகளில் ஏதாவது மாற்றங்கள் இருக்கின்றதா என்பதை அவதானியுங்கள்.



படம் - 3


உங்கள் உள்ளங்கைகளை விரித்து இடுப்பில் வைத்து உங்கள் நெஞ்சுத் தசைநார்கள் புடைக்குமாறு செய்து மார்பகங்களுக்கிடையே வித்தியாசம் ஏதும் இருக்கிறதா என்பதை அவதானியுங்கள்.

(சில பெண்களுக்கு மார்பகங்கள் இரண்டும் ஒரே மாதிரியாக அமைவதில்லை என்பது வேறு).

தொடர்ந்து இவ்வாறு பரிசோதிப்பதன் மூலம் உங்கள் மார்பகங்களின் வழமையான அமைப்பைக் கண்டறியலாம். மேலும் உங்கள் பரிசோதனையில் உங்களுக்கு ஒரு நம்பிக்கையும் ஏற்படும்.


### 3. படுத்தவாறு:-

உங்கள் வலப்புற மார்பகத்தைப் பரிசோதிப்பதற்கு ஒரு தலையணையை அல்லது மடித்த துவாயை வலது தோளின் கீழ் வைப்பதுடன் உங்கள் வலது கையை தலைக்குப் பின்புறமாக வைக்க வேண்டும். (படம் 4) இவ்வாறு செய்வதால் உங்கள் மார்பக தசைநார்கள் நெஞ்சின் மீது சம அளவில் வியாபிக்கின்றன.



படம் - 4

உங்கள் இடது கைவிரல்களைத் தட்டையாக வைத்து மணிக்கூட்டு வளமாக சிறிய வட்ட வடிவில் இலேசாக அழுத்தவும். மார்பகத்தின் வெளிப்புற மேற்பகுதியை 12.00 மணி என நினைத்து அந்த இடத்திலிருந்து மணிக்கூடு வளமாக இலேசாகவட்டமாக அழுத்தவும். (படம் 5) மார்பகங்களின் கீழ்வளைவு சாதாரணமாக அனைவருக்கும் மேடு போன்று இருக்கும். இப்போது வெளிப் புறத்தில் இருந்து ஓர் அங்குலம் விரல்களை உட்புறமாக அசைத்து மீண்டும் முன் போலவே வட்டமாக இலேசாக அழுத்தவும். இவ்வாறு மீண்டும் உட்புறமாக முலையை நோக்கி கையை அசைத்து மீண்டும் வட்டமாக — லேசாக அழுத்தவும். இவ்வாறு செய்வதன் மூலம் உங்கள் மார்பகத்தின் ஒவ்வொருபாகமும் பரிசோதிக்கப்படுகிறது. மார்பகத்தின் வெளிப்புறத்திலிருந்து முலை வரை ஆகக் குறைந்தது மூன்று வட்டச் சுற்றுக்களாக அழுத்துவதன் மூலம் இப் பரிசோதனையை முடிக்கலாம்.



படம் - 5

வலது மார்பகத்தைச் சோதிக்கப் பின்பற்றிய அதே நடைமுறைகளை இடது மார்பகத்தைச் சோதிக்கும் போதும் அனுசரிக்கவும். உங்

இறுதியாக பெருவிரல் மற்றும் ஆள்காட்டி விரல்களால் இரு முலைக்காம்புகளையும் இலேசாகப் பிதுக்கவும். (படம் 6) பாலூட்டாத காலத்தில் முலையிலிருந்து வெளிவரும் திரவம் எத்தகையதாக இருப்பினும் அது குறித்து உடனடியாக டாக்டரிடம் தெரிவிக்க வேண்டும்.

மேற்கண்ட பரிசோதனைகளில் உங்கள் மார்பகங்களில் கட்டி, தடிப்பு, வீக்கம் போன்றவை இருப்பதாக சந்தேகம் ஏற்படுமானால் உடனே டாக்டரின் உதவியை நீங்கள் நாட வேண்டும். ★



படம் - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் போராற்றலை குறைப்பதில் அரச படைகள் வெற்றி காணவில்லை!

## நழுவும் போக்கால் தமது பலத்தை பாதுகாத்துக் கொள்ளும் புலிகள்

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பரப்பில் அதிகமான பகுதியைக் கைப்பற்றுவதில் அரச படைகள் வெற்றி கண்ட போதிலும் விடுதலைப் புலிகளிடம் உள்ள போர் ஆற்றலைப் பெரிய அளவில் பலவீனப்படுத்துவதில் அரச படைகளால் இன்னும் வெற்றிபெற முடியவில்லை என்பதை தாண்டிக்குளம் இராணுவ முகாம் மீதான தாக்குதல் எடுத்துக்காட்டுகிறது.

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைவிட நேர்ந்த வேளையில் அவர்கள் சாதாரண கெரில்லா அமைப்பை விட ஒரு நிரந்தர இராணுவத்திற்குரிய போர் ஆற்றலைக் கொண்ட சக்தி மிக்க கெரில்லா அமைப்பாக வளர்ந்திருந்தனர்.

### புலிகளின் ஆற்றலைக் குறைக்க முடியவில்லை

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப்பாணத்தை அரச படைகளால் கைப்பற்ற முடிந்த போதிலும் —

மறைந்திருந்து சிறு தாக்குதல்களை மாத்திரம் மேற்கொள்ளக் கூடிய அளவிற்கு விடுதலைப் புலிகளின் ஆற்றலை அரச படைகளால் குறைக்க முடியவில்லை.

தாண்டிக்குளம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் பற்றி கருத்து வெளியிட்ட பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த —

''விடுதலைப் புலிகள் இவ்வாறான ஒரு தாக்குதலை மேற்கொள்ளக் கூடும் என்பதை எமது படையினர் நேரகாலத்துடன் அறிந்திருந்தனர். இதனால் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொள்ள இடமளிக்காமல் தீவிரமான பதில் தாக்குதலை மேற்கொள்ள முடிந்தது. தமக்கு ஏற்பட்ட இழப்புகள் போன்ற பத்துமடங்கு இழப்புகளை எதிரிக்கு ஏற்படுத்துவதில் இராணுவம் வெற்றி கண்டது. எதிரியின் ஒன்றுபட்ட பலத்திலும் பார்க்க எமது கூட்டுப் படைகளின் வால் கூட சக்தி மிக்கது என்பது இந்த முறியடிப்பின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது''

— எனத் தெரிவித்திருந்தார்.

### உண்மை நிலை வேறு

இருப்பினும் சம்பவத்தின் உண்மை நிலை அமைச்சர் எடுத்தியம்பும் காட்சிகளை விட பெரிதும் மாறுபட்டது என்பது மிகவும் தெளிவான ஒன்றாகும்.

இந்தத்தாக்குதலானதுஇராணுவக் காவல் நிலையம் அல்லது பொலீஸ் காவல் நிலையம் போன்ற ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அல்ல.


'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைக்கான விநியோகத் தலைமையகமாக விளங்கிய பிரதான இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும்.

### இழப்பு விவரம்

தற்போது கிடைத்துள்ள இறுதி ஐந்தொகையின்படி படையினர் தரப்பில் 180 பேர் கொல்லப்பட்டுள்ளனர். காணாமற் போனோர் தொகை 27 ஆகும். காயமடைந்தோர் சுமார் 600 பேராவர்.

இவற்றிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரைக் கொண்ட இராணுவ முகாம் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

காயமடைந்தோரில் கடுமையான காயங்களுக்கு உட்பட்டோர் எத்தனை பேர் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் 320 படையினர் காயமடைந்தனர் எனவும் அவர்களில் 90 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதன்படி இராணுவம் சுமார் 300 பேரை இழந்துள்ளது என்பது தெளிவாகிறது.



பிரபாகரன்

இவற்றிற்கு மேலதிகமாக பெருந் தொகையிலான ஆட்லறி ஷெல்கள், ஏனைய ரகங்களைச் சேர்ந்த பெருந் தொகையான ரவைகள், 3 யுத்த டாங்கிகள், 3 ஆட்லறிகள், வாகனங்கள் ஆகியனவற்றையும் இராணுவம் இழந்துள்ளது. இராணுவம் பொருளாக இழந்தவற்றின் பெறுமதி மாத்திரம் 20 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்பட்டுள்ள பெருமளவிலான இழப்புக்களை சர்வ சாதாரணமாக நாம் எடுத்துக் கொள்ளமுடியாது. மறுபுறத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்களானது தமது இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புக்களைப் போல் பத்து மடங்கானது என பாதுகாப்பு அமைச்சர் வெளியிடும் அறிவிப்பிலும் எதுவித உண்மையும் இல்லை.

### இரு குறிக்கோள்கள்

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரை தரைவழி விநியோகப் பாதையை உருவாக்குவதே 'வெற்றிஉறுதி' இராணுவ நடவடிக்கையின் முக்கிய குறிக்கோளாகும்.

அத்துடன் இந்த நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளைப் போருக்கு அழைத்து முடிந்தளவு புலிகளை அழிப்பதன் மூலம் அவர்களின் போராற்றலைப் பலவீனப்படுத்துவதும் இந்த நடவடிக்கையின் மற்றுமொரு எதிர்பார்ப்பாகும்.

ஆனால் விடுதலைப்புலிகள் இராணுவ நடவடிக்கைக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் கொள்கையினை அனுசரித்த போதிலும், தமக்குப் பெரிய அளவிலான இழப்புக்களை உருவாக்கக்கூடிய சண்டைகளில் ஈடுபடும் போக்கைக் கடைப்பிடிக்கவில்லை.

இருபதாயிரம் படையினருடன் மேற்கொள்ளப்படும் 'வெற்றி உறுதி' நடவடிக்கையை முற்றிலுமாகத் தடுக்கும் ஆற்றல் விடுதலைப் புலிகளிடம் இருக்கும் எனக் கூறமுடியாது.

இவ்வாறான சூழ்நிலையில் நேருக்கு நேர் மோதும் கொள்கையை அனுசரிப்பதற்குப் பதிலாக, [illegible] யுத்த இயந்திரத்திற்குப் பலத்த சேதம் ஏற்படாத விதத்திலும் அரசயுத்த இயந்திரத்திற்கு பலத்த சேதங்களை விளைவிக்கும் விதத்திலும் தாக்குதல் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் மேற்கொள்ளுகின்றனர்.

இதன் மூலம் யுத்த தந்திரோபாயங்களை ஏதோ ஒரு விதத்தில் கையாண்டு வெற்றியைத் தமதாக்கிக் கொள்ளுவதில் விடுதலைப் புலிகள் வெற்றிகளைப் பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

### இராணுவ வெற்றி அல்ல இது!

தாண்டிக்குளம் இராணுவ முகாமைக் கைப்பற்றி 28 மணித்தியாலங்களுக்குப் பின்னர் மீண்டும் அப்பகுதியை அரச படைகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததை இராணுவத்திற்குக் கிடைத்த வெற்றி எனக் கருத முடியாது. இவ்வாறான தாக்குதல்களை மேற்கொண்டு தாம் கைப்பற்றிய இடங்களைத் தக்கவைத்திருப்பது விடுதலைப் புலிகளின் எண்ணம் அல்ல, முடிந்தளவு அதி உச்ச சேதங்களை விளைவித்து விட்டு கைப்பற்றிய இடத்தைக் கைவிட்டுச் செல்வது அவர்களது சாதாரண வழக்கமாகும். இங்கும் (தாண்டிக்குளத்திலும்) இதுவே இடம் பெற்றுள்ளது.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை இறுதி இலக்கை எட்டு முன்னர் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறலாம் என எண்ண இடமுண்டு. அவ்வாறான ஒவ்வொரு தாக்குதலிலும் முடிந்தளவு இழப்புகளை அரச படைகளுக்கு ஏற்படுத்தலாமே ஒழிய இராணுவ நடவடிக்கையின் குறிக்கோளை முற்றிலுமாக விடுதலைப் புலிகளால் தடுக்க முடியும் எனக் கூறமுடியாது.

### தக்க வைக்கமுடியுமா?

அதிக விலை கொடுத்து வவுனியா - யாழ்ப்பாணம் தரைவழிப் பாதையைக் கைப்பற்ற இராணுவத்தால் முடிந்தாலும் மீண்டும் அவ்வாறான நீண்ட தரைவழிப் பாதையைத் தக்கவைத்திருப்பது தரைவழிப் பாதையைக் கைப்பற்றியதிலும் பார்க்கக் கடினமானதாகும்.

யுத்தத்தில் கிடைக்கும் வெற்றி தோல்விகளைக் கொண்டு ஆட்சி செய்வதே அரசாங்கத்தின் திட்டமாகும். வேறு எந்த அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தாவிடினும் விடுதலைப்புலிகளை யுத்த ரீதியில் தோற்கடிப்பதில் அரசு வெற்றி காணுமாயின் அது ஒரு சாதனையாக மட்டும் அமைந்தாலும் அந்த ஒன்று மட்டுமே அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குப் போதுமானது எனக் கூறலாம்.



அனுருத்த ரத்வத்தை

> கடந்த மாதம் தாண்டிக்குளத்தில் புலிகள் நடத்திய ஊடறுப்புத் தாக்குதலுக்குப் பின்பு - பெரியமடு ஊடறுப்புத் தாக்குதலுக்கு முன்னர் - இந்தக் கட்டுரை 'ராவய' சிங்கள வாரஇதழில் பிரசுரமாகியிருந்தது.
>
> 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை தனது இறுதி இலக்கை எட்டுவதற்கு முன்பதாக தாண்டிக்குளம் தாக்குதல் போன்று மேலும் பல தாக்குதல்களைப் படையினர் எதிர்கொள்ள இடமுண்டு என்று இக்கட்டுரையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதே போன்று பெரியமடுவில் ஊடறுப்புத் தாக்குதல் ஒன்றைப் புலிகள் மேற்கொண்டனர்.
>
> அதிக விலை கொடுத்து வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையை இராணுவம் கைப்பற்றினாலும் அதைத் தக்க வைத்திருப்பது தரைவழிப் பாதையைக் கைப்பற்றுவதிலும் பார்க்கக் கடினமான ஒன்றாக இருக்கும் என்றும் இக்கட்டுரை கூறுகின்றது.
>
> 'ராவய' சிங்களக் கட்டுரையைத் தமிழில் தருகின்றார்: **கஜனி**

இருப்பினும் —

போருக்காகச் செலவிடப்படும் செலவினம் இரண்டு, மூன்று மடங்குகளாக அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும்—

யுத்தம் நவீன படை பலங்கள் பிரயோகிக்கப்படும் யுத்தமாக உருவெடுத்துள்ள போதிலும் —

விடுதலைப்புலிகளின் யுத்த இயந்திரத்தைப் பெரிய அளவில் பலவீனப்படுத்துவதில் அரசு வெற்றி காணவில்லை.

### அதிக நிலப்பரப்பு கிழக்கில் இழப்பு

வட பகுதியில் பிரதேசங்களை மீண்டும் கைப்பற்றுவதில் அரச படைகள் வெற்றி கண்டபோதிலும் வடக்கில் இழந்த நிலப் பரப்பிற்கும் மேலான நிலப் பரப்பைக் கிழக்கில் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளதைக் காண முடிகிறது.

இராணுவம் வடபகுதியைக் கைப்பற்றியபோது கூட விடுதலைப் புலிகள் நேருக்கு நேர் மோதும் கொள்கையை அனுசரிக்கவில்லை; அதற்குப் பதிலாக நழுவும் கொள்கையை அனுசரித்தனர். அதன் மூலம் தங்கள் யுத்த இயந்திரம் பலவீனமடையாமல் பாதுகாக்க அவர்களால் முடிந்தது.

கெரில்லா அமைப்பு ஒன்றுக்கு எதிராக நடத்தப்படும் யுத்தத்தில் அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள நிலப்பரப்பைக் கைப்பற்றுவது இலகுவாக இருப்பினும் அவ்வாறு கைப்பற்றிய பிரதேசத்தைத் தொடர்ந்து தக்க வைத்திருப்பது கடினமான காரியமாகும். கைப்பற்றப்படும் நிலப்பரப்பு அதிகரிக்க அதிகரிக்க அதைத் தக்கவைக்கத் தேவையான ஆளணித் தேவையும் அதிகரிக்கும். படையினரின் சக்தி பரவலாக்கப்படும் போது படையினருக்கு எதிராக ஒரு கெரில்லா அமைப்புத் தாக்குதலை மேற்கொள்ள இருக்கும் வாய்ப்புகளும் அதிகரிக்கும்.

### அதிகாரப் பரவலாக்கல்

சிறுபான்மையினரைத் திருப்திப்படுத்தும் விதத்தில் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டிய தேவை அரசுக்கு இருப்பினும் அதை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்ற பெரிய பிரச்சினையை அரசு எதிர் நோக்குகிறது.

ஒன்றில் விடுதலைப் புலிகள் அமைப்பு முற்றிலுமாக அழிக்கப்பட்டு அதற்கு மாற்றீடான அரசியல் தலைமை முன்னெடுக்கப்பட வேண்டும். அன்றேல் விடுதலைப் புலிகளுடன் உடன்பாடு எட்டப்பட்டு அதன் மூலம் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளை முற்றிலுமாகத் தோற்கடிப்பது எவ்வாறு கஷ்டமானதோ அவ்வாறே அவர்களுடன் உடன்பாடு காண்பதும்கஷ்டமான காரியமாகும்.

இருப்பினும் இவற்றில் ஏதாவது ஒன்றை மேற்கொள்வதில் அரசு வெற்றி காணமுடியாமல் போகுமாயின் அரசின் எதிர்காலம் குழப்பம் நிறைந்த ஒன்றாக உருவாவதைத் தடுக்க முடியாது.

★ ★ ★


வவுனியாவிலிருந்தும் வெலி ஓயாவிலிருந்தும் புளியங்குளத்தை நோக்கி முன்னேறும் படையணிகள் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பையும் மீறி புளியங்குளத்தை அடைந்து அங்கு இணைவதுடன், தமது முன்னைய நிலைகளிலிருந்து புளியங்குளம் வரை தொடர் பாதுகாப்பு அரண்களை அமைத்துப் பேணுமாயின் —

வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையே விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைத் தடுக்கலாம் என்பது இராணுவத்தின் நோக்கம்.

இதனால் புளியங்குளத்தைக் கைப்பற்றுவதும் அதைத் தடுப்பதும் இரு தரப்புக்கும் மிக முக்கியமான ஒரு விடயமாக அமைந்துள்ளது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாதாளத்தில் குழந்தை!

என்றும் போல இன்றும் இனிதாக விடிகிறது. இளங் காலை வேளை. நல்ல இதமான சூடான சாலநிலை. மெல்லத் தென்றல் தாலாட்டும் நேரம். அந்த இளங் குடும்பம் குதூகலமாக — அன்றும் —வழமைபோலச் செயற்படுகிறது.

ஆம், 'போட்டர்' என்றால் அந்தச் சுற்றாடலிலே எல்லாருக்கும் பிடித்தமான மனிதன். அதுவும் கலிபோர்ணியாவில் மனித மனங்களை வென்று வாழ்வதென்றால் சொல்லவா வேண்டும்? அவன் ஒரு வீட்டுக் கட்டட ஒப்பந்தக்காரன்; ஆணழகன்.

வழமைபோல அன்பு மனைவியையும் மழலைகள் இரண்டையும் முத்தமிட்டு வேலைக்குப் புறப்பட்டு விட்டான், கணவனை வழியனுப்பிவிட்டு சுறுசுறுப்பாக சமையலில் இறங்கினாள் அவள். பிள்ளைகள் இருவரும் வளவில் ஆனந்தமாக விளையாடிக்கொண்டு நிற்கிறார்கள். அவர்களின் விளையாட்டில் இனிமையும் உவகையும் பொங்கிட ரசித்தபடியே தனது அலுவல்களைப் பார்த்துக் கொண்டு இருந்தாள் அந்தத் தாய்.

நான்கு வயதுச் செல்வ மகள் குயின்சிஆன். அவளுடன் கட்டிப்பிடித்தும் தள்ளாடி நடைநடந்து ஓடிப் பிடித்தும் விளையாடும் 15 மாத தளிர் கிறிஸ்தோபர். இருவரின் விளையாட்டில் எத்தனை லாவகம்? மீண்டும் ஜன்னல் வழியே வெளியே பார்த்தவளுக்கு 'திக்' என்றது.

## கண்பட்டதோ ?

ஆம்! குயின்சி மட்டும் தனியே நின்று விளையாடிக் கொண்டிருக்கிறாள். கிறிஸ்தி எங்கே?

போட்டது போட்டபடியே கைவிட்டு வெளியே ஓடி வந்தாள் அவள்.

''கிறிஸ்தி! கிறிஸ்தோபர்!'' — சத்தமிட்டுக் கூப்பிட்டாள்.

எங்கும் அவன் கண்ணில் படவில்லை. அதிக தூரம் போயிருக்க வாய்ப்பில்லை. இப்போது நின்றானே!

குயின்சியிடம் கேட்டுப் பார்த்தாள்; துடித்தாள்; பதறினாள். விளையாட்டில் ஆழ்ந்திருந்த குயின்சிக்கு இவளின் கேள்வி உறைப்பதாக இல்லை. கிறிஸ்தோபர் போன இடமும் புரியவில்லை.

தாயின் தவிப்பைச் சொல்லவா வேண்டும்? எல்லா இடமும் தேடிவிட்டாள். எங்கே மாயமாய் மறைந்து விட்டான் என்று தவித்த போதுதான் அது கண்ணில் பட்டது.

## இயேசுவே!

போட்டர் அமைத்துக் கொண்டிருந்த குழாய்க் கிணற்றில் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் இடிகட்டை — அந்த இரும்புக் குழல் அருகே வர வர கிறிஸ்தியின் சப்பாத்துத் தடங்கள்! இயேசுவே காப்பாற்றும்!

நிலத்தில் எட்டு அங்குலம் மட்டுமே விட்டம் கொண்ட துவாரம். அதனூடே இருபது அடிக்கும் மேலாக கீழே இறங்கும் இடிகட்டை. அதன் நுனியில் ஒரு துளைப்பான். இரு கூரிய வளைவு கொண்ட உருக்கு முனைகளைக் கொண்ட துளைப்பான்.

பத்துக் கிலோ எடை கொண்ட ஒரு குண்டுத் தம்பி கிறிஸ்தி. அவன் இதன் ஊடாகப் புகுந்திருக்க வாய்ப்பே இல்லை. அவளுக்கு அதில் நம்பிக்கை. அப்படியென்றால் கிறிஸ்தி எங்கே?

துவாரத்தினூடே பார்க்க முயன்றாள். தலையை நேரே கொண்டு போக குழல் விடவில்லை. என்றாலும் உள்ளே இருள் மட்டும் தெரிந்தது. அந்தஇருளில் ஆழ இறங்கும் குழல் சில அங்குலங்களில் மறைந்து விட்டது.

கிறிஸ்தோபர் நடந்து வந்து தகப்பனைப்போலவே இந்தக் குழலைப்பிடித்து உலுப்பி இருப்பான். கால்கள் துவாரத்தில் அகப்பட்டு சறுக்கி... குழலைப் பிடித்த பிடி வழுக்கி...... அவளால் கற்பனைகூட செய்ய முடியவில்லை.

வாசலிலே காது கொடுத்துக் கேட்டாள். ஆம்! உள்ளிருந்து கிறிஸ்தோபரின் அழுகுரல்தெளிவாகக் கேட்கிறது. மனதில் புயல் புகுந்து கொண்டது. தொண்டை வரண்டு விட்டது.

எங்கள் ஊர்க் கிணறுகளும், அவற்றில் விழும் குழந்தைகளும் கொடுத்து வைத்தவர்கள்தான். சுற்ற வர நின்று கத்தும் தாய் மாரும்தான்.

ஜாக்கிரதை! இங்கும் குழாய்க் கிணறுகள் தாராளமாக முளைக்கின்றன. தவறி விட்டால் கைகழுவி விட வேண்டியதுதான். மீட்புப் பணி என்ற பேச்சுக்கே இடமில்லை.

பிசாசுபோல வீட்டுக்குள் ஓடி வந்தவள் தொலைபேசியிலிருந்த றிசீவரைப் பிடுங்கிக் கொண்டாள். — 911.

''ஹலோ 911. ஹெல்ப்! மை பேபி இஸ் டவுண் த ரியூப் வெல்!'' கேட்டவன் காது மறுமுனையில் கிழிந்திருக்கும்!

## மேலே...

குயின்சியைக் கட்டி அணைத்தபடி முழந்தாளில் மண்டியிட்டு, கிணற்றுக்கு அருகே உரத்த குரலில் தொழுதபடி உலகை மறந்து தவிக்கிறாள் அவள். உலகில் எந்தத் தாய்க்கும் இப்படி ஒரு சோதனை வரக்கூடாது.

அம்புலன்ஸ் குழுவுடன் வந்து நின்றது. தீயணைப்புப் பணியினர் தமது வாகனத்துடன் வந்துவிட்டனர். எதையும் உணரத்தக்க

**மு. சிவநேசன்**

நிலையில் இல்லாமல் தாய் மனம் தணலாகக் கனன்று கொண்டிருந்தது.

அயல் கூடிவிட்டது. மேலே தவிப்பவர்கள் எல்லாரும் உடன் செயற்பட்டாகவேண்டும். இருபது அடி ஆழத்தில் இருளில் கல்லும், மண்ணும் குடைந்த குழலுருவான பூமி வெளியில்—இடுக்கில் — குழந்தை......

'றொப்' என்ற 27 ஆவது தீயணைப்புப் பொறியியலாளர். நிலத்தில் குப்புறப் படுத்துக்கொண்டான். அவனது முகம் துவாரத்துக்கு நேரே இருந்தது.

'ஹேய்! கிறிஸ்தோபர்!'

சாதாரணமாகவே கிணற்றில் எதிரொலிக்கும் குரல்... இதனுள் குழந்தையை எட்டியதா?... ஆம். குழந்தையின் விம்மலில் ஏற்பட்ட மாற்றம் அதனைத் தெளிவு படுத்தியத்,

இருளின் ஊடே டோர்ச் வெளிச்சத்தைப் பாய்ச்சினான்அவன். மிகஆழத்தில்— ஆம் 20 அடி இருக்கலாம் — கிறிஸ்தோபரின் தலை — உச்சி — மயிர்கள்— கைவிரல்கள் மட்டும் தெரிகின்றன.

காட்சி அவன் இதயத்தைப் புரட்டி எடுத்தது. நல்ல வேளை தலைதான் மேலே நிற்கிறது. குழந்தை தலைகீழாக இல்லை. ஆழத்தில் ஒடுக்கத்தில் ஒரு சுவாசத்துக்கு காற்று வாய்ப்பாக இருக்காது. மெல்லிய ஓசைகள் மூச்சுத் திணறலை உணர்த்தின.

படுத்திருந்தபடியே உத்தரவுகளைப் பிறப்பிக்கிறான் 'றொப்'. மிகவும் அவதானமாக ஒரு றப்பர் குழாய் இறக்கப்படுகிறது, அது கிறிஸ்தியின் தலையை எட்டும் அளவில் — ஒரு [illegible] சிலிண்டருடன் [illegible] பொருத்தப்பட்ட நிலையில் — சிலிண்டரில் இருந்து உள்ளே காற்றுச் செலுத்தப்படுகிறது. மூச்சுத் திணறல் சத்தம் கேட்கவில்லை......

சுவருக்கும் அவனுக்கும் இடையில் இடைவெளி இருக்க வாய்ப்பு இல்லை. ஓரங்கள் உடைந்த கற்களாக இருக்கலாம். நடுவில் ஒரு குழல். குழலைத் தழுவியபடிதான் இவன் உள்ளே சறுக்கி இருக்கிறான் என்பது புரிகிறது.

எவரையும்அருகே நெருங்க விடவில்லை 'றொப்'. சிறு சிறு துகள்களாக மணல் விளிம்பில் இருந்து ஆழ விழுந்துகொண்டிருப்பதைத் தவிர்க்க அவனால் இயலவில்லை. பெரிதாக விழுந்தால் பிறகு பலன் ஏது?

பதறியடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான் போட்டர். 1980 இன் மார்கழி மாத நடுப்பகுதி அது. கோலாகலமான கிறிஸ்மஸ் ஆயத்தங்கள் நடக்கும்

> சுமார் எட்டே எட்டு அங்குல விட்டமான துவாரத்தைக் கொண்ட-- இருபது அடி ஆழக் குழாய்க் கிணற்றுக்குள் ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று அப்படியே விழுந்து விட்டால் எப்படியிருக்கும்? ஒரு தடவை கற்பனை பண்ணிப் பாருங்கள். சிறிய துவாரத்துக்கு ஊடாக நிலத்துக்கு அடியில் விழுந்து கிடக்கும் குழந்தையின் விசும்பல் சத்தத்தை மட்டும் கேட்டுக் கொண்டு சுமார் ஏழு மணி நேரம் அவலப்பட்டுக் கிடக்கும் ஒரு தாயின் நிலை எப்படிஇருக்கும் ......?

காலம். அலுவல்களில் — தொழிலில் — தீவிரமாக இருந்தவனுக்கு 11. 30 இற்குக் கிடைத்த செய்தி பேரிடியாக இருந்தது.

இடிகட்டையின் அடியில் பொருத்தி இருந்த ஆயுதத்தின் அமைப்பை அவன் றொப்பிற்கு விளங்கவைத்தான். மெல்ல குழலை மேலே உயர்த்திக் குழந்தையை எடுப்பதே வழி எனத் தெரிவித்தான்.

குழலைப் பக்கவாட்டில் உலாஞ்ச விடாமல், அதனைக் கட்டிப்பிடித்த பிடியில் தொங்கும் குழந்தையைக் கிணற்றுச் சுவரோடு அடிபடவிடாமல் மேல் நோக்கி, ஒடுங்கி வரும் இருபது அடிக்கும் மேற்பட்ட தூரத்துக்கு உயர்த்தி விடுவது சாத்தியமே இல்லை.

என்றாலும் ஒரு முயற்சி, நால்வர் குழலைப் பிடிக்க, [illegible] படம் எடுப்பது போல — இருளில் பாய்ச்சிய ஒளியில் — துளாவித் துளாவிக் கண்காணிக்க கட்டளை பிறப்பிக்கப்படுகிறது.

வண்! டூ! திறீ! தொடங்க ......நிறுத்து !

அசைய — அசைக்க —இடமில்லை.

ஆழத் தோண்டிய கிணற்றுக்குள் தண்ணீர் கசியத் தொடங்கிவிட்டால்நிலைமை என்னாகும் என்று நினைக்கவே பகீர் என்றது.

றொப்பின் பிடரியைப் பார்த்துக்கொண்டிருந்ததைத் தவிர வெளியே நின்றவர்களுக்கு வேறு வழியே இருக்கவில்லை.

நேரம் மூன்று மணியை எட்டிவிட்டது. சுமார் 3 மணித்தியாலங்களாக றொப் குப்புறப் படுத்தபடியே இமைக்கா விழிகளுடன் இருளைத் துளாவிக்கொண்டிருந்தான். தன்னை ஒய்வெடுக்கச் சொல்லி வற்புறுத்திய தோழர்களை புறந்தள்ளி - மகனைப் பார்க்கத் துடிக்கும் போட்டருக்கும் அந்தக் காட்சியைக் காட்டி கலங்க விடாமல் — மேலும் மண் உள்ளே சரிவதற்கான சாத்தியங்களைத் தவிர்க்க அனைவரையும் விலகச் செய்து அசையாமல் இருந்தான். அவன் மீன் பிடிக்கும் தூண்டில் போல — ஒரு நங்கூரம் போன்ற கருவியை நைலோன் கயிற்றில் கட்டி இறக்கிப் பார்த்தார்கள். அதைக் கிறிஸ்தி பிடித்தால் மேலே தூக்கிவிடலாமோ என்ற நப்பாசை.

மேலே ஒடுங்கிவரும்பாதையில் — சுலபமாகக் கீழே வழுக்கிவிட்ட கிறிஸ்தியை— நெருடித்தூக்கும் சாத்தியம் இல்லை. இரவும் குளிரும்

## இது ஓர் உண்மைச் சம்பவம்

நிலத்தடியில் பிள்ளையை என்ன செய்யுமோ? இருள முதல் ஏதாவது செய்தாக வேண்டும் என்றநிலைமை.

போட்டர் மனமும்' உடலும் களைத்துச் சோர்ந்து தன் மனைவியின் அருகிலே போய்தானும் பிரார்த்தனையில் கலந்து கொண்டான். வேறென்ன செய்ய இயலும்?

இடையிடையேகிறிஸ்திக்கு குரல் கொடுப்பதும் அவனிடமிருந்து ஒய்ந்து ஒய்ந்து வரும் முனகல் சமிக்ஞைகளைப் பெறுவதுமான றொப்பின் முயற்சிகள் தொடர்ந்தபடிதான் இருந்தன.

மணற்பாங்கான பகுதி. அருகே கனரக வாகனங்களை அனுமதிக்க முடியாது; சற்றுத் தொலைவில்—இயன்ற விரைவில்—ஆழந்தோண்டி— சுரங்கவழி அமைத்து—அவதானமாக-கிறிஸ்தியைஅடைதலே ஒரேவழி எனத் தீர்மானிக்கப்பட்டது.

மண்ணை அகழ்ந்து எடுக்கும் இயந்திரங்கள் இரண்டு அருகே உள்ள வெவ்வேறு ஒப்பந்தக் கம்பனிகளில் இருந்து தருவிக்கப்பட்டன. அவற்றைஇயக்கும் வல்லுநர்கள் இப்படி மட்டான ஓர் இடத்தில்—மணற்பாங்கான தரையில்—மரங்களின் வேர்களை ஊடறுக்கும் வகையில் —இருபது அடி ஆழத்துக்கு மண்ணை அகழ்வது சாத்தியம் இல்லை என்றே கருதினார்கள். இது தமது வாழ்வில் முயற்சித்திராத ஓர் இக்கட்டான அகழ்வுப்பணி எனக்கூறி அதனை ஆரம்பித்தனர் அவர்கள்.

அந்த இயந்திரம் மிகலாவகமாக — கடற்கரை மணலில் சிறுவர்கள் கையை வளைத்து — மண்ணைக் கோலி — வெளியே எடுத்து தள்ளிக் குவிப்பதுபோல, தனது பணியை செவ்வனே செய்து கொண்டிருந்தது.

எட்டு அடிமட்டுமே இறங்கியிருக்கும் வேளை—றொப் அகழ்வை நிறுத்தும்படி அவசரக் கட்டளை இட்டான். குழந்தை அசைவற்று இருந்தமை அவன் திகைப்புக்குக் காரணமாகிவிட்டது.

குழந்தையிடம் இருந்து ஏதாவது சமிக்ஞைகளைப் பெற — ஒரு விரல் அசைவை உணர—பெருமுயற்சி எடுத்தான் அவன். சில நிமிடங்கள் அனைவரும் செயலற்று நின்றனர்.

போட்டரையும் மனைவியையும் சமாதானம் செய்ய இயேசுவாலும் இயலவில்லை. வேறு வழியும் இல்லை. தொடர்ந்து அகழ்வினை மேற்கொள்ள றொப் அனுமதி வழங்கினான்.

மெல்ல இருள் கவியும் நேரம் நெருங்கப்போகிறது. சுமார் இருபத்து இரண்டு அடிவரை —எதிர் பார்க்கப்பட்ட கிறிஸ்தியின் மட்டம் வரை—அகழ்வு நடைபெற்று இருந்தது. மண் உள்ளே பொறிவதைத் தடுக்க உலோகத் தகடுகள் சுவருடன் அணைக்கப்பட்டன. ஒருவர் பின் ஒருவராக மூவர்—மனமும் உடலும் திடமான செயல் வீரர்கள் — சுரங்கம் போன்ற அத்திறக்கப்பட்ட பாதையூடாக இறங்கிக் கொண்டனர்.

## கீழே....

இவர்கள் இறங்கிய இடத்தில் அதே மட்டத்தில் குறித்த திசையில் சுமார் 10 அடி தூரத்தில் கிறிஸ்தி இருக்கிறான். இனி செயலில் இறங்க வேண்டும். இயந்திரங்கள் உதவிட முடியாத பணி தொடங்குகிறது.

சுவரை அணைத்து நிற்கும் உலோகத் தகட்டில் சுரங்க வழி அமைப்பதற்கான அளவான துளைகள் இடப்படுகின்றன. வெட்டப்பட்ட ஆழ்குழியின் சாய்வுகள் கணிக்கப்பட்டாலும்— கிறிஸ்தி இருக்கும் இடம் பற்றி எச்சரிக்கையாகவே செயற்பட வேண்டிய நிலைமை.ஒவ்வொருஅகழ்வும் மிக அவதானமாகஅவனுக்கு ஆபத்தைத் தராதவகையில் மேற்கொள்ளப்படவேண்டிய கட்டாயம் எழுகிறது.

அதேவேளை காலவிரயம் என்பதனையும் தவிர்க்க வேண்டிய நிலைமை. பயன்படுத்தும் அகழ்வு ஆயுதங்களே கிறிஸ்திக்கு இயமனாக வந்துவிடக் கூடாதே என்ற உணர்வு. மண்சரிவு, நீர்ப்பெருக்கு என்பவற்றுக்கும் இடம் கொடுக்கக் கூடாது.

மேலேயும் சரி கீழேயும் சரி எல்லோரும் தவிப்பின் விளிம்பிலே நின்றபடி செயற்பட வேண்டிய நிலைமை.

எதிர்பார்க்கப்பட்ட இடத்தில் கிறிஸ்தி தென்படாத போது—குழாய்க்கிணறு பிடிபடாதபோது சிக்கல் வலுக்கிறது. இருளில் இயங்கி இவர்கள் ஒளியைத்தேடுகின்றார்கள்.

இரண்டு மணித்தியாலங்கள் கடும் உடல் உழைப்பினால் தோண்டப்பட்ட சுரங்கவழியில் இடம் தெரியாமல் தவித்து நிற்கும் இவர்களின் களைப்பு உச்சத்தை எட்டி இருந்தது. இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டி — இடிகட்டை இரும்புக் குழலில் தட்டி உலோக ஒலியை எழுப்பும்படி மேலே நின்றவர்களுக்கு உத்தரவு கொடுக்கப்படுகிறது.

ஒலிவரும் திசை மேலும் சில அடிகள் கண்ணாமூச்சி

(IX ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சஞ்சீவி சிறுகதை

# முடவன் நடை

நிலம் வெளுக்கவும் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். வாசலில் அம்மா 'முழுவியளம்' பார்த்து வழியனுப்பினான். யாழ்ப்பாண நகரம் ஏழு மைல் தொலைவிலுள்ளது. எதிர்க்காற்றை வலித்துச் செல்ல வேண்டும். அங்கிருந்து முதல் பஸ்ஸில் போனால்தான் பருத்தித்துறையிலிருந்து அன்றைக்கே திரும்ப முடியும்.

வீட்டிலிருந்து பிரதான வீதிக்கு ஏறும் பாதை மூடப்பட்டு விட்டதால், வீடுகளுக்கிடையே ஏற்படுத்திய புதிய ஒற்றையடிப்பாதையாலேயே பயணங்கள். கிளியண்ணை வீட்டின் கேற்றைத் திறந்து கொண்டு இவன் போகும் போது, தூக்கக் கலக்கத்துடன் படியில் அமர்ந்திருந்த அவரது மகன் பெயர் சொல்லி அழைத்தான். இவன் திரும்பிச் சிரித்து விட்டுச் சென்றான்.

பிரதான வீதியிலேறி, தடையணையருகே வந்த போது வரிசையில் நிறையப் பேர் காத்திருந்தனர். மரக்கறிச் சுமையும் வாழைக் குலைகளுமாக விவசாயிகள் தான் அதிகம்.

ஏழு மணிக்குப் பாதை திறக்கப்பட்டது. சைக்கிளை வேகமாக மிதித்தான். வீதியில் மெல்ல மெல்ல ஆட்கள் தலைகாட்டத் தொடங்கியிருந்தனர். இராணுவ ரோந்து அணியொன்று இருகரைகளாலும் சீரான இடைவெளியில் சென்று கொண்டிருந்தது. இடையில் எதிர்ப்பட்ட முகாம்களில் இறங்கி, சைக்கிளை உருட்டியபடி போய்ப் பின் ஏறிச் சென்றான்.

நகரத்து நுழைவாயில் தடையரணிலும் நிறையச் கூட்டமிருந்தது. அரச ஊழியர் வரிசையிற் சென்றதால் விரைவாகவே சோதனையிடப்பட்டு உள்ளே அனுமதிக்கப்பட்டான். உள்ளேயும் பல இடங்களில் இறங்கி ஏறிச் செல்ல வேண்டியிருந்தது பாதுகாப்பு நிலையமொன்றில் சைக்கிளை விட்டு விட்டு, பஸ் நிலையத்திற்கு வந்த போது, பஸ்ஸைத் தவற விட்டிருந்தது தெரிந்தது. இரண்டு மணி நேரங் கழித்தே அடுத்த பஸ். காலை உணவை முடிப்பதற்காக இவன் கடையொன்றுக்குள் நுழைந்தான்.

திரும்பி வந்த போது மினி பஸ்ஸொன்று நின்றது. எட்டரைக்குப் புறப்படுமென்றார்கள். இவனைப் போல — அரச பேருந்தைப் பார்த்து விட்டு வந்த — பலரும் ஏறிக் கொண்டனர். பஸ் புறப்பட எட்டே முக்காலாயிற்று.

வின்ஸர் சந்தியில் இறங்க வேண்டியிருந்தது. இவன் ஒன்று என எண்ணிக் கொண்டான். சோதனைச் சாவடியில் அடையாள அட்டையைக் காட்டி விட்டு, சற்றுத் தள்ளிப் போய் மற்றவர்களுடன் நின்றுகொண்டான். பஸ் வந்து, எல்லோரையும் ஏற்றிப் புறப்படுகையில், கையைக் காட்டியபடி பெண்ணொருத்தி — அறுபது வயதிருக்கும்— அவசரமாக ஓடிவந்தாள். பருத்த உடலைத்தூக்கி அவள் ஓடி வருவது சுவாரஸ்யமாய்ப் பட்டது இவனுக்கு. யாரையோ திட்டியபடி ஏறிக் கொண்டாள்.

இவனுக்கருகே கைக்குழந்தையுடன் இருந்தவளைக் கண்டுவிட்டு, அவளருகே வந்து ''எடி, கலாப் பெட்டை'' என்றாள். அவள் சிரித்தபடி அழைத்து, இவனுக்கும் தனக்குமிடையில் அமர்த்தினாள். நேற்றுக் காலையில் வந்து சுவிஸிலிருக்கும் தனது மகனுடன் ரெலிபோன் கதைக்கப் பதிவு செய்துவிட்டு இரவெல்லாம் விழித்திருந்து காத்திருந்ததையும், 'கோல்' கிடைக்காததையும் அப்பெண் புலம்பித் தீர்த்தாள். அடிக்கடி 'கோதாரி விழுவான்கள்' எனத் திட்டினாள்.

அடுத்த சென்றியில் இறங்கினார்கள். அறுபது வயதுக்காரி திட்டியபடி இறங்காமலே இருந்தாள். இவன் இரண்டு என எண்ணிக்கொண்டான். சோதனை முடிந்து அப்பால் போய் நின்றபோது 'கொண்டக்டர்' ஓடி வந்தான்.

''ஆற்றையப்பா அந்த உரப்பை?''

ஒருவர் தன்னுடையது தானென்றார்.

''ஒடப்பா கெதியா........... ஆமிக்காரன் கேட்கிறான். கழட்டிக் காட்டு''

மீண்டும் அனைவரும் ஏறிக்கொள்ளப் பஸ் புறப்பட்டது. கல்வியங்காட்டில் எல்லோரும் இறங்க வேண்டுமென்று ட்றைவர் நச்சரித்தான். அறுபது அவனை ஏசியபடி இறங்கினாள். உரப்பைக்காரன் இம்முறை பையைச் சுமந்துகொண்டு வந்தான். பஸ் புறப்படும் போது, இரண்டு இராணுவத்தினரும் ஏறி, புட்போட்டில் நின்று கொண்டனர். இவனருகே இருந்தவளின் பிள்ளை அவர்களைப் பார்த்து விறிட்டு அலறியது.

## இயல்வாணன்

அறுபது அவளிடமிருந்து குழந்தையை வாங்கிப் பலத்து ''ஆராரோ...'' சொன்னாள். அது மேலும் அலறியது. மீண்டும் குழந்தை அவளிடம் போனது. இப்போது முதல் முறையாக அவள் இவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அடுத்த சென்றியில் இராணுவத்தினர் இறங்கிக்கொண்டனர். பெண்ணொருத்தி கையில் ஒரு குழந்தையுடன் ஏறினாள். மறுகையில் பெரிய பையொன்றையும் வைத்திருந்து ஏறமுடியாமல் தத்தளித்து, தூக்கித்தருமாறு குரல்கொடுத்தாள். ஒருவன் பையைத்தூக்கி உதவினான். பின்னால் ஐந்து பிள்ளைகளும் ஏறிக்கொண்டனர். மூத்த பையன்—ஒன்பது வயதிருக்கும்—ஒரு பெண்பிள்ளையைத் தூக்கிவைத்திருந்தான். ஓரிருவயது இடைவெளிகளில் பிறந்த பிள்ளைகளாயிருக்க வேண்டும்.

இடமில்லாமல் தவித்தாள் அப்பெண். இவன் எழுந்த போது, ''நீங்கள் இருங்கோ அவஇருந்திட்டா'' என்றாள் இளம்பெண். பிள்ளைகளையும் கூப்பிட்டு, பைகளையும் வைத்து அந்த இடம் முழுவதையும் அடைத்திருந்தாள் அப்பெண். பக்கத்தில் இருந்தவர் சினத்து, ஏதோ சொல்லி ஏசினார். அவளும் பதிலுக்கு ஏதோ சொல்லிச் சமாளித்தாள். கொண்டக்டர் காசு வாங்கினார்.

''என்ன அநியாயம்...... சீ.ரீ.பி. யிலை போயிருக்கலாம்'' என்றாள் பெண்.

''போயிருக்கலாந் தான்'' என்றுவிட்டு, தா[illegible] வாங்கி விரல்களுக்கிடையே புதைத்துக்கொண்டான்.

புத்தூர் கழிந்து இறங்கி ஏறிய போது, இவனது சீற்றை வேறொரு பெண் ஆக்கிரமித்திருந்தாள். இவனைப்பார்த்துவிட்டு, தெரியாததுபோல வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். இளம் பெண் இவனைநோக்கி பரிதாபந்தொனிக்க முறுவலித்தாள்.

வாகனம் பெரும்பாலும் நிறைந்துவிட்டது. இந்த நெருசலுக்கிடையேயும் ஏழெட்டுப்பேர் ஏற்றப்பட்டனர். அவர்களது உடைகள் மங்கலநிகழ்வொன்றிற்குச் செல்வதைப் பறைசாற்றின. நேரே—முன்சீற்றில்— இன்னும் திருமணக்களை மாறாத இளங்குடும்பமொன்று இருந்தது. இருவரும் கிறக்கத்துடன் ஒருவரையொருவர் நோக்கியும் சீண்டியும் கொண்டிருந்தனர். இவன் திரும்பி இளம் பெண்ணைப்பார்த்தான். நிமிர்ந்தவள் — இவன்பார்ப்பதைக் கண்டு விட்டு—சிரித்தாள். பின்தலைகுனிந்தாள்.

''எங்கைபோட்டு வாறியள்?'' இவன்கேட்டான்.

நிமிர்ந்து வினாக்குறியுடன் சிரித்தாள். இவன் மீண்டும் கேட்டான்.

''ஃ போன்லை கதைச்சிட்டு வாறன்''

''ஆரோடை...?''

''அவரோடை.''

''எந்த நாடு?''

''ஜேர்மன்லை நிண்டவர். இப்ப போடர் கடந்து 'சுவிஸுக்கை' போட்டாராம். அதாலை அவரோடை கதைக்க முடியேல்லை''

''இரவு எங்கை தங்கினீங்கள்...?''

''ரெலிபோன் கதைக்கிற இடத்திலைதான். நிறையப் பேர் இருந்தினை. நித்திரையுமில்லை. நுளம்பு வேறை பிள்ளையோடை சரியான கரைச்சல் பட்டிட்டன். இனி வீட்டை போய்த்தான் எல்லாம்'' சிரித்தாள் அவள்.

வல்லையில் அடையாள அட்டைகளை இராணுவத்தினர் வாங்கிக் கொண்டனர். பதிலுக்கு சிங்களத்தில் எழுதப்பட்ட அட்டையொன்றைத் தந்தனர். மீண்டும் பயணம். சனநெரிசலில் வியர்த்துக் கொட்டியது. அந்த நேரம் பார்த்து ''காற்று வாங்கப் போனேன் ஒரு கவிதை வாங்கி வந்தேன்'' என்ற பாடலைப் போட்டு எரிச்சலூட்டினான் ட்றைவர். பிறகு தனக்குள் சிரித்துக் கொண்டான்.

மந்திகைக்கருகே இறங்கி ஏறும் போது, இதுதான் கடைசி என்றான் கொண்டக்டர். இவன் பதினொன்று என்று எண்ணிக் கொண்டான். பருத்தித்துறையில் இறங்கி — வழக்கமான கடற்கரைப் பாதை மூடப்பட்டுள்ளதால்- குச்சொழுங்கைகளுக்கால் வளைந்தும் நெளிந்தும் ஒருமைல் தூரம் சென்று, அந்த வீட்டிற்குள் நுழைந்ததும், ''கொஞ்சந் தண்ணி தாங்கோ'' என்றான் ஆவலுடன்; துக்கம் விசாரிக்காமலே.


★ ★ ★

சுகதுக்க விசாரிப்புகள், நாட்டு நிலமை, அரசியல் எதிர்காலம் பற்றிய பகிர்வுகள் என ஒருமணி நேரமிருந்து விட்டு, ஒன்றரை மணிக்குப் புறப்பட்டான். ''ஒரு மணித்தியாலம் இருக்கவே வந்தனீர்'' எனக் கனகண்ணை கேட்டார். இவன் பதிலேதும் சொல்லாமால் சிரித்து விட்டுப் புறப்பட்டான்.

பருத்தித்துறையில் [illegible]

## சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 05



சொற்சிலம்பம் இல. 05
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ..................................................

விலாசம் : ..................................................

..................................................

—==——— இங்கே வெட்டுக ———.——

### முடிவு திகதி: 11 - 07 - 1997

### இடமிருந்து வலம்

1. ஆடை குறைத்துக் காட்டுவது. 4. அவசரத்தால் வருவது. 7. சூரியன். 8. அரசுக்குச் செலுத்தும் கப்பம். 9. கடவுள். 11. கொள்கலம். 12. கடையேழு வள்ளலில் ஒருவன். 13. குழப்பம். 15. மெல்லிய இரும்புத் தகடு. 19. இடம் அல்ல. 20. சூளுரை. 21. பச்சைக்கிளி.

### மேலிருந்து கீழ்

1. நெருக்கடியில் உதவுபவன். 2. இவனும் கடையேழு வள்ளலில் ஒருவனே. 3. கணவன் —மனைவி. 4. சிவன். 5. வாழ். 6. அரசின் கஜானா. 8. அவலம், அவலப்பட்டுள்ளது. 10. தொன்மையான ஆட்டம். 12. பிரணவம். 14. உரோமத்தால் நெய்த சீலை. 16. சேர். 17. தேவலோகத்து அழகிகளில் ஒருவர். 18. இளையவன். 20. தோழி.

## சொற்சிலம்பம் இல. 03 - விடைகள்

### இடமிருந்து வலம்

1. ஏகாதசி. 5. வாய்மை. 7. கவனிப்பு. 9. பால். 10. லைலா. 11. பித்தம் 13. வள்ளி. 14. தளபதி. 17. சதகம். 19. கபடம். 21. சிபி. 22. பல. 23. பல்லி. 24. குவியம்.

### மேலிருந்து கீழ்

1. ஏகலைவன். 2. காவலாள். 3. தனி. 4. சிப்பி. 6. மைல். 8. புத்தகம். 12. தளம். 16. திப்பிலி. 18. தடயம். 19. கலவி. 21. சில்லு. 22. பகு.

### கீழிருந்து மேல்

15. பம்பாய். 20. பசளி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற் பரிசு:- யசோதா தங்கவேலு,
ஓடக்கரை வீதி, சங்கானை.

★ இரண்டாம் பரிசு:- ப. பாலகணேஸ்
''சந்திரவாசா'', துன்னாலை தெற்கு, கரவெட்டி.

★ மூன்றாம் பரிசு:- கணேசரட்ணம் சுரனுதா,
ஆண்டு 8—A யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுகள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150.00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100.00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50.00

★ புதிர்ப்போட்டி இலக்கம். 04 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★1,000மாடுகள் ★5,000ஆடுகள் ★4,000கோழிகள்

# திருச்சி அம்மனுக்கு பலி

★ ஆயிரம் மாடுகள்
★ ஐயாயிரம் ஆடுகள்
★ நாலாயிரம் கோழி கள்.

இவ்வளவையும் அம்மனுக்குப் பலியிடுவதாகக் கூறி வெட்டிச் சாய்த்திருக்கின்றார்கள்.

நவீன சிந்தனைகள் முகிழ் விட்டு வரும் இந்தக் காலத்தில்தான் மதத்தின் பெயரால் இந்த அநாகரிகம் நடந்திருக்கின்றது.

தமிழ்நாடு, திருச்சி மாவட்டம் மணல்பாறையிலிருந்து 15 கிலோ மீற்றர்தொலைவில் உள்ளமட்டப்பாறைக் கிராமத்தில் உள்ள பத்திரகாளியம்மனுக்குத்தான் கடந்த 12 ஆம்திகதி இவ்வளவு உயிர்களும் பலியிடப்பட்டிருக்கின்றன.

அங்குள்ள அம்மனுக்கு ஏழு வருடத்துக்கு ஒரு முறை இவ்வாறு உயிர்களைக் காவு தந்து, பசி தீர்ப்பார்களாம் பக்தர்கள். அந்த வரிசையில் இந்த வருடம் இவ்வாறு படையல் செய்யப்பட்டிருக்கின்றது.

முதல் நாள் ஐயாயிரம் ஆடுகள், நாலாயிரம் கோழிகள் பலி கொடுக்கப்பட்டு பூஜைகள் செய்யப்பட்டன. பின்னர் ஆடுகளையும், கோழிகளையும் அவரவர் வீட்டுக்கு எடுத்துச்சென்று கறி சமைத்துச் சாப்பிட்டு விட்டார்கள்.

மறுநாள் மாடுகளைப் பலியிடும் நிகழ்ச்சி. இதற்காக சென்னை, சேலம், பெங்களூர் எனப் பல ஊர்களிலிருந்தும் மக்கள் திரண்டு வந்தனராம்.

காலையில் ஆரம்பித்து மாலை ஆறு மணி வரை ஆயிரம் மாடுகள் வெட்டப்பட்டுள்ளன.

அந்தப் பிரதேசமேஇரத்தக்களரியான பிறகு,வெட்டப்பட்ட மாடுகளைக் கோயிலுக்கு எதிரே ஒரு பெரிய பள்ளமாகத் தோண்டி அதற்குள் முண்டத்தையும், தலையையும் போடுவார்கள். மாடுகளை வெட்டிப் போடும் குழிக்குள் பத்து மூடை உப்பைப் பரப்பி விடுவார்கள்.

உப்புக்கு அரிக்கும் சக்தி உண்டு. கொஞ்சம் கொஞ்சமாக மாடுகளின் உடலை அரித்து விடுமாம். மூன்று மாதங்களுக்குப் பின்னர் மண்ணைக் கொட்டி அந்தப் பள்ளத்தை மூடி விடுகிறார்களாம். மீண்டும் ஏழு வருடம் கழித்து அதே இடத்தைத் தோண்டி எலும்புத் துண்டுகளை அகற்றிவிட்டு மீண்டும் புதிதாகப் பலியிடப்படும்மாடுகளை அதற்குள் போட்டு மூடி விடுகின்றார்கள்.

எலும்புகளை மீண்டும் தோண்டி எடுக்கும் போது ஊருக்குள் துர்நாற்றம் பயங்கரமாக வீசினாலும் மக்கள் பொறுத்துக்கொள்கின்றார்களாம். காரணம்? இது தெய்வம் சம்பந்தப்பட்டது என்பதுதான்.

ஆயிரக் கணக்கில் உயிர்களைப் பலி கொண்ட இடத்தில் இரண்டு வாரங்கள் கழித்து இன்னமும் குடலைப்புரட்டியெடுக்கும் அளவுக்கு இரத்த வாடை வீசுகின்றதாம். ★

# குறைந்த வயதில் கர்ப்பமாவது அமெரிக்காவில் குறைகிறது

குறைந்த வயதில் பிள்ளை பெறுவதும், கர்ப்ப காலத்தில் புகைப்பதும் அமெரிக்காவில் குறைந்து வருகின்றது.

வாஷிங்டனில் உள்ள நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் புதிய ஆய்வறிக்கை இத் தகவலைத் தெரிவிக்கிறது.

கர்ப்ப காலத்தில் பெண்கள் புகைப்பது அமெரிக்காவில் சாதாரணமானது. ஆனால், புகைப்பதால் பிறக்கப்போகும் குழந்தைகளுக்கு வரும் கேடு குறித்து அமெரிக்கத் தாய்மார்களுக்கு தற்போது நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

கர்ப்ப காலத்தில் புகைக்கும் பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள் ஆரோக்கியமான குழந்தைகளை விட இரண்டு பங்கு வளர்ச்சி குறைவாக இருக்கும். மேலும் பிறந்த சில நாள்களிலேயே இறந்துவிடும் சாத்தியமும் அதிகம். மேலும் இத்தகைய குழந்தைகளுக்கு நுரையீரல் தொந்தரவும் காணப்படும் என்றுபல ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இதனால் கர்ப்ப காலத்தில் புகைக்கும் பெண்களின் சதவீதம் அமெரிக்காவில் குறைந்துள்ளது. 1995 ஆம் ஆண்டில் இது 14 சத வீதமாகக் குறைந்ததாக ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

இதே போல 14 வயதிலிருந்து 19 வயதுக்குள்ளாக பிரசவிக்கும் பெண்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. 1994 ஆம் ஆண்டு இருந்ததைவிட 1995 ஆம் ஆண்டு இது நான்கு சத வீதமாகக் குறைந்திருக்கிறது.

பிரசவ கால வயதுப் பருவம் 18இலிருந்து 19 ஆக உயர்ந்திருக்கிறது என்றும் ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

## ஒரு மைல் உயரம் பீறிட்ட எரிமலை

மெக்ஸிக்கோநகர் அருகே உள்ள எரிமலை கடந்த வாரம் வெடித்து பெரும் நெருப்பைக் கக்கியது.

ஒரு மைல் உயரத்துக்கு பிழம்பு பீறிட்டது. ஆனால் எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

எரிமலை ஆக்ரோஷமாக வெடித்துச் சிதறுவதற்கான அறிகுறி இது எனஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

எரிமலைக்கு அருகே சுற்றுப் புறங்களில் வசிப்பவர்கள் தற்காலிகமாக வேறு இடங்களுக்குச் செல்ல பணிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியைச் சுற்றி 2 கோடி மக்கள் வசிக்கின்றனர்.

## கடத்தல் மூளை!

தமிழகத்தில் பலருக்கு கள்ளச்சாராயம் கடத்துவது ஒரு கைவந்த கலை. கடந்தவாரம் புதுவிதமான விதத்தில் கள்ளச்சாராயம் கடத்திய இரு இளைஞர்களைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

திருவெற்றியூர் நெடுஞ்சாலையில் ஸ்கூட்டரில் சென்றுகொண்டிருந்த இந்த இருவரையும் பொலீஸார் வழிமறித்து சோதனையிட்டனர். அவர்களிடம் உதைபந்தாட்டப் பந்துகள்தான் இருந்தன. பந்துகள் சற்றுப் பாரமாக இருந்ததால் சந்தேகம் கொண்ட பொலீஸார் பந்துகளைச் சோதனையிட்டனர். பந்துகளின் 'பிளாடர்' ரியூப்களில் காற்று இருக்கவில்லை. கள்ளச்சாராயமே இருந்தது! இருவரும் வகையாக மாட்டிக்கொண்டனர்.

# முடிசூட விரும்பினால் இளவரசர் சார்ள்ஸ் கமீலாவின் தொடர்பை விடவேண்டும்

## ஆங்கிலத் திருச்சபை வலியுறுத்துகின்றது

''பிரிட்டனின் மன்னராக இளவரசர் சார்ள்ஸ் முடிசூட்டிக் கொள்ள விரும்பினால், கமீலா பார்க்கர் பௌஸ்ஸுடன் அவருக்குள்ள — திருமணத்துக்குப் புறம்பான—உறவை அவர் கைவிட வேண்டும்''—இவ்வாறு ஆங்கிலத் திருச்சபையின் தலைமை கூறியுள்ளது.

அதற்கு அவர் தயாராக இல்லையெனில் மன்னராகும் ஆசையைத் துறந்து விட வேண்டும் என்றும் அத்தலைமை குறிப்பிட்டுள்ளது.

பிரிட்டனின் செல்வாக்கு மிக்க அமைப்பு ஆங்கிலக் கிறிஸ்தவத் திருச்சபை ஆகும். அதன் இயக்குநரான மறைத்திரு டேவிட் ஸ்ட்ரீட்டர் அண்மையில் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

பொது வாழ்வில் இருக்க வேண்டுமென்று விரும்பினால் வேல்ஸ் இளவரசர் தனிப்பட்ட தியாகத்துக்குத் தயாராக இருக்க வேண்டும். கமீலாவை விட்டுப் பிரிய சார்ள்ஸ் தயாராக இல்லையெனில் 8 ஆம் எட்வேர்ட்டைப் போல, காதலுக்காக முடி துறக்க வேண்டியது தான்.

சார்ள்ஸைவிடப் பெரியது அரசாட்சி; அரசாட்சியை விடப் பெரியது நாடு. சார்ள்ஸின் தனிப்பட்ட நடவடிக்கையால் இரண்டும் பாதிக்கப்படக் கூடாது. நாட்டை ஆளும் தகுதி தனக்கு இருக்கிறது என்பதை மக்களுக்கு நிரூபிக்க வேண்டுமென்றால், அவர் கண்ணீருடன் கமீலாவுக்கு பிரியாவிடை அளிக்கத் தான் வேண்டும்.

திருமணத்துக்குப் புறம்பான உறவு வைத்திருக்கும் ஒருவரை ஆங்கிலத் திருச்சபையின் தலைமையாக ஏற்க முடியாது. தனது உறவை ஒப்புக்கொண்டு விட்டாலும் அதற்காக அவர் மனம் வருந்தவில்லை, இதனால் அரசமைப்பு நெருக்கடியை அவர் ஏற்படுத்துகிறார். — என்று மறைத்திரு ஸ்ட்ரீட்டர் குறிப் பிட்டார்.

ஆனால் பத்திரிகைகள் அவருடைய வாதங்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

''கமீலாவை வாழ்க்கைத் துணையாக ஆக்கிக்கொள்ள சார்ள்ஸுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையில் மற்ற [illegible] மகிழ்ச்சி சார்ள்ஸ் என்ற மனிதனுக்கும் கிடைக்க வேண்டும் என்பதுவே எங்கள் அக்கறை.

நவீன வாழ்க்கை மாற்றமாகத்தான் இதைக்காண வேண்டும். இந்தச் சர்ச்சையில் கமீலாவின் உரிமைகளைப் புறக்கணிப்பதை ஏற்க முடியாது என்று பத்திரிகைகள்குறிப்பிட்டுள்ளன.




இந்திய ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது. இத்தேர்தலில் வாக்களிக்கும் எம்.பிக்கள், மாநில எம்.எல்.ஏக்களின் வாக்குகள் 18ஆம்திகதி புதுடில்லியில்எண்ணப்படும்.

தற்போதைய உபஜனாதிபதி கே. ஆர். நாராயணன், முன்னாள் தேர்தல் ஆணையாளர் ரி. என். சேஷன் ஆகிய இருவரும் களத்தில் உள்ளனர்.

வெற்றி வாய்ப்பு நாராயணனுக்கே அதிகம். மத்தியில் ஆட்சியமைத்திருக்கும் ஐக்கிய முன்னணி மற்றும் காங்கிரஸ், பாரதீய ஜனதாக் கட்சி ஆகியவை அவரை ஆதரிக்கின்றன.

ஆனால் பாரதீய ஜனதாவுடன் சேர்ந்து மகாராஷ்டிரத்தில் ஆட்சியமைத்திருக்கும் சிவ சேனை மட்டும் சேஷனை ஆதரிக்கின்றது.

சிவசேனைக் கட்சியின் தலைவர் பால் தக்கரே சர்ச்சைக்குரியவர்; துணிச்சலுடன் இந்து தீவிர வாதப் போக்கை வெளிப்படுத்துபவர்; பகிரங்கமாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பவர்; புலிகளின்துணிச்சலைபாராட்டுபவர்.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான பால் தக்கரேயின் முதுகில் சவாரி செய்து ஜனாதிபதித் தேர்தலுக்கு பிரசாரம் செய்கிறார் ரி. என்.சேஷன் என்ற சாரப்பட வெளியான கார்ட்டூன் இது.

# தந்தைக்கு ஜீவனாம்சம் வழங்க மகனுக்கு உத்தரவு

## திருப்பத்தூரில் 'திருப்பமான' தீர்ப்பு

தந்தைக்கு ஜீவனாம்சம் செலுத்துமாறு மகனுக்கு உத்தரவிட்டிருக்கின்றது நீதிமன்றம்.

மூதாதையர் சொத்தைப் பாகப்பிரிவினை செய்து கொடுத்தால் தந்தையைக் காப்பாற்றுவேன் என்று மகன் உறுதிமொழி கொடுத்ததை அடுத்து மகனுக்கு சொத்து வழங்கப்பட்டது. ஆனால் தனது உறுதி மொழியை மகன் காப்பாற்றாததால் தந்தைக்கு ஜீவனாம்சம் வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. தமிழ்நாட்டில் இச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

திருப்பத்தூர் தாலுகா ஏரல்ப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த காளப்பரெட்டியின் மகன் பலராமன் (60). இவரின் மகன் இலங்கேஸ்வரன்.

பாகப்பிரிவினை செய்யப்பட்ட மூதாதையர் சொத்து பலராமனிடம் இருந்தது. அந்தச் சொத்தில் தன்னுடைய பாகத்தைப் பிரித்துக்கொடுத்தால் தந்தையைக் காப்பாற்றுகிறேன் என்று உறுதி மொழி கொடுத்ததன் பேரில் ஊர்ப் பஞ்சாயத்தார் இலங்கேஸ்வரனுக்கு சொத்தைப் பாகப் பிரிவினை செய்து கொடுத்தனர்.

ஆனால் ஒரே ஒரு மாதம் தான் பலராமனை இலங்கேஸ்வரன் பராமரித்தார். மேலும் அவரைத் தன்னால் பராமரிக்க முடியாது என்றும் கூறிவிட்டார்.

தான் கஷ்டஜீவனம் செய்வதால் தனக்கு இலங்கேஸ்வரன் மாதம் ரூ. 500 வழங்க உத்தரவிடுமாறு கோரி திருப்பத்தூர் 4 ஆம் நீதிமன்றத்தில் பலராமன் வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிவான் கல்யாணபானு, தந்தை பலராமனுக்கு மகன் இலங்கேஸ்வரன் மாதந்தோறும் ரூ. 100 ஜீவனாம்சம் வழங்க உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார்.

மனை...
கற்பழி...

## மெக்ஸிக்...

மனைவியைப் பலாத்...
காரம் செய்வதைக் கற்...
பழிப்புக் குற்றமாகக் கருத...
முடியாது என்று மெக்...
ஸிக்கோ நாட்டு உச்ச நீதி...
மன்றம் தீர்ப்பு வழங்கி...
யிருக்கிறது.

கற்பழிப்பை சட்டபூர்வ...
மாக அங்கீகரிப்பதாக இத்...
தீர்ப்பு இருக்கிறது என்று...
மகளிர் அமைப்புகளும்...
மனித உரிமை காப்...
அமைப்புகளும் கண்டித்து...
ளன.

இந்தத் தீர்ப்பு சர்...
தேசச் சட்டங்களுக்கு...
சட்டமரபுகளுக்கும் மு...
ணாகஇருக்கிறது;சர்வதேச...
சட்ட நடைமுறைகளுக்...
எதிராக இருக்கிறது; ம...
ளிரின் உரிமைகளைப் பாதி...
கிறது — என்று மகளி...
அமைப்புகள் வன்மையாக...
கண்டித்துள்ளன.

தன்னுடைய விருப்ப...
துக்கு மாறாக கணவ...
தன்னை அச்சுறுத்தி உ...
லுறவு கொண்டார் என்...
2 பெண்கள் கொடுத்...
வழக்குகளை மெக்ஸிக்கே...
நாட்டின் இரு கீழ்நிலை...
நீதிமன்றங்கள் விசாரி...
தன. அதில் ஒன்று க...
வனுக்கு 8 ஆண்டுக...
முதல் 14 ஆண்டுகள் வ...
தண்டனை விதிக்கக்கூடி...
வகையில் தீர்ப்பு வழ...
கியது. என்னதான் கண...
னாக இருந்தாலும் மனை...
வியின் விருப்பத்துக்...
மாறாக உடல்உறவு கொ...
வது கற்பழிப்புதான் என்...
அது தனது தீர்ப்பில் கூ...
யது.

மற்றொரு நீதிமன்...
இதை கற்பழிப்பு என்...
கூறிவிட முடியாது என்...
தீர்ப்புக் கூறியது.

இதனையடுத்து உச்ச நீ...
மன்றத்தின் கருத்தறி...
இந்த வழக்கு மேல் வி...
ரணைக்குக் கொண்டு செ...
லப் பட்டது.

### தீர்ப்பு விவரம்

மெக்ஸிக்கோ உச்ச நீ...
மன்றத்தின் நீதிபதி...
லூயி பெர்னாண்டே...
டோப்ளடோ, கிளமெ...
டினா ஜில், விக்டோரி...
அடடோ அடங்கிய ...
மன்றம் இந்த விடய...
குறித்து விசாரணை செய்...
தீர்ப்பளித்தது. தீர்ப்பி...
விவரம் வருமாறு:-

கணவன் மனைவிய...
டையே உடலுறவு விஷய...
தில் ஒருவர் அழைத்தா...
மற்றவர் ஒத்துழைத்...
உடன்படவேண்டிய கட...
இருக்கிறது. இதைத் தகு...
காரணம் இல்லாமல் த...
டிக் கழிப்பது சரியல்...
அப்படிப்பட்ட சந்தர்ப்ப...
களில் வாழ்க்கைத் துணை...
வர் சற்று முரட்டுத் த...
மாக நடந்து கொண்டா...
அதை உரிமையை மீறு...
செயலாகக் கருதி கடு...
தண்டனையை வழங்க மு...
யாது. கணவன் மனை...
யின் அந்தரங்க விவகார...
தில் தனிப்பட்ட க...
ணோட்டம் அவசியம்.

கற்பழிப்புக் குற்ற...
களுக்கு இலக்கணமாக...
கருதும் சம்பவங்கள் க...
வன் — மனைவியரிடை...
நடந்திருந்தாலும் அ...
கற்பழிப்பாகவே முழு...
முழுக்கக் கருதிவிட மு...

பஞ்சாமிர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...னைவியை பலாத்காரம் செய்வது ...ற்பழிப்பாக கருதமுடியாதாம்

## ...மக்ஸிக்கோ உயர் நீதிமன்றம் விசித்திரத் தீர்ப்பு

...வியைப் பலாத்
...செய்வதைக் கற்
...குற்றமாகக் கருத
...என்று மெக்
...நாட்டு உச்ச நீதி
...தீர்ப்பு வழங்கி
...து.
...ப்பை சட்டபூர்வ
...ங்கீகரிப்பதாக இத்
...இருக்கிறது என்று
...அமைப்புகளும்,
...உரிமை காப்பு
...புகளும் கண்டித்துள்
...
...் தீர்ப்பு சர்வ
...சட்டங்களுக்கும்
...புகளுக்கும் முர
...ருக்கிறது;சர்வதேசச்
...நடைமுறைகளுக்கு
...இருக்கிறது; மக
...ரிமைகளைப் பாதிக்
...என்று மகளிர்
...புகள் வன்மையாகக்
...துள்ளன.
...டைய விருப்பத்
...மாறாக கணவர்
...அச்சுறுத்தி உட
...கொண்டார் என்று
...கள் கொடுத்த
...ளை மெக்ஸிக்கோ
...இரு கீழ்நிலை
...ங்கள் விசாரித்
...தில் ஒன்று கண
...8 ஆண்டுகள்
...4 ஆண்டுகள் வரை
...ன விதிக்கக்கூடிய
...தீர்ப்பு வழங்
...என்னதான் கணவ
...ருந்தாலும் மனை
...விருப்பத்துக்கு
...உடல்உறவு கொள்
...பழிப்புதான் என்று
...து தீர்ப்பில் கூறி
...
...ாரு நீதிமன்றம்
...கற்பழிப்பு என்று
...முடியாது என்று
...கூறியது.
...னயடுத்து உச்ச நீதி
...ின் கருத்தறிய
...ழக்கு மேல் விசா
...தக் கொண்டு செல்
...து.

### ...ப்பு விவரம்

...க்கோ உச்ச நீதி
...ின் நீதிபதிகள்
...பெர்னாண்டோ
...டோ, கிளமெண்
...ல், விக்டோரியா
...அடங்கிய நீதி
...இந்த விடயம்
...விசாரணை செய்து
...த்தது. தீர்ப்பின்
...வருமாறு:-
...் மனைவியரி
...உடலுறவு விஷயத்
...வர் அழைத்தால்
...ஒத்துழைத்து
...வேண்டிய கடமை
...து. இதைத் தகுந்த
...இல்லாமல் தட்
...பது சரியல்ல.
...ட்ட சந்தர்ப்பங்
...ழ்க்கைத் துணை
...முரட்டுத் தன
...ந்து கொண்டால்
...ரிமையை மீறும்
...் கருதி கடும்
...னயை வழங்க முடி
...ணவன் மனைவி
...ரங்க விவகாரத்
...ப்பட்ட கண்
...ம் அவசியம்.
...புக் குற்றங்
...இலக்கணமாகக்
...ம்பவங்கள் கண
...னைவியரிடையே
...தாலும் அதை
...ாகவே முழுக்க
...கருதிவிட முடி

யாது. அதே நேரம் தாம் பத்திய உறவுக்கு உரிமை இருந்தாலும் அதை வன் செயல்களால் நிறைவேற்றிக் கொள்வதை ஏற்கவும் முடியாது.

அப்படிச் சம்பவம் ஏதும் நடந்திருந்தால் அதை பாலியல் பலாத்காரமாகக் கருதாமல், தனக்குரிய உரிமையை வன்முறை மூலம் நிலைநாட்டியதாகத் தான் கருத வேண்டும் — என்று தீர்ப்புக் கூறுகிறது.

அதேநேரம் - போதைக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் போதோ, எய்ட்ஸ் போன்ற பயங்கர ஆள் கொல்லி நோயால் தாக்கப்பட்ட போதோ, பாலியல் நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளபோதோ மற்றவர் முன்னிலையிலோ பலவந்தப்படுத்தி உடலுறவு கொள்வது பாலியல் பலாத்காரமாகக் கொள்ளப்படும் என்று தீர்ப்பு எச்சரிக்கிறது.

மனைவிக்கு பக்கவாதம், உடலுறவு கொள்ள முடியாத வகையில் இயற்கையான இடையூறுகள், விவாகரத்துக்காக மனுச் செய்துவிட்டு தீர்ப்புக்காகக் காத்துக்கிடக்கும் காலம் ஆகிய சந்தர்ப்பங்களின் போதும் பலவந்தப்படுத்துவது கூடாது.

இந்த விஷயத்தில் நீதிமன்றம் இப்போது குறிப்பிடும் சந்தர்ப்பங்கள் மட்டும்தான் இறுதிப்பட்டியல் என்று எதிர்காலத்தில் வாதாடக் கூடாது. எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் பலவந்தம் கூடாது என்று புதிதாகப் பட்டியலிடுவது உசிதமாக இருக்கும் என்றும் தீர்ப்பில் விளக்கப்பட்டிருக்கிறது.

''கணவன் மனைவியரிடையே நல்ல ஆரோக்கியமும், மனமுறிவுக்கான ஏற்பாடுகளும் இல்லாத போது. கணவன் மேற்கொள்ளும் நடவடிக்கையை பாலியல் பலாத்காரமாகக் கருதத் தேவையில்லை. தனது உரிமையை பலாத்காரம் மூலம் நிலைநாட்டுவதாக மட்டுமே கருத வேண்டும். எனவே தண்டனை என்பது உரிமையைப் பலாத்காரமாக நிலைநாட்டிக் கொண்டதற்குத்தான்'' — என்று தீர்ப்பில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ★

## கன்று ஈனாமலேயே பால் கறக்கும் பசு!

கன்று ஈனாமலேயே பசுபால் தருமா? ஆம். இந்த அதிசய முறை தமிழகத்தில் சேலம், ராஜாஜி மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது.

'இன்டியூஸ்ட் லேக்டவுன்' என்ற இந்த நூதன அறிவியல்முறைத் திட்டத்துக்கு மருத்துவ ரீதியாகச் சிறந்த பசுக்கள் தெரிவுசெய்யப் படுகின்றன.

அத்தகைய பசுக்களுக்குத் தொடர்ந்து21 நாள்கள் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இந்த சிகிச்சை மூலம் பசுக்களின் ஹோர்மோன்கள் தூண்டப்பட்டு பால் சுரக்கத் தொடங்குகின்றது. அப்பசு முந்தைய ஈற்றில் கறந்த அளவுக்குச் சமமான அளவு பால் இந்தத் தூண்டலின் மூலம் சுரக் கப்படுகின்றதாம்,

இத்தகைய முறை மாதிரி செயல்திட்டமாக ஒரு சில கிராமங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கின்றது.

## கண்ணி வெடிகளை மோப்பம் பிடிக்க செயற்கை மூக்கு!

கண்ணி வெடிகளை மோப்பம் பிடிக்கும் செயற்கை மூக்கை அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் சண்டைகளில் நிலத்தடியில் புதைக்கப்படும் கண்ணிவெடிகளைச் செயலிழக்கும் பணியில் மனிதர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

சராசரியாக 500 கண்ணி வெடிகளைக் செயலிழக்கச் செய்யும் போது ஒருவரை இழக்க நேரிடுகிறது.

செயற்கை மூக்கு மூலம் ஓரளவுக்கு இதைத் தடுத்து நிறுத்த முடியும். நாய்களைப் போன்ற இவ்வகைச் செயற்கை மூக்குகள் வெடிமருந்துகளை மோப்பமிடும் சக்தியைப் பெற்றவை.

மும்முரமாகச் சண்டை நடைபெற்று வரும் பகுதிகளில் பல்வேறு வெடிகளின் புகைக்கும் இடையே கண்ணிவெடிகளின் வாசத்தை இதனால் மோப்பம் பிடிக்க முடியாது என்று டஃப்ட்ஸ் பல்கலைக்கழகத்தின் தலைமை விஞ்ஞானி ஜான் எஸ். காவர் கூறினார்.

கண்ணிவெடிகளை மோப்பம் பிடிக்கும் பணியில் நாய்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றனவோ அவ்வாறே 'இயற்கை மூக்கு' என்றழைக்கப்படும் இச் சாதனத்தைப் பயன்படுத்தப் பயிற்சியளிக்கலாம் என்றார் ஜான்.

இவ்வகைச் சாதனத்தைக் கண்டுபிடிக்கும் ஆய்வுக்கு அமெரிக்க ராணுவம் எண்பது கோடி இந்திய ரூபா பெறுமதிக்குச் சமனான நிதியளித்துள்ளது.

இந்த ஆய்வு (பலும்) முன்னேற்றம் காண வேண்டியுள்ளது. இச் சோதனையில் ஈடுபடுவதற்கு முன்பாக உயிரோடு உள்ள மனித மூளையின் திசுக்களில் சாயங்களைப் பூசி அவற்றின் செல்கள் எவ்வாறு வாசனைகளை அறிந்து கொள்கின்றன என்பதை முதலில் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

இதே முறையை எலக்ட்ரானிக் முறையில் வேதியியல் சென்சார் மற்றும் கம்பியூட்டர் தொழில்நுட்பத்தின் கீழ் விஞ்ஞானிகள் ஆய்வுசெய்து வருகின்றனர்.

## 8 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சிறுவன்!

### ஸ்பெயினில் புதைபடிவம் மீட்பு

ஸ்பெயின் நாட்டின் மத்திய பகுதியில் உள்ள சுண்ணாம்புக்கல் பாறைகளுக்கு இடையே7 இலட்சத்து 80 ஆயிரம்ஆண்டுகளுக்கு முன்னர்வாழ்ந்ததாகநம்பப்படும் சிறுவன் ஒருவனின்'பாஸில்' அல்லது புதைபடிவம் கிடைத்துள்ளது.

நவீன மனிதனைப் போன்றே முகஜாடைகளும், தாடை எலும்புகளும் மனிதனுடைய நெற்றி வடிவமும் அந்தப் புதைபடிவத்தில் தென்படுகின்றன என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மிகப் பழமையான இந்த மனித வகைக்கு ''ஹோமியோ அன்ரிஸச'' என விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர். ★

## வைரத் திருட்டுக்கு உதவிய புறாக்கள்

புறாக்களைப் பயன்படுத்தி வைரங்களைத் திருடிய 33 பேரை தென்னாபிரிக்க பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர்கள் அனைவரும் வைரச் சுரங்கங்களில் வேலைபார்க்கும் தொழிலாளர்கள்.

பழக்கப்பட்டபுறாக்களை பயன்படுத்தி பலத்த பாதுகாப்போடு இருக்கும் வைரச் சுரங்கத்துக்குள் அனுப்பி வைரங்களை எடுத்து வரச் செய்வது இவர்களின் வழக்கமாக இருந்தது. இதுவரை 2 லட்சத்து 22 ஆயிரம் டொலர் மதிப்புக்கு வைரங்களைத்திருடியுள்ளனர்.

சுரங்கங்களில் வைர இருப்பு அடிக்கடி குறைவதை ஒட்டி புலனாய்வு மேற்கொண்ட போதுதான் இத்தொழிலாளர்களின் புறாத் திருட்டு அம்பலத்துக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தொற்று நோய்

பிரிட்டனில் ஆரம்பித்து மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் உள்ள மாடுகளுக்குப் பரவிய ஒரு வித தொற்று நோய் தற்போது நோர்வேயில் சில நாய்களுக்கும் தொற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மாடுகளின் எலும்புகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாய் உணவு ஊடாக இந் நோய் நோர்வேயில் நாய்களுக்குப் பரவியிருக்கலாம் என நம்பப்படுகிறது. ★

சாமிர்தம் பலாசஅமிர்தம்

## மண்டை ஓடுகளை கடத்தும் கூட்டம்!

நேபாள நாட்டின் பத்லாஹியா கிராமத்தில் திடீர் சோதனையிட்ட பொலீஸார் 82 மனித மண்டை ஓடுகளை ஒரு வீட்டிலிருந்து பறிமுதல் செய்தனர்; இது தொடர்பாக 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவின் வடக்கு பீஹார் மாநிலத்தின் சம்பரான் மாவட்டத்துக்கு அருகில் உள்ளது இந்த நேபாள கிராமம்.

காய்கறிக் கூடைகளில் மறைத்து வைத்து மண்டை ஓடுகளைக் கடத்தி வருகிறார்கள் என்று நேபாள பொலீஸாருக்குத் தகவல்கள் கிடைத்தன. அதையடுத்து தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போதே இந்த மண்டை ஓடுகள் மீட்கப்பட்டன.

இந்த மண்டை ஓடுகளை காத்பண்டு நகருக்குக் கொண்டு செல்கின்றனர். இங்கு இதை யார் வாங்குகிறார்கள், மண்டை ஓடுகளைக் கொண்டு என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை.

கடந்த ஆண்டு இந்திய நேபாள எல்லையில் ஒரு பஸ்ஸிலிருந்து 60 மண்டை ஓடுகளை பொலீஸார் பறிமுதல் செய்திருந்தனர்.

## தண்ணீர்! தண்ணீர்!!

### மேலும் சில தகவல்கள்

கடந்த இருவாரங்களில் சஞ்சீவியில் வெளியான 'தண்ணீர்! தண்ணீர்!!' கட்டுரைத் தொடரை வாசித்துவிட்டு தண்ணீர் பற்றிய மேலதிக தகவல்களை வாசகர் ஒருவர் அனுப்பி வைத்திருக்கின்றார். அது வருமாறு-:

பூமியின் மேற்பகுதியில் முக்கால் பகுதி நீரால் சூழப்பட்டுள்ளது. பூமி உருண்டையில் மிக அதிகமான இடத்தைப் பிடித்துள்ள தண்ணீரின் கன பரிமாணம் 150 கோடி கன கிலோ மீற்றர் என அறியப்படுகின்றது.

இந்தத் தண்ணீரில் 98 வீதம் கடல் நீராக உள்ளது. எஞ்சியதில் ஒரு வீதம் வட துருவம், தென் துருவம் ஆகியவற்றில் பனிக்கட்டியாக அடைபட்டுக் கிடக்கின்றது. மிச்சமுள்ள ஒரு வீத அளவு நீரே பயன்படக்கூடிய நன்னீராகும். இது ஆறு, ஏரி, குளம், ஊற்று, சுனை ஆகியவற்றிலும் மற்றும் நிலத்தடியில் சேகரிக்கப்பட்டு நிலத்தடி நீராகவும் கிடைக்கின்றது.

இயற்கைச் செயற்பாட்டில் முடிவில்லாத மிகப் பெரிய உப்புநீர் தேக்கமாக —உபயோகிக்க முடியாத— நிலையில் கடல் நீர் இருந்தாலும், இது மழையை உருவாக்கி, நீர்சுழற்சியை ஏற்படுத்தும் இயற்கைக் காரணியாகச் செயல்படுகின்றது.

தேங்கிக் கிடக்கும் கடல் நீர் சூரிய வெப்பத்தால் ஆண்டிற்கு ஆறு அடி ஆவியாகிறது; இந்த ஆவியாக்கப்பட்ட கடல் நீர் மழை மேகமாக மாறுகின்றது, பின்னர் மழையாகப் பொழிகின்றது.

கடந்த முந்நூறு ஆண்டுகளில் உலகின் மக்கள் தொகை ஏழுமடங்காகியுள்ளது. அதே நேரம் தண்ணீரின் உபயோகம் 35 மடங்குகளுக்கு மேல் உயர்ந்து விட்டது.

உணவு உற்பத்தி அதிகரிக்கும்போது தண்ணீரின் தேவையும் அதிகரிக்கின்றது.

1950 இல் இருந்து நீர்ப்பாசனப்பரப்பு மூன்று மடங்காக அதிகரித்திருக்கின்றது.

உலகின் மூன்றில் ஒரு பங்கு வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் ஆண்டு ஒன்றுக்கு 25 ச. மீ. மழை கூட இல்லை.

பல முக்கிய நகரங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. சேமிக்கப்படும் அல்லது ஊறும் அளவிலும் பார்க்க பல இடங்களில் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு அதிகளவில் எடுக்கப்பட்டு வருகின்றது.

## 13 வயதுச் சிறுமிக்கு 48 வயதுக் கணவன்

### அமெரிக்க தந்தைக்குச் சிறை!!

தனது 13 வயது மகளை 48 வயதான ஒருவருக்குத் திருமணம் செய்துகொடுத்த தீவிர மதக்குழுத் தலைவருக்கு அமெரிக்க நீதிமன்றம் 5 ஆண்டுகாலச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருக்கின்றது.

'சனி வீடு' என்னும் தீவிர மதக் குழுவின் தலைவர் ஜான்பெர்ரி சனி. அரசமைப்பை எதிர்த்து அவர் பிரசாரம் செய்துவந்தார். 1993இல் தனது 13 வயது மகளை 48 வயதான தன் நண்பருக்குத் திருமணம் செய்துவைத்தார்.

இதைத்தொடர்ந்து அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. சிறுமியைத் திருமணம் செய்து கொடுத்தன் மூலம் அவளுடன் தன் நண்பர் உறவுகொள்ள உதவியுள்ளார். அது கற்பழிப்புக்கு உதவும் குற்றமாகும்என்றும் ஜான்பெர்ரி மீது குற்றம் சாட்டப்பட்டது.

திருமணம் ஒரு மதச் சடங்கு. கடவுளின் உத்தரவுப்படிதான் திருமணம் செய்து கொடுத்துள்ளேன். மதச்சடங்கில் அரசு தலையிடமுடியாது என்று ஜான் பெர்ரி வாதிட்டார். நீதிமன்றம் அதை நிராகரித்தது.

40 வயதாகும் ஜான் பெர்ரியும் 14 வயதுச் சிறுமியைக் கடந்த ஆண்டு மிச்சிகனில் திருமணம் செய்து கொண்டார். அச்சிறுமி மூலம் அவருக்கு ஒரு குழந்தையும் உண்டு.

அவர் மீதுதொடரப்பட்ட வழக்கை நீதிபதி லின் டேவிஸ் விசாரித்தார். ஜான்பெர்ரிக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனைவிதித்துத் தீர்ப்புக்கூறினார். பத்தாயிரம் டொலர் அபராதமும், சிறுமியின் சிகிச்சைக்காக17 ஆயிரம் டொலரும் அவர் செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தற்போது சிறுமி தன் தாத்தா பாட்டியுடன் இருக்கிறாள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனசைத் தொட்ட கவிதை:
## - ஓர் அனுபவப் பகிர்வு

ஒரு மொழியில் சுருங்கக் கூறும் தன்மையும், அதனோடு இணைந்த செழுமையும் கொண்டு திகழும் கலை வடிவம் கவிதை. ஒரு ! கவிஞன் தன் மனதில் அனுபவித்த உணர்வை மிகக் குறைந்த சொற்களின் துணையோடு ஒரு கவிதையூடாக எம்முடன் பகிர்ந்து கொள்கிறான்.

பக்கம் பக்கமாக விவரிக்கும்போது கூட வெளிக் கொணரப்பட முடியாத உணர்வின் நுண்ணிய தன்மைகள் கவிதையின் வரி ஒன்றில் அல்லது ஓரிரு சொற்களில் வெளிப்பட்டுத் தெரிவது கவிதையின் வெற்றி: தனது உணர்வின் தளத்துக்கு வாசகனை இட்டுச் செல்ல முடிவது கவிஞனின் வெற்றி.

இதோ...! இன்று கவிதை உலகில் தனக்கான இடத்தை உறுதி செய்து கொண்டுவிட்ட ஒரு நல்ல கவிஞர் 'சோலைக்கிளி' யின் கவிதை ஒன்று:-

## சீறி ஓடாத வருங்கால மனித நதி

அந்த எழுதத் தெரியாத பையன்
இன்று என்னைச் சந்தித்தான்:
பெரிய பரிதாபத்தின் முழு மொத்த வடிவமாய்
என் முன்னே நின்றான்.

மீசைக்கு விதை தூவி இளமை மழை பெய்ய
பயிர் முளைத்த பருவம்.
ஏதோ அலுவலுக்கு வந்தான்.
கையெப்பம் இடு என்றேன்.
இடது கையின் பெருவிரலை ஊன்றி
வெட்கிச் சிரித்தான்.
அது ஒரு
செத்த சிரிப்பு.
என் இதயம் கழன்று
அவன் இட்ட
ஒப்பத்தின் மேல் விழுந்து
கத்தியது. பின் கருகிப்
பற்றியது.

அவன் காதல் உணர்வுகளை
என்னென்று ஒருத்திக்கு
எழுதுவான் வருங்காலம்?
அழகு முகம்
கீழதடு
இரத்தச் சிவப்பு
பெண் விழுவாள் இவற்றில் மயங்கி
காகம்போல் அவன் விழுந்தவளின்
வேலி ஓரமெல்லாம்
கரைந்து திரிவானோ...
எழுத வருகின்ற உணர்ச்சிகளை
ஒலியாக்கி!

வந்திருக்கக் கூடாது அவன்
இன்று அலுவலுக்கு:
எனக்கு நிறைய வேலைகள்
இருக்கின்ற தினம் இன்று.
இனியென்ன?
நானில்லை!
அந்த எழுதத் தெரியாத
வருங்கால மனித நதி
போனாலும்; நான்
இருந்தபடி கதிரையிலே

உலகப் பாடசாலை அனைத்தையுமே
நினைத்துவிட்டு
எண்ணுகிறேன்......
அந்த நதி வரும் நாளில்
சீறி ஒலியெழுப்பி பாய்ந்து ஓடாது;
உறையும் சிறு துளியாய்!

(- நன்றி : வியூகம்)

மனித நேசம் அருகி வருகிற உலகம் இது. இதயமுள்ள மனிதனின் குரல் மெலிந்து வருகின்ற இன்றைய நிலையில் இந்தக் கவிஞனின் இதயக்குரல் உங்களுக்குக் கேட்கிறதா?

எதிர்வரும் உலகைக் கண்டு கொள்ள எமது இரண்டு கண்களுமே போதவே போதாது என்ற உண்மை சர்வதேச மட்டத்தில் நிரூபணமாகி வருகின்ற இன்றைய நாளில் எழுதத் தெரியாத ஒரு மனிதனின் இருப்பு எத்தனை பரிதாபமாய் மாறிவிடும் என்கின்ற அனுதாபப் பார்வையும், நியாயமான சமுதாய அக்கறையும் வெளிப்படுகின்ற இந்தக் கவிதை உங்களுக்குத் தரும் அனுபவம் ஒரு தனி முழுமை.

அதுபோக ஆங்காங்கே பொறியாய் ஒளி தெறிக்கும் இடங்கள்......

''அது ஒரு செத்த சிரிப்பு''

ஒப்பமிடச் சொன்னதும் அது தன்னால் இயலாத காரியம் என்பதால் பெருவிரல் அடையாளம் இட எத்தனிக்கையில் அவனுள் கவிந்த அவமானம் அவனது சிரிப்பை உயிர் இழக்க வைக்கிறது — என்ற துயரமான உண்மை இந்த இரண்டு வரிகளுக்குள் வெளிப்பட்டு விடுகிறது.

ஒரு கனிந்த இதயத்தின் சொந்தக்காரன் இந்தச் சிறுவனின் துயர நிலைக்கு துடித்துப்போகிற கணங்கள்... ''என் இதயம் கருகிப்பற்றியது'' என வரும் இடம்.

அந்தச் சிறுவன் அன்றுவர நேரிட்டதால் உண்டான அனுபவம்தருகின்ற ''வலி இனியென்ன? நானில்லை'' என நொந்து கொள்ளும் இடம்.

தன்னை அலைக்கழிக்கின்ற அவனைப் பற்றிய ஞாபகங்களோடு ஒரு சிறு துளியாய் உறைந்து விடப் போகின்ற மனிதநதி பற்றிய தனது விசனத்தை 'சோலைக்கிளி' கவிதையாக நம்முடன் பகிர்ந்து கொள்கிறார் — அல்லவா?

- ரசிகன்

## தொழிலாளி

அன்றாடம்
இரத்த வியர்வை
சிந்தி—
உணவுண்ணும்
பாவிகள்
சோகத் தழும்புகளை
முகத்தில்
சுமந்து கொண்டு
வேதனையில்
விம்மி யழுகின்ற
கண்ணீர்
பூக்கள்.

-உயிரோவியன்

## மூடவன்....

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஸேதுமில்லை. இப்போது தான் பஸ் சென்றது எனக் கூறினார்கள். இவனைப் போலவே வேறுமிருவர் சோர்வு மேலிட நின்றனர். பக்கத்தில் ஒரு சிறு வான் நின்றது இவனைக் கண்டதும் ''அண்ணை யாழ்ப்பாணமோ'' என்றான் ஒருவன். அவன்தான் வானின் சொந்தக் காரனாயிருக்க வேண்டும். இவன் தலையசைத்தான். ''அண்ணையும் அம்பது ரூபா தருவார். அரை மணித்தியாலத்தாலை போவம்'' ஐம்பது ரூபா என்றதும் இவன் ஏற்கவில்லை. அவன் பல்வேறு நியாங்கள் சொன்னான். விவாதப்பட்டுக் கொண்டிருந்த போது ஆபத்பாந்தவனாக ஒரு சீ.ரீ.பி. பஸ் வந்தது. இவனும் மற்றவர்களும் அதில் ஏறிக் கொண்டனர்.

இரண்டரைக்கு பஸ் புறப்பட்டது. இடையிடையே பலரும் ஏறிக்கொண்டனர். பல்கலைக்கழப் பிள்ளைகள் தான் அதிகம். வல்லைவெளியில் அட்டையைக் கொடுத்து விட்டு அடையாள அட்டையை வாங்கிக் கொண்டான். ஆவரங்காலில் இராணுவத்தினர் சிலரும் ஏறிக் கொண்டனர்.

''டேய், சிறீ!'' குரல் கேட்டு இவன் திரும்பிப் பார்த்தான். இவனோடு சிறு வகுப்பில் படித்த நண்பன். ஆவலோடு விசாரித்தான். இவன் அவனை அழைத்து, அருகமர்த்தினான். அவன் சுவாரஸ்யமாய்க் கதைத்துக் கொண்டே வந்தான். திடீரென, பஸ் கிறீச்சென பிறேக் போட்டு நின்றது. என்னவென இவனும் பலரும் பதைப்புடன் பார்த்தனர். இராணுவத்தினரில் ஒருவரது தொப்பி கழன்று விழுந்து விட்டமை தெரிய வந்தது. ''அட, இதே'' நண்பன் சலிப்புடன் சிரித்தான்.

யாழ்ப்பாணம் வந்து சேர ஐந்தே முக்காலாகி விட்டது. இந்நேரம் 'பண்ட்' மூடப்பட்டிருக்கும் இனி, பலாலி வீதி வழியாகவே செல்ல வேண்டும். பார்க்கில் இவனது சைக்கிள் மட்டுமே நின்றது. கிழவன் இவனையே எதிர்பார்த்திருந்ததாகக் கூறினான். இவன் காசைக் கொடுத்து விட்டு சைக்கிளிலேறி மிதித்தான். ஒரு நாள் பொழுது வீணாகி விட்டதாக இவன் சலிப்புடன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

ஆரியகுளச் சந்தியைத் தாண்டும் போது, பெருமாள் கோயிலடிப் பக்கமாக வேட்டுச் சத்தங்கள் கேட்டன. சென்றிகளுக்குள் நின்ற படையினர் துப்பாக்கிகளுடன் வெளியே வந்து அங்குமிங்குமாக நிலையெடுத்தனர். அந்த வழியால் செல்லாததற்காகத் தன்னை மெச்சியபடி இவன் வேகமாகச் சைக்கிளைச் செலுத்தினான்.

வீட்டையடைந்த போது நன்றாக இருண்டிருந்தது. வாசலில் அம்மா நின்றான். ''ஒரு இடத்துக்குப் போனா வேளைக்கு வாறேல்லையே! நானிஞ்சை நெஞ்சிடிச்சுக் கொண்டு நிக்கிறன்'' என்று சொல்லி மேலும் ஏசினான். இவன் வெறுமையுடன் சிரித்தபடி சைக்கிளை நிறுத்தினான். சோர்வுடன் [illegible] குந்தில் அமர்ந்து கொண்டான். ★

## கற்றுக் கொள்ளல்

நான் கண்டேனில்லை
எப்போதும்,
சிட்டுக்குருவியின் சோக முகத்தை.
அதன் சந்தோசத்துக்கும்
புலம்பலுக்கும்
வித்தியாசமென்ன?
சுமை மிகப் பொருள் கொணர்ந்து
கட்டிய கூட்டிலிருந்து
யன்னல் கம்பிகளுக்குள்ளிருக்கும்
என்னைப் பார்க்கிற
அதன் நோக்கு என்ன?
புரியவில்லை எனக்கு.
புரியும் போது
நானும் வாழக்கூடும்.

## இறுதிக் கனா

ஓட ஓட
வாழ்வின் தூரம் நீள்கிறது.
வெப்பம் சுடரும் தெருக்களில்
நம்பிக்கையை
அழைத்துக் கொண்டு செல்கையில்
தவிக்கிறது வையம்.
குருட்டுப் பேர் வழியாக
அது
நோக்குகிறது என்னை.
ஒரு தேவதையைப் போல
சிறகசைத்து வந்து
காலம்
நம் தலை நீவி விடுவதாய்க்
கனவு கண்டேன் இரவுகளில்.
கனவு தொடர்கிறது.
காலமோ
தலை நீவி விடவில்லை இன்னும்.
மரணம் நெருங்கும் கணம் வரை
இக்கனவில்
புதைந்திருக்கலாம் என் வாழ்வு.

- இயல்வாணன்.

# கவிதை முற்றம்

## வாழ்க்கைப் பயணம்

சோதனைச் சாவடி கடந்து
பயணிகளை அடைத்து
புறப்பட்டது பேருந்து.
பயணிகள்
அடிபட்டு இடிபட்டு
அரைபட்டு உள்நுழைந்து,
இடம் பிடித்து
நிம்மதியாய் நிமிர்ந்தவேளை
குலுக்கலுடன் நின்றது ஊர்தி.
அடுத்த சேதனைச் சாவடிமுன்
மீண்டும் இடம் பிடிப்பு......
மீண்டும் மீண்டும் தொடர்தவிப்பு......
ஓ......! யாழ்ப்பாணத்தவர்
வாழ்க்கைப் பயணமும் அப்படித்தானே.

- தென்பொலிகை குமாரதீபன்.

## போற்றாமல் விடலாமா.....?

போற்றுவோம் எங்கள் தமிழை போற்றுவோம்
புவனமெங்கும் தமிழில் கருமங்கள்
நிகழ்த்துவோம்
ஏற்றுவோம் எங்கள் தமிழை ஏற்றுவோம்
ஈழமெங்கும் பணிமனை யாவிலும்
ஏற்றுவோம்
ஆற்றுவோம் உரைகளை தமிழில்
ஆற்றுவோம்
அன்னை மொழியை ஆளுமை செய்தே
ஆற்றுவோம்
சாற்றுவோம் தமிழில் பாக்களை சாற்றுவோம்
சஞ்சலம் நீங்க எங்கள் தமிழை
வாழ்த்துவோம்.

- தமிழானந்த பாரதி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிராளியின் காதைக் கடித்துக் குதறிய குத்துச் சண்டை வீரர் மைக் டைஸன்!

உலகம் ஆவலுடன் எதிர்கொண்டிருந்த உலக அதிபாரக் குத்துச் சண்டைப் போட்டி காதைக் கடித்துக் குதறும் நாய்ச் சண்டையாக முடிவுற்றது.

உலக அதிபாரக் குத்துச் சண்டை வீரராக இருந்த காலத்தில், அழகுப் போட்டி ஒன்றில் வென்ற கறுப்பு அழகி ஒருவரைக் கற்பழித்து அந்தக் குற்றத்துக்காக சிறைத்தண்டனை பெற்று, அனுபவித்த மைக் டைஸன் தான் மீண்டும் தனது காட்டுமிராண்டித்தனத்தை வெளிப்படுத்தி, குத்துச் சண்டைக் களத்தில் நீங்கா அவப் பெயரைப் பெற்றிருக்கின்றார்.

கடந்தசனியன்று நெவடா மாநிலத்தில் லாஸ்வேகஸ் நகரில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியிலேயே மைக் டைஸன் இவ்வாறு அநாகரிகமாக நடந்துகொண்டார்.

## கறுப்பழகியை கற்பழித்தவர்

சில ஆண்டுகளுக்கு முன்னர் தமது வெற்றியைப் பாராட்ட வந்த ஸ்னூப் டொகி டொக் என்ற கறுப் பழகியைக் கற்பழித்தார் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை அடுத்து அமெரிக்க நீதிமன்றம் ஒன்று அவருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்ததும் —

மூன்று ஆண்டுகளுக்கு அதிகமான காலத்தை சிறைக்குள் 'கம்பி எண்ணிக்' கழித்த மைக் டைஸன், சிறைக்குள் அவர் பேணிய நன்னடத்தை காரணமாக — ஆறு ஆண்டு கால சிறைவாசம் முடிவதற்கு முன்பதாகவே — பரோலில் செல்ல அனுமதிக்கப்பட்டதும் தெரிந்தவையே.

இரண்டு தடவைகள் உலக அதிபாரக் குத்துச் சண்டை வீரர் என்ற பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்ட டைஸன், தமது விடுதலைக்குப்பின்னர் கடந்த நவம்பர் மாதம் 9ஆம் திகதி நடந்த உலக அதிபாரக் குத்துச் சண்டைப் போட்டியில் இவாண்டர் ஹொலிபீல்ட்டிடம் தோற்று தமது பட்டத்தை இழந்தார்.

## மீண்டும் போட்டி

இந்த நிலையில் மீண்டும் உலக அதிபாரக் குத்துச் சண்டைப் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இவாண்டர் ஹொலிபீல்ட்டைத் தோற்கடிப்பதன் மூலம் உலக அதிபாரக் குத்துச்சண்டைப் பட்டத்தை மூன்றாம் தடவையாக பெற்றுக் கொள்ளும் முயற்சியில் டைஸன் குதித்தார்.

இந்தப் போட்டியை ஏப்ரலில் நடத்துவதற்கு முதலில் முடிவானது. ஆனால் டைஸனின் கண் அருகே ஏற்பட்ட வெட்டுக்காயம் ஒன்று காரணமாக அப்போட்டி ஜூன் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்தப் போட்டியில் யார் வென்றாலும் யார் தோற்றாலும் இருவருக்கும் தலா மூன்று கோடி டொலர் பரிசுப் பணம் நிச்சயம் என உடன்பாடு காணப்பட்டிருந்தது.

## சண்டை ஆரம்பம்

கடந்த சனியிரவு இந்தச் சண்டை ஆரம்பமானது. முதல் இரண்டு சுற்றுக்களிலும் இருவரும் இருபெரும் இராட்சத மிருகங்கள் போல் மோதினார்கள்; சரமாரியான குத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள்.

## வலதுகண் புருவத்தில் டைஸனுக்குக் காயம்


இரண்டாவது சுற்றில் இவாண்டர் ஹொலிபீல்ட்டின் தலையுடன் மோதியதால் டைஸனின் வலது கண் புருவத்தில் பெரு வெடிப்பு ஏற்பட்டு இரத்தம் கொட்டத் தொடங்கியது.

இதனால் ஏற்பட்ட கோபத்தாலும், அவமானத்தாலும் டைஸன் தனது நிதானத்தை இழந்து வெறி பிடித்தவர் போல் மோதத் தொடங்கினர்.

## காதைக் கடித்தார்

மூன்றாவது சுற்றின் ஆரம்பத்தில் திடீரென ஹொலிபீல்ட்டை நெருங்கி வந்த டைசன், ஹொலிபீல்ட்டிடம் இருந்து சரமாரியாக வந்த குத்துக்களைத் தவிர்ப்பதற்காக — ஹொலிபீல்ட் கைகளை வீசித் தமது முகத்தின் மீது அதிரடி விடுவதைத் தவிர்ப்பதற்காக — தமது முகத்தைக் ஹொலிபீல்ட்டின் முகத்துடன் புதைத்துக் கொண்டார். அந்தச் சாட்டில் ஹொலிபீல்ட்டின் வலது காதைக் கடித்தும் குதறினார்.

இதை அவதானித்த நடுவர், உடனடியாக மூன்றாவது சுற்றை இடைநிறுத்தினார். நடுவரின் அந்த அறிவிப்பை ஏற்று மோதலில் இருந்து விலகிச் சென்ற ஹொலிபீல்ட்டை — நடுவரின் உத்தரவுக்கு மாறாக — பின்னால் சென்று தாக்கினார் டைஸன்.



கடந்த நவம்பரில் இவாண்டர் ஹொலிபீல்ட்டிடம் மைக் டைஸன் குத்து வாங்கி வீழ்ந்து பட்டத்தை இழந்த போது.

இந்தக் குற்றத்துக்காகவும், ஹொலிபீல்ட்டின் வலது காதைக் கடித்துக் குதறியதற்காகவும் டைஸனுக்கு இரண்டு புள்ளி கழிப்பதாக நடுவர் அறிவித்தார். இதே போன்ற குற்றங்களைச் செய்தால் டைஸனை போட்டியிலிருந்து விலக்கப் போவதாகவும் நடுவர் அறிவித்தார்.

தொடர்ந்து மூன்றாவது சுற்றின் எஞ்சிய நேரத்துக்கான மோதல் தொடங்கியது.

## கடித்துத் துப்பினார்

மூன்றாவது சுற்று முடியும் தறுவாயில் ...... டைஸனின் குத்துக்களைத் தவிர்ப்பதற்காக ஹொலிபீல்ட் தமது தலையை டைஸனின் தலையுடன் புதைத்துக் கொண்டார். வகையாகக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்த எண்ணிய டைஸன், இம்முறை ஹொலிபீல்ட்டின் இடது காதை இலக்கு வைத்து நகர்ந்தார்; அந்தக் காதை ஒரே கடியாகக் கடித்து துப்பினார். நோவினால் துடித்துப் போன ஹொலிபீல்ட் பேய்க் கூச்சலிட்டவாறு பாய்ந்து ஒதுங்கினார்; அவரது துண்டான காதுப் பகுதியிலிருந்து இரத்தம் கொட்டத் தொடங்கியது.

உடனேமோதலைநிறுத்திய நடுவர், டைஸனை மோதலிலிருந்து விலக்கி, ஹொலிபீல்ட் வென்றதாக அறிவித்தார். இதனால் கோபமுற்ற டைஸன், மோதல் களத்திலிருந்த ஹொலிபீல்ட்டை தாக்கப் பாய்ந்து ஓட முயன்றார். ஆனால் பொலீஸார் பாய்ந்து டைஸனைப் பிடித்துக் கொண்டனர்.

## பரிசுப்பணம் டைஸனுக்கு வழங்கப்படவில்லை

இந்தப்போட்டி மூலம் ஹொலிபீல்ட் டைஸனிடமிருந்து கடந்த நவம்பர் 9 ஆம் திகதி தாம் பறித்துக் கொண்ட உலக அதிபாரக் குத்துச்சண்டைப் பட்டத்தை தம்முடன் தக்கவைத்துக் கொண்டார், அத்தோடு மூன்றுகோடி அமெரிக்க டொலரையும் சம்பாதித்துக் கொண்டார்.

ஆனால் டைஸனுக்கு இந்த மோதலுக்காக வழங்கப்பட வேண்டிய மூன்று கோடி அமெரிக்கடொலர் வழங்கப்படவில்லை. போட்டியில் அவரது தவறான நடத்தை காரணமாக—அவருக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை விசாரணை முடியும்வரை—



முதல் சுற்றில் டைஸனை விளாசும் ஹொலிபீல்ட்.

அந்தப்பணத்தை வழங்குவதை நெவாடா மாநில மெய்வன்மை ஆணைக்குழு இடைநிறுத்தி வைத்துள்ளது.

துண்டாக்கப்பட்டஹொலிபீல்ட்டின் காதை ஒட்ட வைத்து அவருக்கு 'பிளாஸ்டிக்' அறுவைச் சிகிச்சை செய்யவேண்டியிருக்கும் என்கின்றார் ஹொலிபீல்ட்டின் முகாமையாளர்.

''நான் டைஸனை நோக்கிக் குத்துக்களை விட்ட போது அவர் பதிலுக்குத் தாக்குவதை விடுத்து எனது முகத்தில் துப்பி, காதுகளைக் கடித்துக் குதறினார் —'' என்கின்றார் ஹொலிபீல்ட்.


''இவாண்டர் ஹொலிபீல்ட் இரண்டு சுற்றுகளிலும் போட்டி விதிமுறைகளுக்கு மாறாக டைஸனை தலையால் மோதித் தாக்கினார். அது தவறான விளையாட்டாகும், ஹொலிபீல்ட் தெருச் சண்டைக்காரனாகி நீண்டகாலமாகி விட்டது. காதில் சிறிய கடி பட்டதற்காக அவர் குட்டிநாய் போல ஊரைக் கூட்டி கத்தி ஊளையிட்டார்'' — என்று கூறுகின்றார் டைஸனின் முகாமையாளர்.

கற்பழிப்புக் குற்றச்சாட்டுக்காக டைஸனுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையில் இன்னும் சுமார் இரண்டு ஆண்டுகள் பாக்கி உள்ளன. அவர் நன்னடத்தைப் பிணையிலேயே விடுவிக்கப்பட்டுள்ளார். இந்தக் காலத்தில் அவர் 'கிரிமினல்' குற்றம் ஏதும் செய்யின் நன்னடத்தைப் பிணை வாய்ப்பை இழந்து, எஞ்சிய காலத்துக்கான தண்டனையையும் அனுபவிக்க நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுக் களத்தில் எதிர்ப் போட்டியாளரின் காதைக் கடித்துக் குதறியதற்காக டைஸனுக்கு எதிராகக் கிரிமினல்குற்றச்சாட்டுசுமத்த முடியுமா என்பது குறித்து ஆராயப்படுகின்றது. அப்படி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, அது நிரூபிக்கப்பட்டால், டைஸன்பழைய பாக்கியுடன் சேர்ந்து மேலும் சில ஆண்டுகளை சிறையில் கம்பி எண்ணிக் கழிக்க வேண்டி நேரிடும் என்பதுதான் பரிதாபத்துக்குரிய அவரின் நிலையாகும்.

ஹொலிபீல்ட்டின் முக்கால் அங்குல நீளமும் கால் அங்குல அகலமும் கொண்ட காதின் பகுதியை டைஸன் கடித்து எடுத்து விட்டார். இதற்காக டைஸன் மீது அவர் வழக்குத் தொடருவாரா? அல்லது இந்த மோதலின் பின்னர் டைஸன் பகிரங்மாக கோரிய மன்னிப்பை ஏற்று சமாதானம் செய்வாரா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

★



கடந்த சனியன்று நடந்த போட்டியில் ஹொலிபீல்ட்டின் காதைக் கடித்துக் குதறும் டைஸன்.

-கவி-

# பாதாளத்தில்....

(IV ஆம் பக்கத் தொடர்ச்சி)
காட்டி அலைக்கின்றது. அவஸ்தை தாங்க இயலவில்லை.

கணிப்பிலே சந்தேகம் எழுகிறது. நாங்கள் கிறிஸ்தியின் மட்டத்துக்கு கீழே துளாவுகிறோம் என்ற எண்ணம் உறுதியாகின்றது. இம்முறை வெற்றி நெருங்கிட்டது.

## மேலே......

கண்கொட்டாமல் குழாய்க்கிணற்றுக்குள் கிறிஸ்தியையே பார்த்துக்கொண்டிருந்த றொப் தன்னை மறந்து கத்திவிட்டான். எல்லோரும் அலறிப் புடைத்துக் கொண்டு பதறினர்.

ஆம்! கிறிஸ்தியின் மீது மண் சரிந்து கொட்டுப்பட்டது போல் ஒரு நிகழ்வு. ஆனால் மறுகணமே புதிய காற்று புகுந்து கொண்டதை உணர்ந்தான் றொப். அவர்கள் கிறிஸ்தியை அடைந்து விட்டார்கள்! இரு கரங்கள் மண்ணை விலக்கி கிறிஸ்தியை அள்ளுவதைக் கண்டான் றொப், மேலே ஒரே உணர்வின் பிரவாகம்,

'இயேசுவே! இயேசுவே'... என்ற தாயின் வார்த்தைகள். குழந்தையைக் காணவேண்டும் என்ற தவிப்பு; துடிப்பு

## கீழிருந்து... மேலே...

குழந்தையை அள்ளி அணைத்தபடி, றொப்பின் பார்வையில் இருந்து குழந்தை மறையும்படி பின்வாங்கி தவழ்ந்து தவழ்ந்து நிலைக்குத்தான வெளிக்கு வந்து நிமிர்ந்தான் ஒரு வீரன்.

மேலே றொப் சுமார் ஆறரை மணித்தியாலங்கள் கழிந்து விழிகளை மூடி மௌனமாக சில நிமிடங்கள் தியானத்தில் லயிப்பது போலானான். அவன் எழுந்து சுரங்கவாசல் வந்து அவர்களை வரவேற்கத் தயாரானான்.

என்னே அதிசயம்! பல கீறல் காயங்கள்; தலையில் சற்றுப் பலமான அடி; ஒரு கையில் நெருடப்பட்ட நரம்புகள்; இவ்வளவே! இந்தப் பெரிய விபத்தில் மாட்டிக் கொண்ட குழந்தைக்கு ஏற்பட்ட பாதிப்புகள் — தவிர, ஏக்கம் அடைந்த நிலைமை— என்றாலும் உண்மையில் பிரார்த்தனை வீண்போகவில்லை. இயேசு சீவிக்கிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் வெள்ளம்

கடவுள் வாழ்த்து சொல்ல வந்த வள்ளுவர் கடவுள் இருக்கும் இடத்தை தனது மூன்றாவது குறளிலே காட்டுகிறார்.

மலர்மிசை ஏகினான் இறைவன் என்று விட்டார். மலர் போன்ற மனது, மனிதம் மலர்ந்த இதயம் இவை இருந்தால் அங்கே இறைவன் வந்து இருந்து விடுவானாம். இது கட்டுக்கதை என்றால் இப்படி இதயம் உடையவனைக் கடவுளாகக் கண்டுவிடு.

உன் உள்ளத்தை இறுக்கமாக, உணர்வுகளற்ற சடமாக, மரக்கட்டையாக வைத்துக்கொள்ளாதே. மென் மலராக அது இருக்கட்டும். அடுத்தவன் உணர்வுகளுக்கும் ஆசைகளுக்கும் அங்கே இடம் இருக்கட்டும்.

அப்போது உலகம் உன்னிடம் நிறைய எதிர்பார்க்கும்! உன் மென் இதயமே கோயில் ஆகிவிடும்; அங்கே இறைவன் வீற்றிருப்பான்.

உன் மனம் சரியில்லாதபோது, அங்கே கெட்ட எண்ணங்கள் குடியிருக்கும் போது நீ புறத்தே கோயிலைத் தேடி அலைந்து திருப்தி கிட்டப்போவதில்லை. அது உன்னை நீயே ஏமாற்றும் முயற்சி. நீ விழுந்து விழுந்து கும்பிடுவதை உலகம் நம்பப்போவதில்லை.

உன் நன் மனத்தே ஏகிய இறைவனின் பெருமைக்குரிய பாதங்களை — மாணடிதனை — நீ சேர்ந்து விடு; தூய உன் இதயத்திலே நீ மயங்கிவிடு.

நிச்சயமாக நீ நிம்மதியாக வாழலாம்; இந்த நிலமே சொர்க்கமாக வேறு சொர்க்கங்களைத் தேடியலையாமல் வாழலாம்.

தன் மனமென்னும்...

''மலர் மிசை ஏகினான் மாணடிசேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.''
— என்றார் வள்ளுவர்.

--0003
(கடவுள் வாழ்த்து)

- அம்பிகைபாகன்

# இந்த வார இராசி பலன்

(05 - 07 - 1997 முதல் 11 - 07 - 1997 வரை)

| | | | |
|---|---|---|---|
| சனி | | | *ஞா சந் |
| கே | இராசிச் சக்கரம் | | பு வெ |
| வி | | | ரா |
| | | | செ |

அரசியலில் சூழல் காற்று வீசும். அமைதி, சமாதானம் தேட மக்கள் முயல்வர். வடக்கு, மேற்கு உலகங்களின் ஆலோசனையை வடக்கு, மேற்கு திசையினர் கேட்க நேரிடும். மேற்கு நாடுகளும்-கிழக்கு நாடுகளும் உலகில் சந்தேகப் பார்வையைச் செலுத்தச் செய்யும்.

**மேடம்:** உங்களுக்குக் கட்டுமீறிய செலவுகள் ஏற்படுகின்றதெனக் கலங்காதீர்கள். ஆக்கத்திற்காகக் கொஞ்சம் செலவு செய்வதை நன்மை எனக் கருதுங்கள். தொழில் ஸ்தானத்தில் மந்தநிலை ஏற்படச்செய்யும். சற்று நிதானத்துடன் செயற்படுங்கள். உங்களிடம் உதவிக்கு ஓடி வந்தவர்கள் நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள் என உதவி செய்யவா போகிறார்கள்? நானுண்டு, எனது வேலையுண்டு என உங்கள் பாதையிலேயே இராஜநடை போடுங்கள். பொருளில் கொஞ்சம் கவனமாகக் கொடுக்கல், வாங்கல் செய்யுங்கள். தூர தேசச் செய்தி அல்லது உதவிகள் சிலருக்கு வரத்தான் செய்யும். அதைப் பற்றிப் பெரிதாக எண்ணிக் கொள்ளல் வேண்டாம்.

**இடபம்:** உங்களுக்குப் பட்டென்று வரும் கோபத்தாலும் சட்டென்ற அவதிக் குணத்தாலும் கலக்கமுற நேரிடும். சகோதரர்கள் குறைசொல்லுவார்கள். எதிர்ப்பாலாரால் கலக்கமும் வரும்; உதவிகளும் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் சீற்றங்கள் ஏற்படும். நண்பர்களின் உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்க இடமில்லை. பொருளால் அதிக யோசனைகள் வந்தபடி இருக்கும். அயலவர்களால் உதவிகள் கிடைக்கும். சிலருக்கு வாக்குக் கலகம் ஏற்பட இடம் உண்டு.

**மிதுனம்:** நீங்கள் வெளுத்ததெல்லாம் பால் என எண்ணி ஏமாறக் கூடாது. இரும்பு வாகனம், யந்திர வேலை செய்பவர்களுக்கு நன்மையைக் கொடுத்தாலும், ஏனைய தொழில் செய்பவர்களுக்கு தொழில் ஸ்தானத்தில் பல பிரச்சினைகள் கருவாகி உருவாக இடம் உண்டு. இளைய சகோதரங்களால் வீண் பிரச்சினைகளும், மனஸ்தாபங்களும், கவலைகளும் மாறி மாறி ஏற்படும். குடும்பத்தில் வைத்தியச் செலவுகள் அதிகரிக்க இடம் உண்டு.

**கடகம்:** நீங்கள் மெய்யுணர்வு கூடியவர்கள். தெய்வ நம்பிக்கை மிகுந்த உங்களை சில ஏமாற்றங்கள் காத்திருக்கின்றன. சில சந்தர்ப்பங்களும் வரவிருக்கும் பொருள் வரவும் உங்களின் அலட்சியத் தன்மையால் பிற்போடப்படலாம். அயலவர்களுடன் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். தொழில் ஸ்தானத்தில் சிலருக்கு நன்மையான பலன்களும், நண்பர்களின் உதவிகளும் கிடைக்க இடம் உண்டு. குடும்பத்தில் புறுபுறுப்பும், கறகறப்பும் கொஞ்சம் இருக்கத்தான் செய்யும். ஏதோ காலத்தைச் சமாளித்துக் கொள்ளுங்கள்.

**சிங்கம்:** நீங்கள் எதற்கும் அசைய மாட்டீர்கள். துன்பத்தையும், இன்பத்தையும் சமநிலைப்படுத்தி வாழ முற்படும் நீங்கள் கொஞ்சம் நிதானமாகச் செயற்பட வேண்டும். பொருளையே பெரிதாக நம்பி

## சோதிட சஞ்சீவி

இருக்கும் இவ்வுலகில் பொருள் வரவுகளை அலட்சியப்படுத்தாது, சாதகப்படுத்திக் கொள்ளுங்கள். இராகு, கேது மாற்றம் உங்களைத் தடுமாறச் செய்யும். கொடுத்த வாக்கால் அவதிப்படுவீர்கள். எதற்கும் நிதானத்துடன் சற்று சிந்தித்துச் செயற்படுங்கள். பொருளைக் கையில் வைத்திராதீர்கள். உங்களை அறியாது செலவு செய்து விட்டுக் கலங்குவீர்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும்.

**கன்னி:** உங்களுக்குப் படபடப்பும் எடுத்ததற்கெல்லாம் கோபப்படும் போக்கும் ஏற்படத்தான் செய்யும். சகோதர உதவிகள் கிடைக்கும். தொழில் பீடத்தில் உயரதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். புத்திரரால் பொருள் செலவுகள் அதிகரிக்கும். கைகால் வலி, வயிற்றுநோ, பல்நோ என வைத்தியம் செய்ய நேரிடலாம். உங்களை வீணாகப் பெரிதாக புளுகாமல் நிதானமாகச் செயற்படுங்கள். அதிகமாகக் கதைக்கப்போய், வீண் கஷ்டங்களைத் தேடிக்கொள்ள இடம் உண்டு.

**துலாம்:** நீங்கள் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். போக்கு வரத்தில் இழப்புக்கள் ஏற்பட இடமுண்டு. பொருள் செலவுகள் அதிகரிக்கும். வீண்அவமானங்கள் ஏற்படலாம். சந்தர்ப்பத்திற்கு ஏற்ப செயற்படுவதனால் நன்மைகள், மாற்றங்கள் ஏற்பட இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். அதிகம் யோசிக்காமல் நிதானமாகச் செயற்படுங்கள். சமாளித்துக் கொள்ளுவீர்கள்.

**விருச்சிகம்:** கொஞ்சம் அவதி உடைய நீங்கள் நிதானமாகச் செயற்பட வேண்டும். தொழில் ஸ்தானத்தில் மாறி மாறி நன்மையும், கலக்கமும் ஏற்படத்தான் செய்யும். எண்ணியதெல்லாம் எந்த நேரமும் நடக்குமா? குழந்தைகளுக்கும் சகோதரர்களுக்கும் நல்லதல்ல; அவர்களால் அலைச்சல் ஏற்படச் செய்யும். தந்தைவழியினருக்கு மாற்றங்கள் ஏற்படச் செய்யும். வீடு மனையில் அமைதியைத் தேட முடியாது. தெய்வ வழிபாடு சற்று அமைதியைத் தரச் செய்யும்; 'அமைதி கலகநாஸ்தி' என்பதை அனுபவத்தில் உணர்வீர்கள்.

**தனுசு:** நீங்கள் எதையும் ஒளிவு மறைவின்றிச் சொல்லிவிடுவதனால் வீண் பகைகள் ஏற்படச் செய்யும் அலைச்சலுண்டு. தொழில் ஸ்தானத்தில் நிதானமாகச் செயற்பட வேண்டும். அதனால் நன்மைகள் ஏற்படச் செய்யும். சகோதரர்களுடன் பொருளால் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படக் கூடும். போக்கு வரத்தில் அவதானமாக இருக்க வேண்டும்; அல்லது இழப்புக்கள் ஏற்படலாம்.

**மகரம்:** 'தெய்வத் தால் இயலாதது எனினும் மெய் வருந்தக் கூலி' கிடைக்காமலா போகும்? எதையும் நிதானத்துடன் செய்யுங்கள். அயலவர்கள் வீணாகப் பகைக்க இடம் உண்டு. காசு பொருள் எனத் தேடி ஓடுவீர்கள். புத்திரரால் கட்டுமீறிய செலவுகள் ஏற்படச் செய்யும். பெற்றோர் வழியினர் மனக்குறைப்படுவார்கள். அதிக யோசனையை விட்டு விட்டு, ஆக்கமான செயற்பாடுகளைச் செய்ய முற்படுங்கள். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்படும்.

## மகாதேவா ஜோதிடம்

**கும்பம்:** உங்களுக்கு ஏழரைச்சனி நடந்தால் தான் என்ன? முழுகத் தொடங்கிய உங்களுக்கு கூதல் என்ன? குளிர் என்ன? எதற்கும் துணிந்து செயற்படுங்கள். நாமென்ன இப்போது சுதந்திரமாகவா திரிகின்றோம்? எதையும் சந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போல் செய்து காரியமாக்கிக் கொள்ளுங்கள். உடல் நிலையை அவதானமாகப் பாருங்கள். சிலருக்கு காயங்கள் ஏற்படலாம். தொழில்



### தீரராக வாழுவோம்

சின்னஞ் சிறிய சிறுவர் நாம்
சிறந்து வளரும் பயிர்கள் நாம்
வண்ண மான கனவுடன்
வாழும் மண்ணின் மைந்தர் நாம்!
எண் எழுத்துப் பயின்றுமே
ஏற்ற முடன் உயரு வோம்
கண் ணெனவே எமை வளர்க்கும்
கன்னித் தமிழைப் போற்றுவோம்!
அன்னை, தந்தை, குரு, தெய்வம்,
அயலின் மக்கள், விலங்குகள்,
அழகு மிக்க மண் தனை
அனு தினமும் போற்றுவோம்!
மண்ணின் உயர்வை மதித்து நாம்
மனங் குளிரப் பாடு வோம்
திண்ண மான நெஞ்சுடன்!
தீரராக வாழுவோம்.

- எஸ். ஸ்ரீகுமரன்

### கொண்டோடி வா!



காக்கா காக்கா
பறந்தோடி வா!
கண்ணுக்கு மை
கொண்டோடி வா!
குருவி குருவி
குதித்தோடி வா!
குழந்தைக்குத் தேன்
கொண்டோடி வா!
பசுவே பசுவே பாய்ந்தோடி வா!
தம்பிக்குப் பால் கொண்டோடி வா!
அணிலே அணிலே
அசைந்தோடி வா!
அம்பிக்குப் பழம்
கொண்டோடி வா!
மயிலே மயிலே
பறந்தோடி வா!
மயிலிறகு தனைக்
கொண்டோடி வா!



- அ. கமலவேணி

### விஞ்ஞான விந்தை

★ சிலந்திக்கு எட்டுக் கால்கள் உள்ளன. அதற்குக் கண்களும் எட்டுத்தான் உள்ளன.
★ நமது உடலில் வியர்க்கும் பகுதி தோல். அதில் வியர்க்காத பகுதி உதடு.
★ நாய்க்கு தோல் வியர்ப்பதில்லை. வியர்வைப் பணியை நாயின் அதன் நாக்கே செய்கின்றது. வெயில் காலத்தில் நாய்கள் நாக்கைத் தொங்கப்போடுவதன் மர்மம் இதுதான்.
★ ஒட்டகம் தனக்கு நீண்ட நாள்களுக்குத் தேவையான நீரை ஒன்றாகக் குடித்து சேமித்து வைத்துக் கொள்ளக் கூடியது. பாலைவனங்களில் அது திரிவதற்கு இந்த வலிமை அதற்கு வாய்ப்பாக உள்ளது. சில நிலைகளில் மூன்று நிமிடங்களுக்குள் சில நூறு லீற்றர் தண்ணீரை 'பம்ப்' செய்து இழுத்து — உறிஞ்சி — குடித்துவிடக் கூடியது ஒட்டகம்.
★ பறவையினங்களில் அனேகமாக ஆண் பறவைகளே கவர்ச்சியானவை.
★ பாம்புகள் எதிரியையும், இரையையும் இனம் காணும் வேளைகளில்தான் நாக்கை வெளியே நீட்டுகின்றன.
★ நமது உடலில் குருதி பாயாத பகுதி கண்ணின் கருவிழி.

- தொகுப்பு:- ஜெ. சுபாஷினி

### நொடிப் பொழுது

1. இறந்து போனவன் ஊரெல்லாம் போகிறான். அது என்ன?
2. பாடல் இல்லாத ஆட்டம்; பணம் பறிக்கும் ஆட்டம். அது என்ன?
3. துடிப்பு இருக்கும்; இதயமல்ல. முள் இருக்கும்; செடியுமல்ல. அது என்ன?
4. திரி இல்லாத விளக்கு. திரிலோகம் எல்லாம் தெரியும். அது என்ன?
5. மனிதன் வாயில் மலரும் பூ என்ன பூ?
6. ஓட்டு வீட்டை உடன் கொண்டு செல்லுவார். அது என்ன?
7. கையில்லாமல் நீந்தும்; கொம்பில்லாமல் போகும். அது என்ன?

தொகுப்பு: கி. கல்கிராஜ்
ஆண்டு -6 'A'
மானிப்பாய் இந்துக்கல்லூரி.

விடை
1. கருவாடு 2. சூதாட்டம் 3. கடிகாரம் 4. சூரியன் 5. சிரிப்பு 6. ஆமை 7. படகு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அல்பேனிய நாட்டில் தற்பொழுது உருவாகிவரும் நிச்சயமற்ற நிலை!

## ஜனாதிபதி பெரீஷாவின் ஆளும்கட்சி தோல்வி

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேர் தலை அடுத்து உலக நாடுகளின் கவனம் மீண்டும் அல்பேனியா பக்கம் திரும்பி இருக்கிறது.

இந்த வருடமுற்பகுதியில் அல்பேனியாவில் இடம் பெற்ற படுமோசமான சம்பவங்களை அடுத்து அல்பேனியாவில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இத்தேர்தல் நடத்தப்பட்டது.

தேர்தலில் அல்பேனியாவின் சர்ச்சைக்குரிய ஜனாதிபதி சாளி பெரீஷாவின் (Sali Bzrisha) ஜனநாயகக் கட்சி பெரும்பான்மைப் பலம் பெறத் தவறிவிட்டது. எதிர்பாராதவிதத்தில் எதிர்க்கட்சியான சோஷலிஸ்ட்கட்சி கூடுதல் ஆசனங்களைப் பெற்றுள்ளது.

சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் பாரொஸ் நானோ (Fatos Nano) தமது கட்சிக்கே வெற்றி என்று அறிவித்துள்ளார்.

இந்த வருட முற்பகுதியில் அல்பேனியாவில் இடம் பெற்ற குழப்பங்களை அடுத்து ஜனாதிபதி சாளி பெரீஷாவும் சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் பாரொஸ் நானோவும் இணைந்து அல்பேனியாவில் அவசரகால கூட்டரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தி வன்செயல்களுக்கு முடிவு கண்டிருந்தனர்.

ஜூன் மாத இறுதியில் தேர்தல் நடத்துவது என்ற இணக்கத்தின் பேரில் அப்பொழுது கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்க சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் பாரொஸ் நானோ இணங்கி இருந்தார்.

தற்போது தேர்தல் முடிவடைந்து விட்டது.

தேர்தல் முடிவை ஏற்க மறுத்து மற்றும் ஓர் உள்நாட்டுக் குழப்பத்தை எதிர்கொள்ளும் நிலையில் சாளி பெரீஷா இல்லை. ஏற்கனவே பெரீஷா ஆதரவாளர்கள் பலர் நாட்டைவிட்டு வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

நீண்டகாலமாக அல்பேனியா சோவியத் யூனியனின் ஆதிக்கத்தின் கீழ் சிக்காமல் இருந்து வந்தது. ஓரளவு சீன ஆதரவுக் கொள்கையை அது கடைப்பிடித்து வந்தது. எனினும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இடம்பெற்ற மாற்றங்கள். அல்பேனியாவையும் விட்டுவைக்கத் தவறவில்லை. 1991 ஆம் ஆண்டு இங்கும் கம்யூனிஸம் வீழ்ச்சி அடைந்தது.

### ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் பெரீஷா

ஜனநாயகக் கட்சித் தலைவர் சாளி பெரீஷா அல்பேனியாவில் சாதாரண ஏழைக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். தனது விடா முயற்சியினால் டாக்டர் ஆகி பின்னர் அரசியலுக்குள் பிரவேசித்தார்.

1992 ஆம் ஆண்டு அல்பேனியாவில் இடம் பெற்ற தேர்தலில் இவரது கட்சி அமோக வெற்றி ஈட்டி இவர் ஜனாதிபதியானார்.

கம்யூனிஸ வீழ்ச்சி, ஜனநாயக முறையில் நடந்த தேர்தல் ஆகியவற்றால் கவரப்பட்ட அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளின் ஆதரவை சாளி பெரீஷா அப்பொழுது சுலபமாகப் பெறத்தக்கதாக இருந்தது.

சாளி பெரீஷாவின் அரசியல், பொருளாதார சீர்திருத்தங்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அவரை கதாநாயகன் தரத்துக்கு உயர்த்தி விட்டிருந்தன.

1985 இல் மரணமான அல்பேனியாவின் சர்வாதிகாரி என்வெர் ஹொக்ஷாவின் (Enver Hoxha) அடகுமுறை ஆட்சிக் காலத்திலும் —

அதன் பின்னர் 1991 இல் கம்யூனிஸ்ட் ஆட்சி வீழ்ச்சியின் போது இடம் பெற்ற குழப்பங்களின் போதும்— நாட்டை விட்டு வெளியேறி இருந்த ஆயிரக்கணக்கான அல்பேனியர்கள் மீண்டும் நாடு திரும்ப ஆரம்பித்தனர்.

அல்பேனியாவில் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது; பத்திரிகைச் சுதந்திரமும் பாதுகாக்கப்பட்டது; மேற்கு நாடுகளின் உதவிகள் தாராளமாகக் கிடைத்தன.

### அடக்குமுறையை ஆரம்பித்தார்

ஆனால் பெரீஷாவின் ஆட்சியில் படிப்படியாக மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

பெரீஷாவின் சிந்தனைகள் ஜனநாயக அடிப்படையில் இருந்தன. ஆனால் செயற்



அதிபர் சாளி பெரீஷா

பாடுகளில் ஸ்ராலினிஸ வாதம் தென்பட்டது.

1917 ஆம் ஆண்டு சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து ஜோசப் ஸ்ராலினின் ஆட்சிக்காலமே படுமோசமான அடக்குமுறை ஆட்சிக் காலமாகக் கருதப்படுகிறது.

### பெரீஷாவின் மோசமான அடக்குமுறைகள்

தமது கட்சிக்கு எதிர்ப்புக் கிளம்பவே பெரீஷா தனது அரசியல் எதிரிகளை அடக்கத் தொடங்கினார். அவரது ஜனநாயகக் கட்சிக்குள் களையெடுப்புக்கள் இடம் பெற்றன. அல்பேனியாவின் முன்னாள் சர்வாதிகாரி வைத்திருந்தது போன்ற இரகசியப் பொலீஸ் படை ஒன்றையும் பெரீஷா உருவாக்கினார்.

இரகசியப் பொலீஸாரினாலும், காடையர்களினாலும் அதிருப்தியாளர்கள் பொது இடங்களில் வைத்துத் தாக்கப்பட்டனர். சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் பாரொஸ் நானோ சிறையில் அடைக்கப்பட்டார்.

கம்யூனிஸ்ட்டுக்களின் ஆட்சிக்காலத்தில் நாடு பெரும் அளவு நாசம் செய்யப்பட்டிருந்ததால் பெரீஷாவின் ஆட்சியில் தலையிட மேற்கு நாடுகள் தயக்கம் காட்டின. அத்துடன் பால்கன் (Balkan) நாடுகள் தொடர்பாக அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் அப்பொழுது கொண்டிருந்த கொள்கையை பெரீஷா ஆதரித்து வந்ததால், பெரீஷாவின் அடக்கு முறை ஆட்சியைத் தட்டிக் கேட்க முடியாத நிலையில் மேற்கு நாடுகள் இருந்தன.

### முபுட்டுவும் பெரீஷாவும்

ஸயரில் (தற்போது கொங்கோ) சர்வாதிகாரி முபுட்டுவின் ஆட்சியின் போதும் இதே போன்ற நிலையே இருந்து வந்தது.

ஆபிரிக்க நாடுகள் சம்பந்தமாக அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் கையாண்ட கொள்கைகளை முபுட்டு கண்ணைமூடிக் கொண்டு ஆதரித்தார். அத்துடன் அண்டை நாடான அங்கோலாவில்

உலக உலா

என்.பி.சீலன்

இருந்த மார்க்சிய அரசுக்கு எதிரான வலதுசாரிக் கிளர்ச்சியாளர்களுக்கு சி. ஐ. ஏயின் உதவிகள் ஸயர் மூலமாகவே கிடைத்து வந்தன. ஸயரில் ஆட்சி மாற்றம் தவிர்க்க முடியாத கட்டத்தை அடைந்தபோது மேற்கு நாடுகள் முபுட்டுவைக் கைவிட்டன.

இதே போன்ற நிலைமையிலேயே பெரீஷாவும் இருந்து வருகிறார். அவர் தேர்தலில் தோற்றுவிட்டார். மேற்கு நாடுகள் அவரைக் கைவிடப்போகின்றன.

### வருட முற்பகுதியில் இடம்பெற்ற குழப்பங்கள்

இந்த வருட முற்பகுதியில் அல்பேனியாவில் இடம் பெற்ற மோசமான வன்முறைச் சம்பவங்களுக்கு அரசினால் நடைமுறைப் படுத்தப்பட்ட முதலீட்டுத் திட்டங்கள் (Investment Schemes) கைவிடப்பட்டதே காரணம் ஆகும். பெரும்பாலும் முழு அல்பேனியர்களும் இந்த திட்டங்களில் சம்பந்தப்பட்டிருந்தனர்.

முதலில் அமைதியான முறையிலேயே அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பித்தன. ஆனால் பின்னர் உலகில் எந்த ஒரு நாட்டிலுமே இடம்பெற்றிருக்காத விதத்தில் வன்முறைச் சம்பவங்சள் இடம்பெற்றன.

தேசிய பொலீஸ் படை, இராணுவம், அரசு நிர்வாகம் முற்றாக செயல் இழந்தன. படையினர் ஆயுதக் களஞ்சியங்களைக் கைவிட்டுச் சென்றனர். பொதுமக்கள் அவற்றை அள்ளிச் சென்றனர். நாட்டில் இருந்த அத்தனை சிறைச்சாலைகளும் உடைக்கப்பட்டு கைதிகள் வெளியேவிடப்பட்டனர்; பாடசாலைகள், அரச கட்டடங்கள் எரித்துதரைமட்டமாக்கப்பட்டன; வங்கிகள் சூறையாடப்பட்டன.

பொஸ்னியாவில் ஏற்பட்ட அனுபவம் காரணமாக அமெரிக்காவும் மற்றும் மேற்கு நாடுகளும் தலை நகர் ரிறானாவில் இருந்து வெளிநாட்டுப் பிரசைகளை அவசரமாக வெளியேற்ற ஆரம்பித்தன.

பெரீஷா பதவி விலகினாலும் உள்நாட்டுக் குழப்பம் அடங்குமா என்ற நிலைமை இருந்த சமயமே பெரீஷாவுடன் இணைந்து அவசரகால கூட்டரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு சோசலிஸ்ட் கட்சித் தலைவர் பாரொஸ் நானோ இணங்கிஇருந்தார்.

### அல்பேனியாவில் மீண்டும் அமைதி திரும்புமா?

இவ்வாரம் நடைபெற்றதேர்தலில் பாரொஸ் நானோவின் சோஷலிஸட் கட்சி வெற்றி பெற்றுள்ள போதிலும் அல்பேனியாவில் தொடர்ந்து அமைதி நிலவுமா என்பது சந்தேகமே.

இந்த ஆண்டு முற்பகுதியில் இடம்பெற்ற குழப்பங்களின் போது சூறையாடப்பட்ட சுமார் 5 லட்சம் தானியங்கித் துப்பாக்கிகள், கிரனேட்டுக்கள் இன்னும் பொது மக்கள் மற்றும் வன்முறைக் கும்பல்களின் கைகளிலேயே இருந்து வருகின்றன.

இந்த ஆயுதங்கள் மீண்டும் ஆட்சியாளரைச் சென்றடையும் வரை அல்பேனியாவில் நிலையான ஆட்சி சாத்தியப்படாது. ★

## பைஸா நகரத்து மர்மம்


உலகின் கவனத்தை ஈர்க்கும் இத்தாலியின் பைஸா நகரத்து மர்மக் கோபுரம், விடைகாண முடியாத பல கேள்விகளை — இன்றல்ல — நேற்றல்ல — கடந்த சில நூற்றாண்டுகளாகவே எழுப்பிக் கொண்டிருக்கிறது.

மெல்ல மெல்லச் சாயும் இதன் மர்மமோ எவருக்கும் புரிவதாக இல்லை.

காரணத்தைக் கண்டு பிடிக்கிறேன்; கட்டடத்தை நிமிர்த்துகிறேன்; சாய்தலைத் தடுக்கிறேன் — என்றெல்லாம் கங்கணம் கட்டிக் கொண்டு பைஸா நகரத்துக்கு படையெடுத்தோர் எத்தனை பேர்? பைத்தியங்கள் முதலாகப் படித்தவர் ஈறாக ஆலோசனை கூறக்கூற இத்தாலிய அரசு தலையைப் பிய்க்க வேண்டிய நிலை. எவராலும் அதன் சாயும் உறுதியை உடைக்கவும் முடியவில்லை; மர்மத்தைத் துலக்கவும் இயலவில்லை.

ஒரு வேளை இந்த மர்மத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டால்— சாய்தல் தடுக்கப்பட்டோ, கட்டடம் நிமிர்த்தப்பட்டோ விட்டால் இத்தாலிக்கு ஆண்டுதோறும் வருகை தரும் சுமார் ஐம்பது லட்சத்துக்கு மேற்பட்ட உல்லாசப் பயணிகளின் இலக்கு என்னாவது? உலகம் இவ்வதிசயத்தை இழந்து விடக் கூடாது.

ஆயிரம் அடிக்கும் மேற்பட்ட பலமாடிக் கட்டடங்களைக் கொண்ட நவீன உலகில், இந்த 175 அடி மட்டுமே உயரமான கோபுரம் பற்றிக் கேள்விப்படாதோரே இல்லை எனலாம். கி. பி. 1200 களில் இருந்து மெல்லச் சாயும் இதன் உச்சி தற்போது நிலைக்குத்திலிருந்து 15 அடிவரை விலகிய நிலையில் மேலும் தெற்கு நோக்கி மெல்ல மெல்லச் சாய்கிறது. இதை எழுதிக்கொண்டிருக்கும் போது இதன் நிலை என்ன? இன்றிரவே இது விழுந்து விடுமா? இல்லை இன்னும் பல நூற்றாண்டுகள் இது நிலைக்குமா என்பதை எவராலும் எதிர்வு கூற இயல



வில்லை. இதற்கு விடை காணச் சந்திரனை எட்டிவிட்ட விஞ்ஞானமும் தவறிவிட்டது.

கோபுர உச்சியில் மூன்றரைத் தொன் எடையுள்ள ஒரு மணி உட்பட ஏழு பாரிய மணிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த மணிகளின் அதிர்வினால் சாய்தல் அதிகரிக்கலாம் என்ற அச்சத்தால் மணி அடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. அப்பிரதேசத்துக்கு கனரக வாகனங்கள் செல்ல அனுமதி கிடையாது. இதன் அருகே செல்ல அஞ்சுபவர்களும் உண்டு. 294 படிக்கட்டுகள் வழியாக உச்சிவரை ஏறி இறங்குபவர்களும் உண்டு.

இதற்கான அடிக்கல் 1173 இல் நடப்பட்டது. இதன் கட்டுமானப்பணிகளை பிரபல கட்டடக் கலைஞனான பொனானோ பைஸானோ (Bonanno Pisano) என்பவன் 1185 வரை மேற்கொண்டான். மூன்றரை மாடிகள் பூர்த்தியான நிலையில் இது கைவிடப்பட்டது. காரணம் தெரிய வில்லை.

கட்டடம் சாய்தலைக் கண்டு பைஸானோ ஓடிவிட்டானா? - இல்லை, அவன் இறந்து விட்டதால் வேலைகள் கைவிடப்பட்டனவா? அல்லது இதை ஒரு சாயும் அதிசயமாகவே அவன் கட்டி எழுப்பினானா? இக் கேள்விகளுக்கு விடை —மர்மமாகவே உள்ளது. தொண்ணூறுஆண்டுகள் கைவிடப் பட்டிருந்த கட்டட வேலைகள் மீண்டும் சூடுபிடிக்கின்றன. மேலும் மூன்றரை மாடிகள் முடிக்கப்பட்டு ஏழுமாடிக் கட்டடமாக அது உயர்ந்துவிட்டது. மீண்டும் எண்பது ஆண்டுகள் அப்படியே முடங்கிக் கிடக்கிறது கோபுரம்.

எட்டாவது மாடி கட்டப்பட்டு மணிகள் பொருத்தப்பட்டு இதன் வேலைகள்

(XII ஆம் பக்கம் பர்க்க)

-றஜி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஜெயலலிதாவும் சசிகலாவும் உடன் பிறவாச் சகோதரிகளாகினர்!

பரஸ்பரப் பாதுகாப்புக்காகப் பிரிந்தவர்கள் — பிரிந்தவர்கள் போல நடித்தவர்கள் — மீண்டும் தமது பாதுகாப்புக்காக ஒன்று கூடிவிட்டார்கள் ஜெயலலிதாவுக்கு மீண்டும் சசிகலா 'உடன் பிறவா சகோதரி' ஆகிவிட்டார்.

ஊழல் பெருச்சாளிகள் மீளவும் ஒரு வளையில் கூடிவிட்டன என்று தான் பெரும்பாலான தமிழக மக்கள் நினைக்கின்றார்கள்.

ஆனால் புலன்விசாரணையாளர்கள் விரித்துள்ள வலையில் இரு பெருச்சாளி


ஜெயலலிதா

களும் சிக்குமா என்பது போகப் போகத்தான் தெரியும்.

கடந்த பொதுத்தேர்தலில் அ. தி. மு. க. படுதோல்வியடைந்ததை அடுத்து சீறி எழுந்த மக்கள் கருத்து, தொண்டர் ஆவேசம் ஆகியவற்றுக்கு மத்தியில் — 'கட்சியா, சசிகலாவா என்ற கேள்வி எழுந்திருப்பதால், கட்சியின் நலனுக்காக சசிகலாவுடனான உறவுவைத் துண்டித்துக் கொள்கிறேன்' —என்று 1996 ஒகஸ்டில் அறிவித்தவர் ஜெயலலிதா.

ஆனால் ஒரு வருடகாலத்துக்குள் அந்த அறிவிப்பு எல்லாம் புஸ்வாணமாகிவிட்டது.

### 11 மாதங்கள் காவலில் இருந்த சசிகலா

அந்நிய செலாவணி மோசடி, முறையற்ற வழியில் அளவுக்கு மீறிய சொத்து சேர்த்தமை ஆகிய வழக்குகள் தொடர்பாக 11 மாதங்கள் காவலில் இருந்த சசிகலா அந்த 11 மாதகாலத்தில் அரைவாசியை சென்னை அப்பலோ மருத்துவ மனையில் சொகுசுக் கட்டிலில் சயனித்தபடிதான் கழித்தார்.

இன்னமும் கண்டுபிடிக்கப்படாத வியாதியைக் கண்டறியவும் அதற்கு சிகிச்சை பெறவும் ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப் பட்டிருப்பதாக நீதிமன்றத்தில் அவ்வப்போது காரணம் கூறப்பட்டது.

சசிகலா நீதிமன்றத்துக்கு வரும் போதெல்லாம் அம்புலன்ஸில் ஸ்ரெச்சரில் படுத்தபடிதான் வந்தார்.

ஆனால், அதிசயம் பாருங்கள்!

மே 28 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டு ஒரு வராத்தில் ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' ஆனார்; ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் மாளிகைக்குள் புகுந்தும் விட்டார்.

### ஜெயலலிதா வரவேற்பு

புன்னகை பூத்த முகத்துடன் ஜெயலலிதா வாசலுக்கே வந்து சசிகலாவை வரவேற்றார். ஆராத்தி எடுத்து, சசிகலா பூரண குணமடைய யாகங்களை நடத்தி, வரவேற்பு ஒரே தடதடல் தான். சசிகலாவுக்கு பிடித்த பால்பாயசம் கூடத் தயாரிக்கப்பட்டதாம்.

சசிகலாவை மீண்டும் சேர்த்துக் கொண்டது குறித்து ஜெயலலிதா கருத்து வெளியிட்டார்.

''சசிகலா என்னுடன் இருப்பார்; ஆனால் சுதாகரனை மீண்டும் வளர்ப்பு மகனாக ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

''ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த சசிகலா இப்போது என்னுடன் தங்கியுள்ளார். அவர் எப்போதும் என்னுடன்தான் இருப்பார். அவரின் உடல்நிலைமை இப்போது மோசமாக உள்ளது. அவருக்கு தீவிர சிகிச்சை அளிப்பது என்னுடைய கடமை. அதைச் செய்கிறேன். கட்சியில் அவருக்குப் பதவி தரப்படுமா என்ற கேள்வி இப்போது தேவையில்லாதது.

''இடையில் சசிகலா சில காலம் என்னை விட்டுப் பிரிந்த போது இருந்த சூழ்நிலை வேறு. இப்போதைய சூழ் நிலை வேறு.

''ஒவ்வொருவருக்கும் தாய், கணவர், குழந்தை, நண்பர் என்று ஏதாவது ஒரு வடிவத்தில் உணர்வு பூர்வ பந்தம் தேவைப்படுகின்றது. நானும் அதற்கு விதிவிலக்கல்ல''—என்கின்றார் ஜெயலலிதா.

ரின் திருகுதாளங்களை — ஊழல்களை — அக்குவேறு ஆணிவேறாக அறிந்தவர் அந்த ஊழல்களில் பங்கெடுத்த சசிகலா. ஜெயலலிதாவின் நிதி, சொத்துக்கள் போன்றவை வேறு சசிகலாவிடம் உள்ளன. எனவே சசிகலாவைப் பகைத்துக் கொண்டால் ஜெயலலிதாவுக்குத்தான் ஆபத்து.

### பினாமிகள்

அதுமட்டுமல்ல; தமிழக அரசும் சசிகலா அண்ட் கோவை ஜெயலலிதாவின்


சசிகலா

'பினாமி'களாகத்தான் கருதுகின்றது.

எனவே ஜெயலலிதாவைப் பொறுத்தவரை சசிகலாவைப் பகைத்துக் கொள்வது கட்சித் தொண்டர்களைப் பகைத்துக் கொள்வதை விட ஆபத்தானதாகும்.

இப்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளை — சட்டச் சிக்கல்களை — சமாளிப்பதற்கு சசிகலாவைத் தள்ளி வைக்காமல் சேர்த்துக் கொள்வோம். சட்டக் கெடுபிடிகளில் இருந்து தப்பிய பின்னர், ஏதேனும் 'ஸ்டண்ட்' அடித்து தொண்டர்களை மீண்டும் தம்பக்கம் இழுத்துக் கைக்குள் போட்டு விடலாம் என ஜெயலலிதா கருதுகின்றாராம்,

அ.தி.மு.க. தொண்டர்கள் ஜெயலலிதாவைத் தொடர்ந்தும் ஜெயலலிதாம்பிகையாக வணங்கக் கூடும். ஆனால் சசிகலா விடயத்தில் ஜெயலலிதா அடிக்கும் அந்தர் பல்டிகளை தமிழக மக்கள் ஏற்பார்களா என்பது சந்தேகமே. ★




**முறையற்ற வழியில் சொத்துச் சேர்த்த ஒரு வழக்கில் மட்டும் - சாட்சியங்கள், ஆவணங்கள் அடங்கிய - 15 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட- குற்றப்பத்திரிகை நீதிமன்றத்தில் வைத்து ஜெயலலிதாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தக் குற்றப் பத்திரிகையை ஒன்றாக அடுக்கினால் அதன் உயரம் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் பல இடங்களில் அவருக்காக வைக்கப்பட்ட இராட்சத சைஸ் 'கட் அவுட்டு' களின் உயரத்தை விஞ்சி விடும் என்று கேலி செய்கின்றார் இந்தக் கேலிச் சித்திரக்காரர்.**

''உணர்வு பூர்வ காரணங்களைத் தவிர, அவருக்கு சசிகலாவை மீண்டும் சேர்த்துக் கொள்ள பணம் மற்றும் சொத்துப் போன்ற காரணங்களும் உள்ளன'' — என்கின்றார் ஜெயலலிதா அணியை விட்டு அண்மையில் பிரிந்த திருநாவுக்கரசு.

### ஏன் சேர்த்தார்?

இவ்வளவு எதிர்ப்புகள் — சிக்கல்கள்— அழுத்தங்கள் — கெட்ட பெயர் ஆகியவற்றுக்கு மத்தியில் சசிகலாவை ஜெயலலிதா ஏன் மீண்டும் சேர்த்துக் கொண்டார்?

ஜெயலலிதாவை — அவ

சசிகலா அண்ட் கோவிடம் உள்ள பொக்கிஷங்கள், சொத்துக்கள் ஜெயலலிதாவுக்குச் சொந்தமானவையே எனக் கருதப்படுகின்றது.

எனவே, ஜெயலலிதாவை சசிகலா கம்பனியின் உதவியுடன்தான் காப்பாற்ற முடியும்.

சசிகலாவை ஜெயலலிதா பகைத்துக் கொண்டால் — அதனால் சீற்றமுற்று சசிகலா அரசுத் தரப்புக்கு ஆதரவாக — அப்ரூவராக — மாறிவிட்டால், ஆண்டவனே வந்தாலும் ஜெயலலிதாவை காப்பாற்ற முடியாது.

## பைஸா....

(XI ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூர்த்தி அடைய சுமார் 200 ஆண்டுகள் பிடித்திருக்கின்றன. இதன் அத்திவாரம் பைசா நகரின் தூர்க்கப்பட்ட குளம் ஒன்றில் சதுப்புமண் பரப்பில் அமைந்து விட்டதாகக் கூறப்படுகிறது. இதன் தள அறைச் சுவர்கள் 13 அடி தடிப்பானவை. கட்டடத்தின் எடை 15ஆயிரம் தொன் வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மனிதர்களும் சரி, இயற்கையும் சரி இதற்குக் கொடுத்த சோதனைகள் கொஞ்சநஞ்சமல்ல; 1835 இலும் 1939 இலும் இரு பாரிய அத்தி வார திருத்த முயற்சிகள், யுத்த காலங்களில் இச்சூழலில் வீசப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட குண்டுகள், கணக்கில்லா எறிகணைவீச்சுக்கள், சுமார் 100 வரையானசிறிய —பெரிய பூமி அதிர்வுகள், மேலும் பல இயற்கையின் சீற்றங்கள் எல்லாவற்றுக்கும் ஈடுகொடுத்து அதன் சாயும் உறுதி தளராமல் நிற்கிறது இவ்வதிசய மணிக் கோபுரம்.

அடியிலே தண்ணீரைப் பாய்ச்சி ஐஸ்கட்டியாக உறையச் செய்தால் என்ன? சீமெந்துக்களியை பம்பண்ணி உறுதி செய்தால் என்ன? இயந்திரங்களின் உதவியுடன் கேபிள்களால் இழுத்துநிமிர்த்தினால் என்ன? பாரிய பலூன்களின் உதவியுடன் உயரக் கிளப்பி நிமிர்த்திவிட்டால் என்ன?— பாரியபாரம் உயர்த்திகளின் (Jack)உதவியுடன் சீர் செய்தால் என்ன? —என்றெல்லாம் பலப்பல ஆலோசனைகளைப் பலரும் முன்வைக்கிறார்கள். எதை முன்னெடுப்பது? முயற்சி முடிவு காணுமா? இல்லை கட்டடத்தைமுடித்துவிடுமா? —என்ற அச்சங்கள் எழுகின்றன.

கடிகாரங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. காலம் உருண்டுகொண்டிருக்கின்றது. கோபுரமோ சாய்ந்து கொண்டிருக்கிறது. சாய்விலும் உண்டோர் உறுதி! பொறுமை இருந்தால் பொறுத்திருந்து பார்ப்போம்.

## இந்த வார...

(X ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ஸ்தானத்தில் பணமுடக்கம் அல்லது பணத்தால் பிரச்சினைகள் ஏற்படச் செய்யும்.**

**மீனம்: நீங்கள் நடுநிலை நாயகர். எதையும் சமாளித் கொள்ளல் வேண்டும். தொழில் ஸ்தானத்தில் பொறுமையாக இருந்து பொருளில் நிதானமாக இருக்கவும். காணி, வீடு சம்பந்தமாகச் செலவுகள் அல்லது பேச்சுவார்த்தைகள் ஏற்பட இடமுண்டு, மனைவி மக்களுக்காக அதிக செலவு செய்வீர்கள். கைகாலில் உளைவு அல்லது காயங்கள் ஏற்படச் செய்யும். போக்குவரத்தில் கவனமாக இருக்கவும்.**

## பக்தையின் பாதுகையை...

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

''பரவாயில்லை கொடு!'' என்று வாங்கிக் கொண்டார் கிருஷ்ணர். திரௌபதி மெல்ல உள்ளே சென்றாள். படுத்திருந்த பிதாமகரின் கால்களைத் தொட்டு வணங்கினாள்.

தனது பாதங்களை ஓர் இளம் பெண் தொடுவதை உணர்ந்ததும் கூசிப்போய் எழுந்திருந்தார் பீஷ்மர். தொட்டது யாராயினும் அதற்குத் தான் செய்யும் பிராயச்சித்தமாக அவளை ஆசீர்வாதம் செய்து வாழ்த்தி விடுவதே மேல் என்று எண்ணினார். ''தீர்க்க சுமங்கலி பவ!'' என்று வாயார வாழ்த்தினார். அந்தப் பெண் முகத்திரையை விலக்கியதும் அவள் திரௌபதி என்பதைப் புரிந்து கொண்டார். தான் ஆசி கூறியதன் முழு விளைவையும் உடனே புரிந்து கொண்டார் பீஷ்மர். இப்படி ஒரு யுக்தியைக் கையாள திரௌபதியைத் தூண்டியது யாராக இருக்கும் என்று யோசித்தார்,

''இரவு வேளையில் தனியே வந்திருக்கிறாயே? உனக்குத் துணையாக வந்திருப்பது யார்?'' — என்று கேட்டார் பீஷ்மர்.

''பிதாமகரே! ஸ்ரீகிருஷ்ணர் துணையுடன்தான் தங்களைப் பார்க்க வந்தேன். அவர் வெளியே காத்திருக்கிறார்'' என்றாள் திரௌபதி.

''பகவான் எனது பாசறைக்கு வந்து வெளியே காத்திருப்பதா? அபசாரம்!'' என்று உடனே எழுந்து வாசலுக்கு விரைந்தார் பீஷ்மர். அங்கே கிருஷ்ணர் திரௌபதியின் கால் செருப்புகளைச் சுமந்து கொண்டு நிற்பதைக் கண்டார்.

''சுவாமி! இது என்ன கோலம்? தாங்கள் திரௌபதியின் கால்செருப்பைத் தாங்கி நிற்கலாமா? — என்று கேட்டார்.

''பீஷ்மரே! திரௌபதி இங்கே வந்தது தனது மாங்கல்யம் நிலைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ளத்தான். பிரார்த்தனையைச் செய்யத் தனது துணையை நாடுபவர்களுக்கு இறைவன் எப்போதும், எந்த விதமாகவும் உதவத் தயாராக இருக்கிறான். அதை உணர்த்தவே நான் எனது பக்தையின் பாதுகைகளையும் தாங்கி நின்றேன்!'' — என்றார் கிருஷ்ணன்.

- பகவான் சத்திய சாயி பாபா கூறிய மகாபாரதக் கதைகளில் இருந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org